1261

திருவாசகத் தேன்

மணிவாசகப் பெருமான்

பதிப்பு ஆசிரியர்:

ராய. சொ.

திருவாசகத் தேன்

மணிவாசகப் பெருமான்

பதிப்பு ஆசிரியர்: ராய. சொ.

விலை ரூபாய் இரண்டரை

கிடைக்கும் இடம் :

பாரதி பிக்சர் பாலெஸ்

காரைக்குடி

மதராஸ் ரிப்பன் பிரஸ், ராமச்சந்திரபுரம்

திரு வாசகத் தேன்

நூல் முகம்

தமிழ் மொழியில் இறைவனைப் பற்றிக் கூறும் பக்திப் பாடல்கள் ஏராளமாக—பல்லாயிரக் கணக்காக இருக்கின்றன. அவை எல்லா வற்றுள்ளும் தலைசிறந்தது திருவாசகம்.

தித்திப்புப் பொருள்களுள் சிறந்து விளங்குவது தேன். திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமானுக்குத் தேனில் மிகப் பிரியம். "தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமா"னைச் சுவைத்துச் சுவைத்து மகிழ்ந்து மகிழ்ந்து, "அந்தமிலா ஆனந்தம்" பெற்றார் அடிகள்.

தேன் என்பது மலர்களில் திரட்டி எடுக்கப் பெறும் சாரப்பொருள் அல்லவா. திருவாசகத்தில் திரட்டி எடுக்கப் பெற்ற பாடல்கள் கொண்ட இந் நூலுக்குத் "திரு வாசகத் தேன்" என்று பெயர் சூட்ட வேண்டும் என்பது திரு வருளின் திரு உள்ளம்.

திரு வாசகம் அறு நூற்று ஐம்பத்து எட்டுப் பாடல் கொண்டது. அதில் மூந் நூறு பாசுரம் பெற்று இந் நூல் விளங்குகிறது. இது கொண்டு மற்றப் பாக்கள் குறைவு உடையன என இம்மியும் கருதி விடல் வேண்டாம். மலைத்து விடாமல் படித்து நுகர்வதற்காகப் பகுதி யாக்கி யிருக்கிறது.

திருவாசகத் தேனைப் பருகி நுகர்ந்து இன்பம் காணாத ஒருவனோ அல்லது ஒருத்தியோ தமிழ் மகன், அன்றித் தமிழ் மகள் என்று சொல்லிக் கொள்ளும் உரிமை யற்றவராவர். வேறு எம் மொழியிலும் இல்லாத பெரும் சிறப்புடைய பொக்கிஷம் திருவாசகம்.

எளிமையாகப் படித்து அறிந்து சுவைக்கத் தக்க திருவாசகம், தமிழ்ப் புணரியல் விதியில் மாட்டிக் கொண்டு படிப்போரின் பற்களை உடைப்பதைத் தடுக்க, எவ்வளவு இயலுமோ அவ்வளவு பதம் பிரித்து இந் நூலில் பாக்கள் அச்சிடப் பெற்றிருக்கின்றன. நாதன்றாள், ஒண்ணித்தில நகையாய், சொற்கழிவு, நாடோறும், கன்னுரித்தென்ன, முத்து நற்றாமம், கோற்றேன், என்றலை, அணங்கொடணி தில்லை என்ற சேர்க்கைகளை நாதன் தாள், ஒள் நித்தில நகையாய், சொற்கு அழிவு, நாள் தோறும், கல் நார் உரித்து என்ன, முத்து நல் தாமம், கோல் தேன், என் தலை, அணங்கொடு அணி தில்லை என்று பிரித்து விட்டால் எவ்வளவு எளிதாகி விடுகின்றது. பிரிப்பது பொருளைப் பெரிதும் உணர்த்திவிடும். அதற்கு மேல் குறிப்பு உரையும் விளக்கமும் அடியில் கொடுக்கப் பட்டிருக்கின்றன.

மாணிக்க வாசகர் வெறும் பக்திமான் மட்டும் அல்ல. சிறந்த புலமை நிரம்பப்பெற்றவர் அவர் என்பதைத் திருவாசகம் தெளிவாகக்காட்டி நிற்கின்றது. அளவுக்கு உட்பட்ட — எழுத்து எண்ணிப் பாடவேண்டிய கட்டளைக் கலித்துறைப்

பாக்களெல்லாம் திருவாசகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. எனவே யாப்பு வகையில் திருவாசகம் தவறியிருக்கிறது எனக்கருவது அறியாமை. சிற்சில இடங்களில் யாப்புச் சிதைவு காணப்படுவது ஏடு பார்த்து எழுதுதல் முதலியவற்றால் நேர்ந்த குற்றம் எனக்கொண்டு அவ்வழுவைப் போக்கத் துணியத்தான் வேண்டும்.

இங்குச் சான்றாக சிலவற்றைப் பார்க்கலாம். "அவன் அருளாலே அவன்தாள் வணங்கி, சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை" என்பது யாப்புப் பிழை. இது கலி வெண்பா. வெண்தளை தவறக் கூடாது. வணங்கி என்பது புளிமா. அடுத்த சீராகிய சிந்தை என்பது நேர் அசையில் தொடங்குகிறது. வெண்பா இலக்கணப்படி மா முன் நேர் வரக்கூடாது. எனவே இங்கு ஒரு சிறு மாறுதல் செய்தால் சரியாகிவிடுகிறது, ஒரு 'ஏ' சேர்த்தால் போதும். 'வணங்கியே' என்று இருப்பதில் எவ்விதக் குறைபாடும் இல்லை.

"நான் ஆர் என் உள்ளம் ஆர்" என்ற பாட்டு கலிப்பா ஆகும். கலிப்பா நான்கு சீர்கள் கொண்டு இருத்தல் வேண்டும். இப்பாட்டில் பின் மூன்று அடிகளும் சரியாக நான்கு சீர்கள் கொண்டிருக்க முதல் அடி, "நானார்என் உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்" என ஐந்து சீர் கொண்டு நீள்கின்றது. இதனை, "நான் ஆர்என் உள்ளம் ஆர் ஞானம்ஆர் யார்அறிவார்" என மாற்றுவதில் கருத்துச் சிதையவில்லை, பாட்டுக் கட்டுச் செம்மையாகி விடுகிறது. "உடையாள் உன்றன்

நடுவிருக்கும்" என்ற பாவில் மூன்ருவது வரி சிதைந்து காணப்படுகிறது. இது அறு சீர் விருத்தம். அவ் அடியைத் திருத்தினல் அன்றிப் பாட்டைக் கட்டுக்குள் அடக்க முடியாது. அதிகமாக ஏதும் வேண்டாம். சில மாற்றமே. "அடியார் நடுவுள் இருக்கும்அருளைப்புரி யாய்பொன் அம்பலத்துஎம்" என்பதை

"அடியார் நடுஉள் இருந்திடுநல்
அருளைப் புரிபொன் அம்பலத்துஎம்"

எனச் செய்தால் சரியாகி விடுகிறது.

இப்படியாகச் சில இன்றியமையாத் திருத்தங்கள் யாப்புக் குறையை நிரப்பும் அளவுக்கு மட்டும் இந் நூலில் செய்யப் பெற்றிருக்கின்றன. கருத்து மாற்றம் எதுவுமே இல்லை. இதற்குப் பெரியார் பொறுத்தருள்வாராக.

பட்டினத்தடிகள், சிவப்பிரகாச சுவாமிகள், தாயுமானப் பெரியார், இராமலிங்க வள்ளல் முதலிய ஞானிகள் பலரால் பாராட்டி அருந்தப் பெற்ற மணிவாசக வள்ளல் வார்த்த திருவாசகத் தேனைக் குடித்துக் களித்துத் தமிழ் மக்கள் "அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்"று உய்யவேண்டும் என்பதே எளியேன் பேரவா.

அமராவதிபுதூர்
காந்தி ஆண்டு எக
ஆவணி கஉ

ராய. சொ.

உ

சிவமயம்

CANE P.

திருவாசகத் தேன்

சிவ புராணம்

கலி வெண்பா

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க!

சிவபுராணம்: சிவபெருமானின் பழமை.

வரி—1. நம: வணக்கம். சிவாய: சிவனுக்கு. நமச்சிவாய வாழ்க என்பதற்கு 'நம சிவாய' என்னும், திரு ஐந்து எழுத்து என்றும் நிலைபெறுக என்பதும் பொருள். நாதன்: தலைவன். தாள்: திருவடி.

3. கோகழி: பெருந்துறை. அதாவது ஆவுடையார்கோவில்.

4. ஆகமம்: இறையைப்பற்றிக் கூறும் நூல். அண்ணித்தல்: நெருங்குதல்.

5. ஏகம்: ஒன்று. அநேகம்: பல.

வேகம் கெடுத்தாண்ட வேந்தன்அடி வெல்க!
பிறப்புஅறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க!

ஈசன் அடிபோற்றி! எந்தை அடிபோற்றி!
தேசன் அடிபோற்றி! சிவன்சே வடிபோற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்புஅறுக்கும் மன்னன் அடிபோற்றி!
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி!

---

6. வேகம்: ஒன்றைவிட்டு மற்ருென்றைப் பற்றும் மனத்தின் விரைவு.

7. பிஞ்ஞகன்: தலை அலங்காரம் உடையவன் - சிவ பெருமான் இள நிலவு, குளிர் கங்கை முதலியவற்றைத் தலையிலே அழகாகச் சூடியிருக்கின்ருன். - "நீரோடு கூவிளமும் நிலா மதியும் வெள் எருக்கும் நிறைந்த கொன்றைத் தாரோடு தண்கரந்தை சடைக்கு அணிந்த தத்துவனுர்" என்ருர் ஞானசம்பந்தப் பிள்ளையார். பெய் கழல்: வீரச் சிலம்பு அணிந்த திருவடி.

8. புறத்தார்: நலத்திற்குப் புறம்பானவர். சேயோன்: தூரத்தே உள்ளவன். பூ கழல்: மலர் போன்ற திருவடி.

9. கரம் குவிவார்: கைகூப்பித் தொழுகின்றவர்.

10. சிரம் குவிவார்: தலை வணங்குபவர். ஓங்குவித்தல்: உயரச் செய்தல்.

11. போற்றி: வணக்கம். எந்தை: எம் தந்தை.

12. தேசன்: ஒளி வடிவினன்.

13. நேயம்: அன்பு. நிமலன்: அழுக்கு அற்றவன்.

14. மாயப் பிறப்பு: நிலையாமையை உடைய பிறவி.

ஆராத இன்பம் அருளுமலை போற்றி!
சிவன்அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அரு ளாலே அவன்தாள் வணங்கியே
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்;

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்குஒளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழும்ஆறு ஒன்றுஅறியேன்;

புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

16. ஆராத: தெவிட்டாத.

20. முந்தை வினை: பழ வினை. ஓய: கெட.

21. கண்நுதலான்: நெற்றிக் கண் படைத்தவன்.

22. எண்ணுதற்கு எட்டா: நினைக்க முடியாத. எழில்: அழகு.

24. எண் இறந்து: அளவு கடந்து.

25. புகழும் ஆறு: சிறப்பித்துச் சொல்லும் வழி.

27. விருகம்: விலங்கு.

28. கணம்: கூட்டம்.

29. அசுரர்: அரக்கர்.

30. தாவரம்: அசையாப் பொருள். சங்கமம்: அசையும் பொருள்.

எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன் எம்பெருமான்!
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்!
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரம் ஆய்நின்ற
மெய்யா! விமலா! விடைப்பாகா! வேதங்கள்,
"ஐயா!" எனஓங்கி ஆழ்ந்துஅகன்ற நுண்ணியனே!

வெய்யாய்! தணியாய்! இயமானன் ஆம்விமலா!
பொய்யா யினஎல்லாம் போயகல வந்துஅருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்அறிவே!

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய்! காப்பாய்! அழிப்பாய்! அருள்தருவாய்!

32. மெய்யே: உண்மையாகவே. வீடு: விடுதலை.

34. விமலன்: குற்றம்அற்றவன். விடைப்பாகன்: ஏறு ஊர்ந்த செல்வன்.

35. ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியன்: நீண்டவன்; ஆழமானவன்; அகலம் பெற்றவன்; நுணுக்கம் கொண்டவன்.

36. வெய்யாய்: வெம்மை உடையவனே. தணியாய்: குளிர்ச்சி கொண்டவனே. இயமானன்: உயிர்.

37. போய் அகல: சென்று நீங்க.

38. மெய்ஞ்ஞானம்: உண்மை அறிவு. மிளிர்கின்ற: விளங்குகின்ற. சுடர்: ஒளி.

39. எஞ்ஞானம்: எவ்வித அறிவும்.

40. அஞ்ஞானம்: அறியாமை. அகல்வித்தல்: அகன்று ஓடச் செய்தல்.

41. ஆக்கம்: உண்டாதல். அளவு: காலவரையறை. இறுதி: முடிவு.

போக்குவாய் என்னை ; புகுவிப்பாய் நின்தொழும்பின் ;
நாற்றத்தின் நேரியாய் ! சேயாய் ! நணியானே !
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே !

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்துஅடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான் !
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் ! விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான்! வல்வினையேன் தன்னை,

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
புறந்தோல்போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

43. போக்குவாய் என்னை : நான் எனது என்பவற்றைப் போகச் செய்வாய். புகுவிப்பாய் நின் தொழும்பில் : உன் தொண்டிலே புகுத்துவாய்.

44. நாற்றத்தின் நேரியாய் : பூவில் மணம் போல அன்பர் உள்ளத்திலே பொருந்தியிருப்பவனே. சேயாய் : அன்பு அற்றவர்க்குத் தூரத்தே இருப்பவனே! சேய்மை : தூரம். நணியானே : அன்பர்க்குக் கிட்ட நெருங்கியவனே. நணிமை : சமீபம்.

45. மாற்றம் : சொல். மனம் : உள்ள நினைவு.

46. கன்னல் : கரும்பு ரசம்.

51. அறம் பாவம் : நல்வினை தீவினை.

54. ஒன்பது வாயில் குடில் : ஒன்பது வழிகளை உடைய உடல்.

55. மலங்க : கலங்க.

விலங்கும் மனத்தால் விமலா ! உனக்குக்
கலந்தஅன்பு ஆகிக் கசிந்துஉள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே !
மாசற்ற சோதி ! மலர்ந்த மலர்ச்சுடரே !
தேசனே ! தேனார் அமுதே ! சிவபுரனே !
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே !
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேர்ஆறே !
ஆரா அமுதே ! அளவிலாப் பெம்மானே !
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே !
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே !
இன்பமும் துன்பமும் இல்லானே ! உள்ளானே !

56. விலங்குதல் : விலக்குதல்.

61. தயாவான : அருள் வடிவான.

63. தேசனே : பிரகாசமானவனே. தேன் ஆர் அமுது : தேன் விரவிய அமிழ்தம்.

64. பாரித்தல் : வளரச்செய்தல். ஆரியன் : மேலானவன்.

66. பேராது : நீங்காமல்.

68. ஓராதார் : ஆராய்ச்சியற்றவர். ஒளிக்கும் : மறைந்துகொள்ளும்.

69. நீராய் உருக்கி : நீராக உருகச்செய்து. ஆர் உயிர் : நிறைந்த உயிர்.

அன்பருக்கு அன்பனே! யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே! துன்இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம் நடுவாகி அல்லானே!
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே! நுணுக்கரிய நுண்உணர்வே!
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே!
காக்கும்எம் காவலனே! காண்புஅரிய பேர்ஒளியே!
ஆற்றுஇன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்துஅறிவாம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்றான உண்ஆர் அமுதே! உடையானே!

72. துன் இருள்: நிறைந்த இருள்.

73. அந்தம்: இறுதி.

74. ஈர்த்து: இழுத்து.

75. கூர்த்த: கூர்மையான.

77. போக்கு: இறப்பு. வரவு: பிறப்பு. புணர்வு: சேர்ந்து இருத்தல்.

79. அத்தன்: தந்தை.

80. சொல்லாத: சொல்லமுடியாத.

81. மாற்றம் ஆம் வையகம்: மாறுபாடு உடைய உலகம்.

82. தேற்றன்: தெளிவானவன்.

83. உண் ஆர் அமுது: உண்ணத்தக்க நிறைந்த அமிழ்து.

வேற்று விகார விடக்குடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனேயோ! என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே!
நள்இருளில் நட்டம் பயின்றாடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!
அல்லல் பிறவி அறுப்பானே! ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின்; உள்ளார் சிவன்அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

84. வேற்று விகாரம்: வேறு வேறு திரிபுகள். விடக்கு: தசை.

85. ஆற்றேன்: தாங்கமாட்டேன். அரனே!: சிவ பெருமானே.

87. மீட்டு: திரும்பவும்.

88. கள்ளப் புலம்: வஞ்சக ஐம்புலன். குரம்பை: உடம்பு. கட்டு அழித்தல்: அடியோடு தொலைத்தல்.

89 நள் இருள்: நடுச் சாமம். நட்டம்: நடனம்.

90. தில்லை: சிதம்பரம். கூத்தன்: ஆடுகின்றவன். தென்பாண்டி நாடு: தமிழ் நாட்டின் தெற்கே உள்ள பாண்டிய நாடு.

91. அல்லல்: துன்பம்.

94, 95. செல்வர் சிவபுரத்தின்: சிவபெருமான் நகரம் செல்வார்கள். பல்லோரும் பணிந்து ஏத்தச் சிவன் அடிக்கீழ் உள்ளார்: பலரும் தாழ்ந்து வணங்கச் சிவபிரான் திருவடி நீழலில் என்றும் இருப்பர்.

திருச் சதகம்

மெய் உணர்தல்

கட்டளைக் கலித்துறை

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து
உன்விரை யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பிஉள்ளம்
பொய்தான் தவிர்ந்துஉன்னைப் போற்றி
சயசய போற்றிஎன்னும்
கைதான் நெகிழ விடேன்உடை
யாய்என்னைக் கண்டுகொள்ளே. 2

கொள்ளேன் புரந்தரன் மால்அயன்
வாழ்வு ; குடிகெடினும்
நள்ளேன் நினது அடி யாரொடுஅல்
லால் ; நர கம்புகினும்

திருச் சதகம் : சதகம் என்பது நூறு பாடல் கொண்டது. திரு. சிறப்பு அடைமொழி.

மெய் உணர்தல் : உண்மைப் பொருளை உணர்ந்து கொள்ளல்.

பாட்டு—2. மெய் : உடம்பு. அரும்பி : மயிர்க்கூச்சு உற்று. விதிர்விதிர்த்து . நடுநடுங்கி. விரை : மணம் கழல் : திருவடி. ததும்பி : பெருக்கெடுத்து ஓடி. உள்ளம் வெதும்பி : மனம் வெம்மைப்பட்டு உருகி. தவிர்ந்து நீங்கி. சயசய : வெல்க வெல்க. கை : ஒழுக்கம். நெகிழ விடேன் : குலையவிடமாட்டேன். உடையாய் : எல்லாம் உடையவனே. கண்டு கொள் : பார்த்து ஏற்றுக்கொள்.

3. கொள்ளேன் : பெற்றுக்கொள்ள மாட்டேன். புரந்தரன் : இந்திரன். மால் : விஷ்ணு. அயன் : பிரமன். நள்ளேன் : நட்புப் பெறேன்.

எள்ளேன் திருவரு ளாலே
இருக்கப் பெறின்;இறைவா !
உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்
லாது ; எங்கள் உத்தமனே ! 3

பவன்எம் பிரான்பனி மாமதிக்
கண்ணிவிண் ணோர்பெருமான்
சிவன்எம் பிரான்என்னை ஆண்டுகொண்
டான்என் சிறுமைகண்டும்
அவன்எம் பிரான்என்ன நான் அடி
யேன்என்ன இப்பரிசே
புவன்எம் பிரான்தெரி யும்பரிசு
ஆவது இயம்புகவே. 4

புகவே தகேன்உனக்கு அன்பருள்
யான்என்பொல் லாமணியே !
தகவே எனைஉனக்கு ஆட்கொண்ட
தன்மை ; எப் புன்மையரை
மிகவே உயர்த்திவிண் ணோரைப்
பணித்தி ! அண் ணா! அமுதே !
நகவே தகும்எம் பிரான்என்னை
நீசெய்த நாடகமே. 5

3. எள்ளேன் : இழகமாட்டேன். உள்ளேன் : நினைக்க மாட்டேன்.

4. பவன் : உலகை உண்டாக்கியவன். பனி : குளிர்ச்சி. மா : பெருமையுள்ள. மதி : சந்திரன். கண்ணி : மாலை. விண்ணோர் : தேவர். பரிசு : தன்மை.

5. புகவே : புகுவதற்கு. தகேன் : தகுதியற்றவன். பொல்லாமணி : துளைக்கப்படாத ரத்தினம். தகவே : தகுதியுடையதே. எப்புன்மையரை: எவ்வளவு இழிந்தோரையும். பணித்தி: பணி செய்யச் செய்கின்றாய். நகவே தகும் : சிரிக்கத் தக்கதே.

அறிவு உறுத்தல்

தரவு கொச்சகக்கலிப்பா

நாடகத்தால் உன்அடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன் ;
ஆடகச்சீர் மணிக்குன்றே! இடையறா அன்புஉனக்குஎன்
ஊடகத்தே நின்றுஉருகத் தந்தருள்எம் உடையானே ! 6

யான்ஏதும் பிறப்புஅஞ்சேன் ; இறப்பதனுக்கு என்கடவேன் ;
வானேயும் பெறில்வேண்டேன்; மண்ஆள்வான் மதித்தும்இரேன்;
தேன்ஏயும் மலர்க்கொன்றைச் சிவனே!எம் பெருமான்எம்
மானே! உன் அருள்பெறும்நாள் என்றென்றே வருந்துவனே! 7

வருந்துவன்நின் மலர்ப்பாதம் அவைகாண்பான் ; நாயடியேன்,
இருந்தும்நல மலர்புனையேன் ; ஏத்தேன்நாத் தழும்புஏற ;
பொருந்தியபொற் சிலைகுனித்தாய் ! அருள்அமுதம் புரியாயேல்
வருந்துவன் அத் தமியேன்மற்று என்னேநான் ஆமாறே. 8

அறிவு உறுத்தல் : தெரியும்படி செய்தல்.

6. புகுந்திடுவான் : புகுவதற்கு. விரைகின்றேன் : அவசரப்படுகின்றேன். ஆடகம் : தங்கம். மணி : மாணிக்கம். ஊடு அகத்தே என்பதை, அகத்தின் ஊடே என மாற்றுக அகத்தின் ஊடு : மனத்தின் நடு. உடையானே : எம்மை ஆள் உடையவனே.

7. பிறப்பு அஞ்சேன் : பிறப்பதற்குப்பயப்படமாட்டேன். இறப்பதனுக்கு என் கடவேன் : இறப்பதற்கு என்ன செய்வேன். வானேயும் : விண்ணுலக அரச வாழ்வாயினும். ஏயும் : பொருந்திய.

8. இருந்தும் : உறுப்புக்கள் இருந்தும். புனையேன் : தொடுக்கமாட்டேன். பொற்சிலை : மேருமலை. குனித்தல் : வளைத்தல். அத்தமியேன் : அத்தகைய அடியேன். நான் ஆம் ஆறு : நான் உய்யும் வழி.

ஆமாறுஉன் திருவடிக்கே அகம்குழையேன்! அன்புஉருகேன்!
பூமாலை புனைந்துஏத்தேன்! புகழ்ந்துஉரையேன் புத்தேளிர்
கோமான்! நின் கோவில்தூகேன்! மெழுகேன் கூத்தாடேன்!
சாமாறே விரைகின்றேன்! சதுராலே சார்வானே! 9

வான்ஆகி மண்ஆகி வளியாகி ஒளியாகி
ஊன்ஆகி உயிர்ஆகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோன்ஆகி யான்எனதுஎன்று அவரவரைக் கூத்தாட்டு
வான்ஆகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே. 10

வேனில்வேள் மலர்க்கணைக்கும் வெண்நகைச்செவ் வாய்க்கரிய
பானல்ஆர் கண்ணியர்க்கும் பதைத்துஉருகும் பாழ்நெஞ்சே!
ஊனெலாம் நின்றுருகப் புகுந்துஆண்டான் இன்றுபோய்
வான்உளான் காணாய்நீ மாளாவாழ் கின்றாயே! 11

வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே! வல்வினைப்பட்டு
ஆழ்கின்றாய் ஆழாமல் காப்பானை ஏத்தாதே;
சூழ்கின்றாய் கேடுஉனக்கு; சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீஅவலக் கடலாய வெள்ளத்தே. 12

---

9. அகம் குழைதல்: மனம் நெகிழ்தல். அன்பு உருகுதல்: அன்புகாரணமாக உருகுதல். புத்தேளிர்: தேவர்கள். தூகேன்: பெருக்கமாட்டேன். சதுர்: திறமை.

10 வான்: ஆகாயம் வளி: காற்று. ஒளி: நெருப்பு. ஊன்: உடல். கூத்து ஆட்டுவான்: கூத்து ஆடச் செய்பவன்.

11. வேனில்: வசந்த காலம். வேள்: மன்மதன். மலர்க்கணை: பூ அம்பு. நகை: பல். கரிய: கருமை நிறமான. பானல்: குவளைப்பூ. ஊன்: உடம்பு. மாளா: சாகாமல்.

12. வாழ்கின்றாய்: ஒருமாதிரியாக வாழ்க்கையை நடத்துகின்றாய். வாழாத: முறைப்படி வாழமாட்டாத. ஆழ்கின்றாய்: அழுங்கிப் போகின்றாய். ஆழாமல் காப்பான்: முழுகிப் போய்விடாமல் காப்பாற்றுபவன். பல்காலும்: பல முறையும். அவலக்கடல்: துன்பசாகரம். வெள்ளம்: பெருகிய நீர்.

சுட்டு அறுத்தல்

எண்சீர் விருத்தம்

வெள்ளந்தாழ் விரிசடையாய்! விடையாய்! விண்ணோர்
  பெருமானே! எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்ப்
பள்ளந்தாழ் உறுபுனலில் கீழ்மேல் ஆகப்
  பதைத்துஉருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தான் நின்றுஉச்சி அளவும் நெஞ்சாய்
  உருகாதால்; உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா!
வெள்ளந்தான் பாயாதால்; நெஞ்சம் கல்லாம்!
  கண்இணையும் மரமாம்! தீ வினையி னேற்கே. 13

வினையிலே கிடந்தேனைப் புகுந்து நின்று
  போது!நான் வினைக்கேடன் என்பாய் போல
இனையன்நான் என்றுஉன்னை அறிவித்து என்னை
  ஆட்கொண்டுஎம் பிரான்ஆனாய்க்கு இரும்பின் பாவை
அனையநான் பாடேன்!நின்று ஆடேன்! அந்தோ!
  அலறிடேன்! உலறிடேன்! ஆவி சோரேன்!

சுட்டு அறுத்தல்: சுட்டிக் காட்டும் அறிவை ஒழித்தல்.

13. வெள்ளம்: கங்கை. தாழ்தல்: தங்குதல். விடை: காளை. விண்ணோர் பெருமான்: வானவர் தலைவன். வேட்ட: ஆசைப்பட்ட. உறு: மிக்க. புனல்: நீர். பதைத்து உருகும் அவர், மெய் அடியார். உச்சி: தலை. இணை: இரண்டு.

14. புகுந்து: நுழைந்து. நின்று: நிலைபெற்று. போது: வருவாயாக. வினைக்கேடன்: வினையைக் கெடுப்பவன். இனையன்: இன்ன தன்மையன். பிரான்: தலைவன். இரும்பின் பாவை: இரும்பினால் செய்யப்பட்ட பொம்மை. அலறுதல்: கதறுதல். உலறுதல்: வற்றிப் போதல்.

முனைவனே! முறையோ நான் ஆன வாறு!
முடிவுஅறியேன்; முதல்அந்தம் ஆயி னானே. 14

சிந்தனைநின் தனக்குஆக்கி நாயி னேன்தன்
கண்இணைநின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குஉன்
மணிவார்த்தைக்கு ஆக்கிஐம் புலன்கள் ஆர
வந்தனை! ஆட் கொண்டுஉள்ளே புகுந்த விச்சை
மால்அமுதப் பெருங்கடலே! மலையே! உன்னைத்
தந்தனை! செந் தாமரைக்காடு அனைய மேனித்
தனிச்சுடரே! இரண்டும்இலித் தனிய னேற்கே. 15

தனியனேன் பெரும்பிறவிப் பௌவத்து எவ்வத்
தடம்திரையால் எற்றுண்டு பற்றுஒன்று இன்றி,

14. முனைவன்: எல்லாம் அறிந்தவன். முதல்: தோற்றம். அந்தம்: முடிவு.

15. சிந்தனை: நினைவு. கண் இணை: இரண்டு கண்கள். பாதப் போது: திருவடித் தாமரை. வந்தனை: வணக்கம். அம் மலர்: அந்த அடியாகிய பூ. வாக்கு: வாய். மணி வார்த்தை: அழகிய மொழி. ஆர: அநுபவிக்க. வந்தனை: வந்தருளினாய். விச்சை: வித்தை. மால்: ஆசை. உன்னைத் தந்தனை: உன்னை எனக்கு ஈந்தாய். மேனி: உடம்பு. தனிச் சுடர்: ஒப்பற்ற விளக்கு. இரண்டு: இம்மைப் பயன் மறுமைப் பயன்; அல்லது நல்வினை தீவினை; அன்றி நூல் அறிவு அனுபவ உணர்வு. இலி: இல்லாதவன்.

16. பெரும் பிறவிப் பௌவம்: பிறவியாகிய பெரிய கடல். "பிறவிப் பெருங் கடல்" என்பது திருக்குறள். எவ்வம்: துயரம். தடம்: பெரிய. திரை: அலை. எற்றுண்டு: மோதப்பட்டு. பற்று: பற்றுக்கோடு.

கனியைநேர் துவர்வாயார் என்னும் காலால்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்டு
இனிஎன்னே உய்யும்ஆறு என்றுஎன்று எண்ணி
அஞ்சுஎழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே! முதல்அந்தம் இல்லா மல்லல்
கரைகாட்டி ஆட்கொண்டாய்! மூர்க்க னேற்கே. 16

கேட்டுஆரும் அறியாதான்; கேடுஒன்று இல்லான்;
கிளைஇலான்; கேளாதே எல்லாம் கேட்டான்;
நாட்டார்கள் விழித்திருப்ப ஞாலத் துள்ளே
நாயினுக்குத் தவிசுஇட்டு நாயி னேற்கே
காட்டா தனஎல்லாம் காட்டிப் பின்னும்
கேளா தனஎல்லாம் கேட்பித்து என்னை
மீட்டேயும் பிறவாமல் காத்துஆட் கொண்டான்!
எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே! 17

தேவர்கோ அறியாத தேவ தேவன்
செழும்பொழில்கள் பயந்துகாத்து அழிக்கும் மற்றை

---

16. கனி: கொவ்வைப்பழம். நேர்: ஒத்த. துவர்: சிவந்த. கால்: காற்று. காமம்: ஆசை. வான்: பெரிய. சுறவு: சுறுமீன். உய்யும் ஆறு: தப்பித்துக்கொள்ளும் வழி. அஞ்சு எழுத்து: சிவ மந்திரமாகிய திரு ஐந்து எழுத்து. புணை: தெப்பம். மல்லல்: வளப்பம். மூர்க்கன்: முரட்டுக்குண முடையவன்.

17. கிளை: சுற்றம். நாட்டார்: நாட்டில் உள்ளார். ஞாலம்: உலகம். தவிசு: ஆசனம். மீட்டேயும்: திரும்பவும்.

18. தேவர்கோ: வானவர்க்கு அரசனாகிய இந்திரன். பொழில்கள்: உலகங்கள். பயந்து: படைத்து.

மூவர்கோன் ஆய்நின்ற முதல்வன் ! மூர்த்தி !
மூதாதை ! மாதுஆளும் பாகத்து எந்தை !
யாவர்கோன் என்னையும்வந்து ஆண்டு கொண்டான்
யாம்ஆர்க்கும் குடிஅல்லோம் ; யாதும் அஞ்சோம் ;
மேவினோம் அவன்அடியார் அடியா ரோடும்
மேல்மேலும் குடைந்துஆடி ஆடு வோமே. 18

ஆத்தும சுத்தி

அறுசீர் விருத்தம்

ஆடு கின்றிலை ! கூத்துடை
யான்கழற்கு அன்புஇலை ! என்புஉருகிப்
பாடு கின்றிலை ! பதைப்பதும்
செய்கிலை ! பணிகிலை ! பாதமலர்
சூடு கின்றிலை ! சூட்டுகின்
றதும்இலை ! துணையிலி பிணநெஞ்சே !
தேடு கின்றிலை ! தெருவுதோறு
அலறிலை ! செய்வதுஒன்று அறியேனே ! 19

---

18. மூவர் : அயன், அரி, அரன். மூதாதை : முப்பாட்டன். மாது : உமை. பாகம் : பகுதி. எந்தை : என் தகப்பன். யாவர்கோன் : எல்லார்க்கும் தலைவன். மேவினோம் : சேர்ந்தோம். குடைதல் : மூழ்குதல்.

ஆத்தும சுத்தி : உயிரினது பரிசுத்தம்.

19. ஆடுகின்றிலை : ஆடமாட்டேன் என்கிறாய். கூத்து உடையான், தில்லைப்பதியில் சிற்றம்பலத்தே நடனம் ஆடுகின்றவன். கழல் : திருவடி. பதைத்தல் : துடித்தல். பணிதல் : வணங்குதல். சூடுதல் : அணிதல். சூட்டுதல் : அருச்சித்தல். அலறுதல் : உரக்கக்கத்துதல்.

அறிவி லாத எனைப்புகுந்து
ஆண்டுகொண்டு அறிவதை அருளிமேல்
நெறிஎ லாம்புலம் ஆக்கிய
எந்தையைப் பந்தனை அறுப்பானைப்
பிறிவி லாதஇன் அருள்கள்பெற்று
இருந்துமாறு ஆடுதி பிணநெஞ்சே!
கிறிஎ லாம்மிகக் கீழ்ப்படுத்
தாய்!கெடுத் தாய்!என்னைக் கெடும்ஆறே! 20

வினைஎன் போல்உடை யார்பிறர்
ஆர்?உடை யான்அடி நாயேனைத்
தினையின் பாகமும் பிறிவது
திருக்குறிப்பு அன்று;மற்று அதனாலே
முனைவன் பாதநன் மலர்பிரிந்து
இருந்தும்நான் முட்டிலேன்! தலைகீறேன்!
இனையன் பாவனை இரும்புகல்
மனம்செவி இன்னதுஎன்று அறியேனே. 21

ஏனை யாவரும் எய்திடல்
உற்றுமற்று இன்னதுஎன்று அறியாத
தேனை ஆன்நெய்யை கரும்பின்இன்
தேறலைச் சிவனைஎன் சிவலோகக்

---

20. அறிவதை : அறியவேண்டியவற்றை. மேல்நெறி: வீடடைதற்குற்றவழி. புலம்ஆக்கிய : விளங்கச் செய்த பந்தனை : பாசத்தை. மாறாடுதி : தடுமாற்றம் அடைகின்றாய். பிணநெஞ்சே : பிணம்அனையமனமே. கிறி : பொய். மிக : மேல்ஓங்க.

21. தினையின் பாகம்: தினையின் பகுதி. முட்டிலேன் : முட்டிக்கொள்ள மாட்டேன். தலைகீறேன் : தலையைப்பிளக்கமாட்டேன். பாவனை : எண்ணம்.

22. ஆன் : பசு. இன்தேறல் : இனிய சாறு.

கோனை மான்அன நோக்கிதன்
கூறனைக் குறுகிலேன் நெடுங்காலம்
ஊனை யான்இருந்து ஓம்புகின்
றேன்கெடு வேன்உயிர் ஓயாதே. 22

ஓய்வி லாதன உவமனில்
இறந்தன ஒள்மலர்த் தாள்தந்து
நாயில் ஆகிய குலத்தினும்
கடைப்படும் என்னைநல் நெறிகாட்டித்
தாயில் ஆகிய இன்அருள்
புரிந்தஎன் தலைவனை நனிகாணேன் !
தீயில் வீழ்கிலேன் ! திண்வரை
உருள்கிலேன் ! செழுங்கடல் புகுவேனே. 23

வேனில் வேள்கணை கிழித்திட
மதிசுடும் அதுதனை நினையாதே
மான்நி லாவிய நோக்கியர்
படிறு இடை மத்திடு தயிர்ஆகித்

22. மான்அன நோக்கி : மான்கண்போன்ற கண்ணை உடையவள். கூறன் : உடம்பின் பகுதியிலே கொண்டவன். குறுகுதல்: அடைதல். ஓம்புதல்: பாதுகாத்தல்.

23. ஓய்வு இலாதன : ஒழிதல் இல்லாதன. உவமனில் இறந்தன : உவமைப் பொருள்களைக்கடந்து மேற்சென்றன. ஒள்: ஒளி. புரிந்த : செய்த. நனி : நன்றாக. திண்வரை உருள்கிலேன்:வலியமலையினின்றும் உருண்டு வீழ்ந்துமாள மாட்டேன். செழுங்கடல் புகுவேனே : செழுமையான கடலிலாவது வீழ்வேனா? அதுவும் செய்ய மாட்டேன்.

24. கணை: அம்பு. கிழித்திட: பிளக்க. மதி: சந்திரன். மான்நிலாவிய : மான் விழிபோன்ற. நோக்கு : கண். படிறு : வஞ்சகம்.

தேன்கி வாவிய திருஅருள்
புரிந்தஎன் சிவன்நகர் புகப்போகேன்
ஊனில் ஆவியை ஓம்புதல்
பொருட்டுஇனும் உண்டுஉடுத்து இருந்தேனே! 24

கைம்மாறு கொடுத்தல்

கலி விருத்தம்

மேலை வானவ ரும்அறி யாததோர்
கோல மே!எனை ஆட்கொண்ட கூத்தனே!
ஞால மே!விசும் பே!இவை வந்துபோம்
கால மே!உனை என்றுகொல் காண்பதே. 25

எந்தை! ஆய்!எம் பிரான்!மற்றும் யாவர்க்கும்
தந்தை! தாய்!தம் பிரான்!தனக்கு அஃதுஇலான்!
முந்தி என்உள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலும் அறிவுஅரும் செல்வனே! 26

24. போகேன்: செல்லமாட்டேன். ஊன்: உடல். ஆவி: உயிர். ஓம்புதல்: பேணுதல்.

கைம்மாறு கொடுத்தல்: உதவி செய்தார்க்குப் பதில் உதவுதல்.

25. கோலம்: வடிவம். ஞாலம்: இவ் உலகம். விசும்பு: மேல் உலகம்.

26. ஆய்: தாய். எம்பிரான்: என் தலைவன். தம்பிரான்: தங்கள் தலைவன். அஃது: தந்தைதாய் முதலிய முறைமை. முந்தி: முன்னர். அறிவு அரும்: அறிய முடியாத.

கட்டு அறுத்தெனை ஆண்டுகண் ஆரநீறு
இட்ட அன்பரொடு யாவரும் காணவே
பட்டி மண்டபம் ஏற்றினை! ஏற்றினை!
எட்டி னோடுஇரண் டும்அறி யேனையே. 27

அறிவ னே!அமு தே! அடி நாயினேன்
அறிவன் ஆகக்கொண் டோஎனை ஆண்டது!
அறிவி லாமைஅன் றேகண்ட து ஆண்டநாள்
அறிவ னோ?அல்ல னோ?அருள் ஈசனே. 28

அநுபோக சுத்தி

அறு சீர் விருத்தம்

ஈச னே!என் எம்மானே!
 எந்தை பெருமான்! என்பிறவி
நாச னே!நான் யாதும்ஒன்று
 அல்லாப் பொல்லா நாயான
நீச னேனை ஆண்டாய்க்கு
 நினைக்க மாட்டேன் கண்டாயே!
தேச னே!அம் பலவனே!
 செய்வது ஒன்றும் அறியேனே! 29

27. கட்டு: பாசப்பிணிப்பு. நீறு இட்ட அன்பர். விபூதி பூசிய அடியார். பட்டிமண்டபம்: தர்க்க சபை.

28. அறிவனே: அறிவே வடிவமானவனே.

அநுபோக சுத்தி: சிவ அநுபவத் தூய்மை.

29. பிறவி நாசன்: பிறப்பை, நாசம் செய்பவன். நீசன்: தாழ்ந்த காரியம் செய்பவன். தேசன்: ஒளிரூப மானவன்.

செய்வது அறியாச் சிறுநாயேன்
  செம்பொற் பாத மலர்காணாப்
பொய்யர் பெறும்பேறு அத்தனையும்
  பெறுதற்கு உரியேன்; பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாதம்
  மேவக் கண்டும் கேட்டிருந்தும்
பொய்ய னேன்நான் உண்டுஉடுத்திங்கு
  இருப்ப தானேன் போரேறே. 30

மான்நேர் நோக்கி உமையாள்
  பங்கா! வந்துஇங்கு ஆட்கொண்ட
தேனே! அமுதே! கரும்பின்
  தெளிவே! சிவனே! தென்தில்லைக்
கோனே! உன்தன் திருக்குறிப்புக்
  கூடு வார்நின் கழல்கூட
ஊன்ஆர் புழுக்கூடு இதுகாத்துஇங்கு
  இருப்ப தானேன் உடையானே! 31

தேனைப் பாலைக் கன்னலின்
  தெளியை ஒளியைத் தெளிந்தார்தம்

30. வெறி: தேன். மேவ: அடைய. போர் ஏறு: போர்வல்ல ஆண் சிங்கம்.

31. தென்தில்லைக்கோன்: தெற்கே இருக்கின்ற சிதம்பர நகர அரசன். ஊன் ஆர் புழுக் கூடு: தசை நிறைந்த பூச்சிக்கூடாகிய உடம்பு.

32. கன்னலின் தெளி: கருப்பஞ் சாற்றின் தெளிவு தெளிந்தார்: கடவுளை அறிந்தார்.

ஊனை உருக்கும் உடையானை
 உம்ப ரானை வம்பனேன்
நான்நின் அடியேன் நீஎன்னை
 ஆண்டாய் என்றால் அடியேற்குத்
தானும் சிரித்தே அருளலாம்
 தன்மை ஆம்என் தன்மையே. 32

தன்மை பிறரால் அறியாத
 தலைவா! பொல்லா நாயான
புன்மை யேனை ஆண்டுஐயா!
 புறமே போக விடுவாயோ?
என்னை நோக்கு வார்யாரே!
 என்நான் செய்கேன் எம்பெருமான்!
பொன்னே திகழும் திருமேனி
 எந்தாய்! எங்குப் புகுவேனே! 33

காருணியத்து இரங்கல்

அறு சீர் விருத்தம்

கடவுளே போற்றி! என்னைக்
 கண்டுகொண்டு அருளு போற்றி!
விடஉளே உருக்கி என்னை
 ஆண்டிட வேண்டும் போற்றி!

32. ஊன்: உடம்பு. உம்பரான்: மேலானவன். தன்மை: இயல்பு.

33. புன்மையேன்: தாழ்வு உடையேன். புறம்: வெளி.

காருணியத்து இரங்கல்: இறைவன் கருணையைக் குறித்து இரங்குதல்.

34. விட: பற்று நீங்கிவிட.

உடல்இது களைந்திட்டு ஒல்லை
உம்பர்தந்து அருளு போற்றி !
சடையுளே கங்கை வைத்த
சங்கரா ! போற்றி ! போற்றி !! 34

சங்கரா ! போற்றி ! மற்றோர்
சரண் இலேன் போற்றி ! கோலப்
பொங்குஅரா அல்குல் செவ்வாய்
வெண்நகைக் கரிய வாள்கண்
மங்கையோர் பங்க போற்றி !
மால்விடை ஊர்தி போற்றி !
இங்குஇவ்வாழ்வு ஆற்ற கில்லேன்
எம்பிரான் இழித்திட் டேனே. 35

எம்பிரான் போற்றி ! வானத்து
அவரவர் ஏறு போற்றி !
கொம்பரார் மருங்குல் மங்கை
கூறவெண் நீற போற்றி !
செம்பிரான் போற்றி ! தில்லைத்
திருச்சிற்றம் பலவ போற்றி !
உம்பரா போற்றி ! என்னை
ஆள் உடை ஒருவ போற்றி ! 36

34. களைந்து இட்டு : நீக்கிவிட்டு. ஒல்லை : விரைந்து. உம்பர் : வீடுபேறு.

35. போற்றி : வணக்கம். சரண் : புகல் இடம். கோலம்: அழகு. பொங்கு அரா: சீறுகின்ற பாம்பு. நகை: பல். வாள் : கத்தி. மங்கை : உமை. பங்கு : பகுதி. மால் விடை : பெரிய ஏறு. ஊர்தி : வாகனமாக உடையவன்.

36. கொம்பர் ஆர் மருங்குல் : கொம்பு போன்ற இடை. செம்பிரான் : செம்மேனியை உடைய தலைவன்.

ஒருவனே போற்றி ! ஒப்பில்
  அப்பனே போற்றி ! வானோர்
குருவனே போற்றி ! எங்கள்
  கோமளக் கொழுந்து போற்றி !
வருகஎன்று என்னை நின்பால்
  வாங்கிட வேண்டும் போற்றி !
தருகநின் பாதம் போற்றி !
  தமியனேன் தனிமை தீர்த்தே. 37

தீர்ந்தஅன்பு ஆய அன்பர்க்கு
  அவரினும் அன்ப போற்றி !
பேர்ந்தும்என் பொய்மை ஆட்கொண்டு
  அருளிடும் பெருமை போற்றி !
வார்ந்தநஞ்சு அயின்று வானோர்க்கு
  அமுதம் ஈ வள்ளல் போற்றி !
ஆர்ந்தநின் பாதம் நாயேற்கு
  அருளிட வேண்டும் போற்றி ! 38

ஆனந்தத்து அழுந்தல்

எழு சீர் விருத்தம்

ஐய நின்னது அல்லது இல்லை
  மற்றோர் பற்று வஞ்சனேன்
பொய்கலந்தது அல்லது இல்லை
  பொய்மை யேன்என் எம்பிரான் !

37. ஒருவன்: பிறஎவரும் ஈடு இல்லாதவன். குருவன்: ஆசிரியன். கோமளக் கொழுந்து: அழகிய இளந்தளிர். நின்பால்: உன் இடத்து. வாங்கிடவேண்டும்: ஏற்றுக் கொள்தல் வேண்டும்.

38. தீர்ந்த அன்பு: எல்லைகண்டு முடிந்த அன்பு. பேர்ந்து: மாற்றி. வார்ந்த: கொட்டிய. நஞ்சு: விஷம். அயின்று: உண்டு. ஈ வள்ளல்: கொடுத்த கொடையாளி. ஆர்ந்த: இன்பம் நிறைந்த.

ஆனந்தத்து அழுந்தல்: இன்பத்துள் திளைத்து நிற்றல்.

மைகலந்த கண்ணி பங்க!
வந்து நின்கழற்கணே
மெய்கலந்த அன்பர் அன்புள
னக்கும் ஆக வேண்டுமே. 39

சிந்தை செய்கை கேள்வி வாக்குச்
சீரில் ஐம்பு லன்களால்
முந்தை யான காலம் நின்னை
எய்தி டாத மூர்க்கனேன்
வெந்துஐ யாவி மூந்தி லேன்என்
உள்ளம் வெள்கி விண்டிலேன்
எந்தை ஆய நின்னை இன்னம்
எய்தல் உற்றுஇருப்பனே. 40

ஆனந்த பரவசம்

கலி நிலைத் துறை

விச்சுக் கேடுபொய்க்கு ஆகாது
என்றுஇங்கு எனைவைத்தாய்!
இச்சைக்கு ஆனார் எல்லாரும்
வந்துஉன் தாள்சேர்ந்தார்

39. மை கலந்த கண்ணி: அஞ்சனம் தீட்டிய கண்களையுடைய பார்வதி.

40. சிந்தை: மனம். செய்கை: செயல். சீர் இல்: சிறப்பில்லாத புலன்: பொறி. முந்தை: பழைமை. உள்ளம் வெள்கி விண்டிலேன்: மனம் வெட்கி உடையப் பெற்றிலேன்.

ஆனந்த பரவசம்: மகிழ்ச்சியினாலே தன் வயம் இழத்தல்.

41. விச்சு: வித்து. பொய்க்கு விச்சுக்கேடு ஆகாது: பொய்மையின் விதைக்கு அழிவு வருதல் கூடாது. இச்சை: விருப்பம்.

அச்சத் தாலே ஆழ்ந்திடு
 கின்றேன் ஆரூர்எம்
பிச்சைத் தேவா ! என்நான்
 செய்கேன் பேசாயே ! 41

பேசப் பட்டேன் நின்அடி-
 யாரில் திருநீறே
பூசப் பட்டேன் பூதல
 ரால்உன் அடியான்என்று
ஏசப் பட்டேன் இனிப்படு
 கின்றது அமையாதால்
ஆசைப் பட்டேன் ஆட்பட்
 டேன்உன் அடியேனே. 42

அழுகேன் நின்பால் அன்பாம்
 மனமாய் அழல்சேர்ந்த
மெழுகே அன்னார் மின்னார்
 பொன்னார் கழல்கண்டு
தொழுதே உன்னைத் தொடர்ந்தா
 ரோடும் தொடராதே
பழுதே பிறந்தேன் என்கொண்டு
 உன்னைப் பணிகேனே. 43

41. பிச்சைத் தேவன் : ஐயம் புகும் கடவுள்.

42. அடியாரில் : தொண்டர்களுள்ளே. பூதலர் : உலகத்தார். ஏசல் : இகழ்தல். அமையாது : பொருந் தாது.

43. அழுகேன் : அழமாட்டேன். அழல் : நெருப்பு. மின்ஆர் : ஒளி பொருந்திய. பொன் ஆர் : தங்க மய மான. கழல் : திருவடி. தொடராதே : பின்பற்றி வரா மல். பழுதே : வீணாகவே.

யானே பொய்! என் நெஞ்சும்
பொய்! என் அன்பும்பொய் !
ஆனால் வினையேன் அழுதால்
உன்னைப் பெறலாமே !
தேனே ! அமுதே ! கரும்பின்
தெளிவே ! தித்திக்கும்
ஆனே ! அருளாய் ! அடியேன்
உனைவந்து உறும்ஆறே. 44

ஆனந்தாதீதம்

எண்சீர் விருத்தம்

மைஇ லங்குநற் கண்ணி பங்கனே !
வந்துஎனைப்பணி கொண்ட பின்மழுக்
கைஇ லங்குபொற் கிண்ணம் என்று அலால்
அரியை என்றுஉனைக் கருது கின்றிலேன்

44. நெஞ்சு : உள்ளம். வினையேன் : தீவினையுடையேன். பெறலாமே: அடையலாமா? அமுது : தேவாமிர்தம். தெளிவு : சாறு. ஆன் : பசு. ஈண்டு ஆகுபெயராகப் பசுவின் பாலை உணர்த்துகிறது. தித்திக்கும் மான்எனப் பிரித்து இனிக்கும் பெருமான் எனப் பொருள் கொள்வதில் மோனை இல்லை யென்பதுந்தவிர தித்திப்புப் பொருள்களாகிய தேன் அமுது கரும்பின் தெளிவு என்பவற்றோடு பசும்பாலையும் சேர்த்துக் கூறத்தக்கவாறு தித்திக்கும் ஆனே எனப்பிரித்துப் பொருள் கோடலே சிறப்புடைத்து. உறும் ஆறு : அடையும் வழி.

ஆனந்தாதீதம் : மகிழ்ச்சிப் பெருக்கு.

45. மை இலங்கு நல் கண்ணி : அஞ்சனம் விளங்குகின்ற நல்ல கண் அழகியாகிய உமை. மழுக்கை : இளங்கை. பொற் கிண்ணம் : தங்க வள்ளம். அரியை : அருமையுடையாய்.

மெய்இ லங்குவெண் நீற்று மேனியாய்!
மெய்மை அன்பர்உன் மெய்மை மேவினார்
பொய்யில் அங்குஎனைப் புகுத விட்டுநீ
போவ தோசொலாய் பொருத்தம் ஆவதே. 45

வான நாடரும் அறியொ ணாதநீ
மறையில் ஈறுமுன் தொடரொ ணாதநீ
ஏனை நாடரும் தெரியொ ணாதநீ
என்னை இன்னிதாய் ஆண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடு வித்தவா
உருகி நான்உனைப் பருக வைத்தவா
ஞான நாடகம் ஆடு வித்தவா
நைய வையகத்து உடைய விச்சையே. 46

விச்சது இன்றியே விளைவு செய்குவாய்!
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்
வைச்சு வாங்குவாய்! வஞ்ச கப்பெரும்
புலைய னேனைஉன் கோவில் வாயிலில்

45. மெய்: உடம்பு.

46. வர்ன நாடர்: விண் அகத் தேவர். மறை: வேதம். ஈறு: முடிவு. ஏனை: மற்றை. இன்னிதாய்: இனிதாக. கொண்டவா, வித்தவா, வைத்தவா என்பவற்றிற்குக் கொண்டவாறும் வித்த விதமும் வைத்தவாறும் என்பன பொருள். ஊன்: உடம்பு. பருக: அள்ளிக் குடிக்க. ஞான நாடகம்: அறிவுக் கூத்து. நைய: அழிய. வையகத்து உடைய இச்சை: உலகில் உள்ள ஆசை.

47. விச்சது: வித்து ஆகிய அது. வைச்சு வாங்குவாய்: காத்து அழிப்பாய். புலையனேனை: இழிந்தவனாகிய என்னை.

பிச்சன் ஆக்கினாய்! பெரிய அன்பருக்கு
உரியன் ஆக்கினாய்! தாம்வ ளர்த்ததோர்
நச்சு மாமரம் ஆயி னுங்கொலார்
நானும் அங்ஙனே உடைய நாதனே. 47

பாட வேண்டும்நான் போற்றி நின்னையே
பாடி நைந்துநைந்து உருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும்நான் போற்றி அம்பலத்து
ஆடும் நின்கழல் போது நாயினேன்
கூட வேண்டும்நான் போற்றி இப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீட வேண்டும்நான் போற்றி வீடுதந்து
அருளு போற்றிநின் மெய்யர் மெய்யனே. 48

நீத்தல் விண்ணப்பம்

கட்டளைக் கலித்துறை

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந்து ஆண்டுகொண்ட

47. பிச்சன்: பித்தன். நச்சுமாமரம்: நஞ்சுடைய பெரிய மரம். அங்ஙனே: அம்மாதிரியே.

48. போற்றி: வணக்கம். நைந்து நைந்து: இளகி இளகி. நெக்கு நெக்கு: நெகிழ்ந்து நெகிழ்ந்து. கழல் போது: திருவடித் தாமரை. இப் புழுக் கூடு: இந்தப் புழுக்கள் தங்க இடமாக அமைந்த உடம்பு. நீக்கு: போக்குவாயாக. வீடவேண்டும்: விட்டொழித்தல் வேண்டும்.

நீத்தல் விண்ணப்பம்: கைவிட்டு விடாமல் ஏற்றுக் கொள்ள விடுக்கும் வேண்டுகோள்.

49. கடையவனேனை: கீழ்ப்பட்டவனாகிய என்னை. கருணை: அருள். கலந்து: உட்புகுந்து.

விடையவ னே!விட் டிடுதிகண்
  டாய்!விறல் வேங்கையின்தோல்
உடையவ னே!மன்னும் உத்தர
  கோசமங் கைக்குஅரசே!
சடையவ னே!தளர்ந் தேன்;எம்
  பிரான்!என்னைத் தாங்கிக்கொள்ளே! 49

கொள்வர் பிளவுஅக லாத்தடம்
  கொங்கையர் கொவ்வைச்செவ்வாய்
விள்ளேன் எனினும் விடுதிகண்
  டாய்!நின் விழுத்தொழும்பின்
உள்ளேன்; புறம்அல்லேன்; உத்தர
  கோசமங் கைக்குஅரசே!
கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு
  ஆண்ட தெனக் காரணமே. 50

49. விடையவன்: ரிஷபவாகனன். விட்டிடுதி: விட்டுவிடுவாயா? கண்டாய்: முன்னிலை அசை. விறல்: வலிமை. வேங்கை: புலி. உடை: ஆடை. மன்னும்: நிலைபெற்ற. சடையவன்: சடையைப் பெற்றவன். தளர்ந் தேன்: மெலிந்து போனேன். தாங்கிக் கொள்: ஏற்றுக் கொள்வாயாக.

50. கொள் ஏர் என்பதை ஏர் கொள் என மாற்றுக. ஏர்: அழகு. பிளவு அகலாத் தடம் கொங்கை: பிளவு கொண்டு நீங்காத பெரிய ஸ்தனங்கள். கொவ்வைச் செவ் வாய் விள்ளேன்: கொவ்வைப் பழம் போன்ற சிவந்த வாய் அமுதம் பருகுதலினின்றும் விலகி விடுபடமாட் டேன். விழுத் தொழும்பு: மேம்பட்ட அடிமை: புறம்: வெளி. கள்ளேன்: திருடன்.

கார்உறு கண்ணியர் ஐம்புலன்
  ஆற்றங் கரைமரமாய்
வேர்உறு வேனை விடுதிகண்
  டாய்!விளங் கும்திருஆர்
ஊர்உறை வாய்!மன்னும் உத்தர
  கோசமங் கைக்குஅரசே !
வார்உறு பூண்முலை யாள்பங்க !
  என்னை வளர்ப்பவனே. 51

செழிகின்ற தீப்புகு விட்டிலில்
  சின்மொழி யாரில்பல்நாள்
விழுகின்ற என்னை விடுதிகண்
  டாய்!வெறி வாய்அறுகால்
உழுகின்ற பூமுடி உத்தர
  கோசமங் கைக்குஅரசே !
வழிநின்று நின்அருள் ஆர்அமுது
  ஊட்ட மறுத்தனனே. 52

இருதலைக் கொள்ளியின் உள்எறும்பு
  ஒத்து நினைப்பிரிந்த

51. கார்உறு : கருமை நிறம் பொருந்திய. கண்ணியர் : கண்களையுடைய பெண்கள். வார் : ரவிக்கை. பூண் : நகை. பங்கன் : பகுதியிலே உடைய சிவன்.

52. செழிகின்ற : செழுமையான. விட்டிலில் : விட்டில் பூச்சி போல. சின்மொழியாரில் : சின்னப் பேச்சுப் பேசுவோரிடம். வெறிவாய் அறுகால் : தேன் பொருந்திய வாயை உடைய வண்டு. வழி நின்று : பாதையில் நின்று மறித்து.

53. இருதலைக் கொள்ளியின் உள் எறும்பு ஒத்து : இரு பக்கமும் எரிகின்ற கொள்ளிக்கட்டையின் உள்ளே அகப்பட்டுத் தடுமாறும் எறும்பைப்போல.

விரிதலை யேனை விடுதிகண்
　டாய்!வியன் மூஉலகுக்கு
ஒருதலை வா!மன்னும் உத்தர
　கோசமங் கைக்குஅரசே!
பொருதலை மூஇலை வேல்வலன்
　ஏந்திப் பொலிபவனே. 53

நெடுந்தகை நீஎன்னை ஆட்கொள்ள
　யான்ஐம் புலன்கள்கொண்டு
விடுந்தகை யேனை விடுதிகண்
　டாய்!விர வார்வெருவ
அடுந்தகை வேல்வல்ல உத்தர
　கோசமங் கைக்குஅரசே!
கடுந்தகை யேன்உண்ணும் தெள்நீர்
　அமுதப் பெருங்கடலே. 54

களிவந்த சிந்தையொடு உன்கழல்
　கண்டும் கலந்துஅருள
வெளிவந்தி லேனை விடுதிகண்
　டாய்!மெய்ச் சுடருக்கெல்லாம்

53. விரிதலையேனை: தலைவிரித்து ஆடுகின்ற என்னை. வியன்: பெரிய. ஒரு தலைவா: ஒரே தலைவனே. பொரு: போர் செயவல்ல. தலை: நுனி. மூ இலை வேல்: மூன்று இலை வடிவமான சூலாயுதம். வலன்: வலப்பக்கம். பொலிதல்: விளங்குதல்.

54. நெடுந்தகை: பெருந்தகைமை. விரவார்: பகைவர். வெருவ: அஞ்ச. அடும் தகை: கொல்லும் தன்மை. கடும் தகையேன்: மிக்க தாகம் உடையேன். தெள்நீர்: தெளிந்த புனல்.

55. களிவந்த சிந்தை: மகிழ்ச்சி கொண்ட மனம்.

ஒளிவந்த பூங்கழல் உத்தர
கோசமங் கைக்குஅரசே !
எளிவந்த எந்தை பிரான்என்னை
ஆள்உடை என்அப்பனே. 55

என்னை "அப் பா! அஞ்சல் " என்பவர்
இன்றிநின்று எய்த்து அலைந்தேன் ;
மின்னைஒப் பாய்!விட் டிடுதிகண்
டாய்!உவ மிக்கின்மெய்யே
உன்னைஒப் பாய்!மன்னும் உத்தர
கோசமங் கைக்குஅரசே !
அன்னைஒப் பாய்!எனக்கு அத்தன்ஒப்
பாய் ! என் அரும்பொருளே. 56

கொம்பர்இல் லாக்கொடி போல்அல
மந்தனன் ; கோமளமே !
வெம்புகின் றேனை விடுதிகண்
டாய்!விண்ணர் நண்ணுகில்லா
உம்பர்உள் ளாய்!மன்னும் உத்தர
கோசமங் கைக்குஅரசே !
அம்பர மே!நில னே!அனல்,
கால்ஒடுஅப்பு ஆனவனே ! 57

55. பூங்கழல் : அழகிய திருவடி.

56. அஞ்சல் : பயப்படாதே. மின்னை ஒப்பாய் : மின் போன்ற ஒளியுடையாய். உவமிக்கின் : ஒப்புநோக்கினால். அத்தன் : தந்தை.

57. கொம்பர் : பற்றிக் கொள்ளும் குச்சி. அலமருதல் : வருந்துதல். கோமளம் : அழகு. நண்ணுகில்லா : எட்ட முடியாத. உம்பர் : உச்சி. அம்பரம் : ஆகாயம். நிலன் : பூமி. அனல் : நெருப்பு. கால் : காற்று. அப்பு : நீர்.

பெற்றது கொண்டு பிழையே
பெருக்கிச் சுருக்கும்அன் பின்
வெற்றடி யேனை விடுதிகண்
டாய்!விடில் ஓகெடுவேன்!
மற்றடி யேன்தன்னைத் தாங்குநர்
இல்லை;என் வாழ்முதலே!
உற்றுஅடி யேன்மிகத் தேறிநின்
றேன்எனக்கு உள்ளவனே. 58
பெருநீர் அறச்சிறு மீன்துவண்டு
ஆங்கு நினைப்பிரிந்த
வெருநீர்மை யேனை விடுதிகண்
டாய்!வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுள் மலைச்சிறு
தோணி வடிவின்வெள்ளைக்
குருநீர் மதிபொதி யும்சடை
வானக் கொழுமணியே. 59
அடல்கரி போல்ஐம் புலன்களுக்கு
அஞ்சி அழிந்தஎன்னை
விடற்குஅரி யாய்!விட் டிடுதிகண்
டாய்!விழுத் தொண்டர்க்குஅல்லால்

58. பெற்றது: நான் பெற்ற உடல்பொருள் ஆதி. தாங்குநர்: காப்பாற்றக் கூடியவர். வாழ்முதலே: வாழ்க்கைக்கு முதற் பொருளே.

59. அற: வற்றிப்போக. துவண்டாங்கு: வாடி வதங்கினாற்போல. மடு: நீர்நிலை. மலைச்சிறு தோணி: அசையும் சின்னத் தெப்பம். குரு: நிறமான. மதி: சந்திரன். பொதியும்: விளங்கும். கொழுமணி: செழிப்பான ரத்னம்.

60. அடல்: போர்வல்ல. கரி: யானை. விடற்கு அரியாய்: விடமுடியாதவனே.

தொடற்குஅரி யாய்!சுடர் மாமணி
யே!சுடு தீச்சுழலக்
கடல்கரி தாய்எழும் நஞ்சுஅமுது
ஆக்கும் கறைக்கண் டனே. 60

பொதும்புஉறு தீப்போல் புகைந்தெரி
யப்புலன் தீக்கதுவ
வெதும்புறு வேனை விடுதிகண்
டாய்!விரை யார்நறவம்
ததும்பும்மந் தாரத்தில் தாரம்
பயின்றுமந் தம்முரல்வண்டு
அதும்பும் கொழுந்தேன் அவிர்சடை
வானத்து அடல்அரைசே. 61

அரைசே! அறியாச் சிறியேன்
பிழைக்குஅஞ்சல் என்னின்அல்லால்
விரைசேர் முடியாய்! விடுதிகண்
டாய்!வெண் நகைக்கருங்கண்

60. சுழல: நிலைதடுமாற. கரிதாய் எழும் நஞ்சு: கருநிறமாய் எழுந்த ஆலகால விஷம். கறைக் கண்டன்: நீலகண்டன்.

61. பொதும்பு: மரப் பொந்து. கதுவ: பற்ற. வெதும்புறுவேனை: வேகின்ற என்னை. மரப் பொந்தில் தோன்றிய நெருப்பு உள்ளிருந்தே புகைந்து எரிந்து மரத்தை அழிப்பதுபோல ஐம்புல ஆசையாகிய தீ என் உடம்பினுள்ளிருந்தே புகைந்து எரிக்க அதனால் வெந்தழிகின்றேன் என்பது கருத்து. விரை: மணம். நறவம்: தேன். மந்தாரம்: மந்தார மலர். தாரம், மந்தம் இசை வகைகள். பயின்று: பழகி. முரலுதல்: ஒலித்தல். அதும்புதல்: மொய்த்தல். அவிர் சடை: பிரகாசமான சடை. அடல்: வலிமை.

62. வெண் நகை: வெள்ளைப் பற்கள்.

திரைசேர் மடந்தை மணந்த
திருப்பொற் பதப்புயங்கா!
வரைசேர்ந்து அடர்ந்துஎன்ன வல்வினை
தான்வந்து அடர்வனவே. 62

அடர்புல னால்நிற் பிரிந்துஅஞ்சி
அஞ்சொல்நல் லார்அவர்தம்
விடர்விட லேனை விடுதிகண்
டாய்!விரிந் தேஎரியும்
சுடர்அனை யாய்!சுடு காட்டுஅர
சே!தொழும் பர்க்குஅமுதே!
தொடர்வுஅரி யாய்!தமி யேன்தனி
நீக்கும் தனித்துணையே. 63

தனித்துணை நீநிற்க யான்தருக்
கித்தலை யால்நடந்த
வினைத்துணை யேனை விடுதிகண்
டாய்!வினை யேனுடைய

62. திரைசேர் மடைந்தை: கங்கையாள். திரை: அலை. மணந்த: மணம் செய்து கொண்ட. பொற்பதம்: பொன் போன்ற அடி. புயங்கன்: பாம்பை அணிந்தவன். வரை சேர்ந்து அடர்ந்து என்ன: மலைகள் பல ஒன்று கூடி வருத்துவது போல.

63. அடர்புலனால்: தாக்குகின்ற ஐம்புல இச்சை யால். அம்சொல் நல்லார்: அழகிய பேச்சுடைய பெண் கள். விடர்: காடு. விரிந்து: பரந்து. தொழும்பர்: தொண்டர். தொடர்வு அரியாய்: தொடர முடியாத வனே. தனித்துணை: ஒப்பற்ற துணைவன்.

64. தருக்கித் தலையால் நடந்த: செருக்குற்று நிலை தடுமாறிய. வினைத் துணையேன்: வினைகளையே துணையாகக் கொண்டவன்.

மனத்துணை யே!என்தன் வாழ்முத
லே!எனக்கு எய்ப்பில்வைப்பே !
தினைத்துணை யேனும் பொறேன்துயர்
ஆக்கையின் திண்வலையே. 64

வலைத்தலை மான்அன்ன நோக்கியர்
நோக்கின் வலையில்பட்டு
மிலைத்துஅலைந் தேனை விடுதிகண்
டாய்!வெண் மதியின்ஒற்றைக்
கலைத்தலை யாய்!கரு ணாகர
னே!கயி லாயம்என்னும்
மலைத்தலை வா!மலை யாள்மண
வாள!என் வாழ்முதலே. 65

கதிஅடி யேற்குஉன் கழல்தந்து
அருளவும் ஊன்கழியா
விதிஅடி யேனை விடுதிகண்
டாய்!வெண் தலைமுழையில்
பதிஉடை வாள்அரப் பார்த்துஇறை
பைத்துச் சுருங்கஅஞ்சி

64. எய்ப்பில் வைப்பு: மெலிந்த காலத்தில் உதவும் சேமநிதி. தினைத்துணை: தினையளவு. ஆக்கை: உடம்பு.

65. வலைத்தலை மான்: வலையில் மாட்டிக்கொண்ட மான். நோக்கின் வலை: கண்களாகிய வலை. மிலைத்து: மயங்கி. மலையாள் மணவாள: மலை மகளாகிய பார்வதியின் கணவனே.

66. கதி: புகல் இடம். ஊன் கழியா: உடம்பை விடாத. விதி: ஊழ்வினை. முழை: குகை. பதி: இடம். வாள் அர: ஒளியை உடைய பாம்பு. இறை: சிறிது, பைத்து: படமெடுத்து.

மதி, நெடு நீரில் குளித்துஒளிக்
    கும்சடை மன்னவனே. 66

முழுதுஅயில் வேல்கண் ணியர்என்னும்
    மூரித் தழல்முழுகும்
விழுதுஅனை யேனை விடுதிகண்
    டாய்!நின் வெறிமலர்த்தாள்
தொழுதுசெல் வான்நல் தொண்டரில்
    கூட்டிடு சோத்துஎம்பிரான்!
பழுதுசெய் வேனை விடேல்உடை
    யாய்!உன்னைப் பாடுவனே. 67

பாடிற்றி லேன்;பணி யேன்;மணி
    நீஒளித் தாய்க்குப்பச்சூன்
வீடிற்றி லேனை விடுதிகண்
    டாய்!வியந்து ஆங்குஅலறித்
தேடிற்றி லேன்; "சிவன் எவ்விடத்
    தான், எவர் கண்டனர்" என்று
ஓடிற்றி லேன்; கிடந்து உள்ளுரு
    கேன்;நின்று உழைத்தனனே. 68

66. மதி: திங்கள். நெடுநீர்: கங்கை. குளித்து: மூழ்கி. ஒளிக்கும்: மறைந்து கொள்ளும்.

67. அயில்: கூர்மை. மூரி: வலிய. தழல்: நெருப்பு. விழுது: வெண்ணெய். வெறி: தேன். வான்: சிறந்த. சோத்து: தாழ்மையான வணக்கம். பழுது: தவறு. விடேல்: கைவிடாதே.

68. பாடிற்றிலேன்: பாடமாட்டேன். பணியேன்: வணங்கமாட்டேன். பச்சூன்: பசிய உடம்பு. வீடிற்றிலேன்: விட்டொழிக்க மாட்டேன். தேடிற்றிலேன்: தேட மாட்டேன். ஓடிற்றிலேன்: ஓடமாட்டேன். உழைத்தனன்: உள்ளம் நொந்தேன்.

உழைதரு நோக்கியர் கொங்கைப்
பலாப்பழத்து ஈயின்ஒப்பாய்
விழைதரு வேனை விடுதிகண்
டாய்!விடில் வேலைநஞ்சு உண்
மழைதரு கண்டன்; குணம்இலி;
மான்இடன்; தேய்மதியன்;
பழைதரு மாபரன்; என்றுஎன்று
அறைவன் பழிப்பினையே. 69

தாரகை போலும் தலைத்தலை
மாலை; தழல்அரப்பூண்
வீர! என் தன்னை விடுதிகண்
டாய்!விடில் என்னைமிக்கார்
''ஆர்அடி யான்''என்னின் உத்தர
கோசமங் கைக்குஅரசின்
சீர்அடி யார்அடி யான்என்று
நின்னைச் சிரிப்பிப்பனே. 70

69. உழை: மான். விழைதருவேனை: ஆசைப் படுகின்ற என்னை. விடில்: விட்டு விடுவாயானல். வேலை: கடல். மழைதரு கண்டன்: முகில் அனைய கறைக் கழுத்தை உடையவன். குணம் இலி: குணம் இல்லாதவன். மானிடன்: மனிதன். தேய் மதியன்: குறைந்த அறிவினன். பழைதரு மாபரன்: பழைமையான பெரிய ஆண்டி. அறைவன் பழிப்பினை: எடுத்துச் சொல்வேன் உன் இகழ்ச்சியை. குணங்களைக் கடந்தவன் ஆகலின் குணம் இலி என்றும் மானை இடக்கையில் உடையான் ஆதல் பற்றி மானிடன் எனவும் குழவித் திங்கள் சூடியவன் என்பது தோன்றத் தேய்மதியன் என்றும் தனக்கு முந்தியோர் எவரும் இல்லாத பரம்பொருள் ஆதலின் பழைதரு மாபரன் எனவும் அடிகள் அருளுவார் ஆயினர்.

70. தாரகை: நட்சத்திரம். தழல் அரப்பூண்: தீப் போன்ற நஞ்சுடைய பாம்பைப்பூண்ட. மிக்கார்: பெரியார். சிரிப்பிப்பன்: சிரிக்கும்படி செய்வேன்.

சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத்
தொழும்பையும் ஈசற்குஎன்று
விரிப்பிப்பன் என்னை விடுதிகண்
டாய்!விடில் வெங்கரியின்
உரிப்பிச்சன்! தோல்உடைப் பிச்சன்!நஞ்சு
ஊண்பிச்சன்! ஊர்ச்சுடுகாட்டு
எரிப்பிச்சன்! என்னையும் ஆள்உடைப்
பிச்சன்!என்று ஏசுவனே. 71

ஏசினும் யான்உன்னை ஏத்தினும்
என்பிழைக் கேகுழைந்து
வேசுஅறு வேனை விடுதிகண்
டாய்!செம் பவளவெற்பின்
தேசுஉடை யாய்!என்னை ஆள்உடை
யாய்!சிற்று உயிர்க்குஇரங்கிக்

71. சிரிப்பிப்பன்: நகைக்கச் செய்வேன். சீறும் பிழைப்பு: வெறுக்கும் வாழ்க்கை. தொழும்பு: தொண்டு. வெங்கரியின் உரிப்பிச்சன்: கொடிய யானையின் தோலை உடுத்தித்திரியும் பித்தன். தோல் உடைப்பிச்சன்: புலித் தோல் போர்த்தும் கிறுக்கன். நஞ்சுஊண் பிச்சன்: விஷத்தை உண்ட பைத்தியக்காரன். ஊர்ச் சுடுகாட்டு எரிப்பிச்சன்: ஊருக்குப் பொதுவான சுடுக்காட்டுத் தீயிலே நின்று ஆடும் ஞானக் கிறுக்கன். ஏசுவன்: வசை பாடுவேன்.

72. குழைந்து: நொந்து. வேசறுவேன்: வருந்துவேன். வெற்பு: மலை. தேசு: ஒளி. சிற்று உயிர் உடையார் என்றது வானவரை. வானவர் சாகாது வாழவே இவன் நஞ்சு உண்டான் என்பது கதை.

காய்சின ஆலம்உண் டாய்!அமுது
உண்ணக் கடையவனே. 72

திரு எம் பாவை

வெண்தளைக் கொச்சகக்கலிப்பா

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடம்கண்
மாதே! வளருதியோ! வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த்து ஒலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டுஇங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே!
ஈதேஎம் தோழி பரிசுஏல்ஓர் எம்பாவாய். 73

72. காய்சின ஆலம்: கொல்லும் கோபத்தோடு பாம்பு கக்கிய விஷம். அமுது உண்ணக் கடையவன். கடைப்பட்டவனாகிய நான் அமுதமாக உன்னை உண்ண.

திரு எம் பாவை: பாவை என்பது பெண். எம் பாவை: எமது பெண். திரு, சிறப்பு அடைமொழி. மார்கழித் திங்களில் பொழுது புலருமுன் பெண்கள் ஒருவரை ஒருவர் துயில் உணர்த்தி எழுப்பி நீராடி இறைவனை வணங்கி வாழ்த்தி மகிழும் முறையில் பாடப் பெற்றது இத் திரு எம் பாவை.

73. ஆதி: முதல். அந்தம்: முடிவு. கேட்டேயும்: கேட்டும். வாள்: வாளாயும் போன்ற. தடம்: பெரிய. வளருதியோ: உறங்குகின்றாயோ. வன்செவி: பலமான காது, எவ்வளவு உரக்கக் கத்தினாலும் அதனைப் பொருட்படுத்தாத காது. வார்: நீண்ட. போது ஆர் அமளி: பூக்கள் நிறைத்த படுக்கை. ஏதேனும் ஆகாள்: ஒன்றுக்கும் உதவாதவளாக. பரிசு: தன்மை. ஏல்: ஏற்றுக் கொள். ஓர்: ஆராய்ந்து பார். எம்பாவாய்: எமது பதுமை போன்ற மங்கையே.

"பாசம் பரஞ்சோதிக்கு என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போது எப்போதுஇப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ? நேர்இழையாய்?" "நேர்
இழையீர்!
சீசீ இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ" "விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்துஅருள வந்துஅருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்கு அன்பார்யாம் ஆர்ஏல்ஓர் எம்பாவாய்." 74

"முத்துஅன்ன வெண்நகையாய்! முன்வந்து எதிர்
எழுந்துஎன்
அத்தன் ஆனந்தன் அமுதன்என்று அள்ஊறித்
தித்திக்கப் பேசுவாய்! வந்துஉன் கடைதிறவாய்!"
"பத்துஉடையீர்! ஈசன் பழஅடியீர்! பாங்குஉடையீர்!
புத்துஅடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டால்
பொல்லாதோ"?
"எத்தோநின் அன்புஉடைமை? எல்லோம் அறியோமோ?
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்குஏல்ஓர் எம்பாவாய்." 75

---

74. பாசம்: அன்பு. பரஞ்சோதி: மேலான ஒளியை உடைய கடவுள். என்பு ஆய்: உடம்பு எலும்பாக ஆகுமாறு. எப்போது: எப்பொழுது. நேசம்: ஆசை. நேர் இழை: ஒழுங்கான ஆபரணம். கூசும் மலர்ப்பாதம், அவ்வளவு கண்ணைப்பறிக்கும் பேர்ஒளி கொண்டது.

75. அள் ஊறுதல்: வாயூறுதல். கடை திறவாய்: கதவைத் திறக்கமாட்டாய். பத்து: பற்று. பாங்கு: உரிமை. எத்தோ: ஏமாற்றமா. சித்தம் அழகியார்: மனப் பரிசுத்தம் உடையார். வேண்டும்: நீ பாடவேண்டும்.

"ஒள்நித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ?"
"வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?"
"எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றுஅவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக்கு ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்கு இனியானைப் பாடிக் கசிந்துஉள்ளம்
உள்நெக்கு நின்றுஉருக, யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயில்எல்ஓர் எம்பாவாய்." 76

மால்அறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போல்அறிவோம் என்றுஉள்ள பொக்கங்க ளேபேசும்
பால்ஊறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்!
ஞாலமே விண்ணே பிறவே அறிவுஅரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டுஅருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்று
ஓலம் இடினும் உணராய்! உணராய்காண்!!
ஏலக் குழலீ! பரிசுஎல்ஓர் எம்பாவாய். 77

76. ஒள்நித்தில நகையாய்: ஒளியான முத்துப் போன்ற பற்களையுடையாய். இன்னம் புலர்ந்தின்றோ: இன்னும் உனக்கு விடியவில்லையா. எண்ணிக்கொடு: எண்ணிக்கொண்டு. உள்ளவா: உள்ளபடி. அவமே: வீணாக. நின்று உருக யாம் மாட்டோம்: நின்று உருக வேண்டும் ஆதலால் நாங்கள் எண்ணமாட்டோம். குறையில்: குறைவு இருக்குமானால். துயில்: தூங்கு.

77. மால்: திருமால். நான்முகன்: பிரமன். மலை: மலைபோன்ற பெருமையுடைய சிவபிரான். போல்: அசை. உள்ள: நினைக்க. பொக்கங்கள்: பொய்கள். படிறீ: வஞ்சகீ. கோதாட்டுதல்: சீராட்டுதல். ஓலம்: அபயக்குரல். உணராய்: துயில் நீங்கி எழமாட்டாய். ஏலம்: மயிர்ச் சாந்து. பரிசு: தன்மை.

மானே! நீ நென்னலை, நாளைவந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய்! இன்னம் புலர்ந்தின்றோ?
வானே நிலனே பிறவே அறிவுஅரியான்
தானேவந்து எம்மைத் தலைஅளித்துஆட் கொண்டுஅருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்!
ஊனே உருகாய்! உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 78

அன்னே இவையும் சிலவோ பலஅமரர்
உன்னற்கு அரியான் ஒருவன் இரும்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்!
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகுஒப்பாய்!
என்னானை என்அரையன் இன்னமுதுஎன்று எல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னம் துயிலுதியோ?
வல்நெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்!
என்னே துயிலின் பரிசுஏலோர் எம்பாவாய். 79

கோழி சிலம்பச் சிலம்பும் குருகுஎங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்குஎங்கும்

78. நென்னலை: நேற்று. நாணாமே: வெட்கமில்லாமல். போனதிசை: உன் சொல் சென்ற திக்கு. தலை அளித்து: முதல்தரமான கருணை செய்து. வான்வார்: சிறந்த நீண்ட. வாய்திறவாய்: வாய் திறந்து ஒன்றும் சொல்லமாட்டாய். உனக்கே: உனக்கும். உறும் எமக்கும்: வந்த எங்கட்கும்.

79. உன்னற்கு: நினைப்பதற்கு. ஒருவன்: ஒப்பற்றவன். இரும் சீரான்: பெரும் சிறப்புடையவன். சின்னங்கள்: சங்கு முதலிய இசைக்கருவிகள். தென்னா: தென்னவனே. என்னான்: என்னுடையவன். அரையன்: மன்னன். வாளா: சும்மா. பரிசு: தன்மை.

80. சிலம்ப: ஒலிப்ப. குருகு: பறவை. ஏழில் இயம்ப: பள்ளி எழுச்சியைச் சொல்ல.

கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ ?
வாழி!ஈது என்ன உறக்கமோ வாய்திறவாய் !
ஆழியான் அன்புஉடைமை ஆம்ஆறும் இவ்ஆறோ ?
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேல்ஓர் எம்பாவாய். 80

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே !
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே !
உன்னைப் பிரான்ஆகப் பெற்றஉன் சீர்அடியோம்
உன் அடியார் தாள்பணிவோம் ஆங்குஅவர்க்கே பாங்குஆவோம்
அன்னவரே எம்கணவர் ஆவார் அவர்உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்குஎம்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏல்ஓர் எம்பாவாய். 81

பாதாளம் ஏழினும்கீழ் சொற்குஅழிவு பாதமலர்
போதுஆர் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றுஅல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டர்உளன்

80. கேழ் : ஒப்பு. ஆழியான் : ஆணைச் சக்கரம் உடைய சிவபெருமான். ஏழை பங்காளன் : ஏழைகள் பக்கமாகவே இருப்பவன்.

81. பேர்த்தும் : மீண்டும். பிரான் ஆக : தலைவனாக. உகந்து : விரும்பி. தொழும்பு : அடிமை. பணி : ஏவல். இலோம் : இல்லாதவர்கள் ஆவோம்.

82.. சொற்கு அழிவு : சொல்லின் எல்லையைக் கடந்தது. பேதை : உமையவள். பால் : பக்கம். உலவா : அழியா. ஒரு தோழன் : நிகரற்ற துணைவன். தொண்டர் உளன் : அடியவர் உள்ளத்திலே உறைபவன்.

கோதுஇல் குலத்துஅரன்தன் கோயில் பிணைப்பிள்ளைகாள்!
ஏதுஅவன் ஊர்? ஏதுஅவன்பேர்? ஆர்உற்றார்? ஆர்அயலார்?
ஏதுஅவனைப் பாடும் பரிசு?எல்லோர் எம்பாவாய்?. 82

மொய்ஆர் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்துஉன் கழல்பாடி
ஐயா! வழிஅடியோம் வாழ்ந்தோம்காண் ஆர்அழல்போல்
செய்யா!வெண் நீறுஆடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடம்கண் மடந்தை மணவாளா!
ஐயா!நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம் உய்ந்துஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேல்லோர் எம்பாவாய். 83

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்துஆடும்
தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோரும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்

82. கோது இல்: குற்றமற்ற. குலம்: உயர் குலம். அரன்: சிவன். பிணைப்பிள்ளை: பெண்பிள்ளை.

83. மொய்: வண்டு. பொய்கை: குளம். முகேர்: ஒலிக் குறிப்பு. குடைந்து: நீரைத் தள்ளி ஆடி. வழி யடிமை: பரம்பரைத் தொண்டு. ஆர் அழல்: நிறைந்த நெருப்பு. சிறு மருங்குல்: சிற்றிடை. மடந்தை: உமை யாள். எய்யாமல்: இளைத்துப் போகாமல்.

84. ஆர்த்த: பிணிக்கப்பட்ட ஆர்த்து: ஆரவாரம் கொண்டு. தீர்த்தன்: தூய தன்மையன். தீ ஆடும்: அனல் தாங்கி ஆடுகின்ற. குவலயம்: பூஉலகம். கரந்து: மறைத்து. விளையாடி: விளையாடுகின்ற சிவன். வார்த்தை: புகழ்ச் சொற்கள். வளை சிலம்ப: கைவளைகள் சப்தமிட. வார் கலைகள்: நீண்ட ஆடைகள்.

ஆர்ப்புஅரவம் செய்ய அணிகுழல்மேல் வண்டுஆர்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துஉடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேல்ஓர் எம்பாவாய். 84

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகுஇனத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலம்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றுஇசைந்த

84. ஆர்ப்பு அரவம் செய்ய: ஆரவார ஓசை எழுப்ப. குழல்: கூந்தல். ஆர்ப்ப: ரீங்காரம் செய்ய. திகழும்: விளங்குகின்ற. இருஞ்சுனை: பெரிய நீர்நிலை. ஆடு: ஆடுவோமாக.

85. இப்பாவில் சிவபிரானுக்கும் அம்பிகைக்கும் மடுவுக்கும் உவமை உரைக்கப்படுகிறது. பைங்குவளைக் கார் மலர்: பசிய கரிய குவளைப்பூ. செங்கமலப் பைம்போது. பசுமைமிக்க செந்தாமரைப்பூ. இவ் இரண்டு நீர்ப்பூக்களும் மடுவுள் விரவிக்கிடக்கின்றன. கரிய குவளை உமையவளையும் செந்தாமரை சிவபெருமானையும் காட்டும் நிறமாதலா லும் இரண்டின் இணைப்பு உமையொரு கூறுடைய அம்மை அப்பனின் வடிவத்தை நினைவு ஊட்டுகின்றது. அங்கம் குருகு இனத்தால்: (நீர்நிலையுள்) அழகிய பறவைக் கூட்டங்கள் படிவதால்; (அம்பிகைக்கு) உடம்பின் உறுப்பாகிய கையில் வளையல் இனம் புரளுதலால்; (இறைவனுக்கு) உடம்பிலே குருக்கத்திப் பூக்கள் கிடத்தலால். அங்கம்: 1. அழகு; 2. உடம்பின் உறுப்பு. குருகு: 1. பறவை; 2. வளையல்; 3. குருக்கத்திமலர். பின்னும் அரவத்தால்: (பொய்கைக்கு) கலந்துவரும் ஓசையால்; இறைவிக்கும் இறைவனுக்கும் பின்னிக்கிடக்கும் பாம்புகளால் அரவம்: 1. ஒலி; 2. பாம்பு. தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தல். குளத்துக்கும் அம்மையப்பனுக்கும் பொருந்துவன. புறமலம் கழுவுவது பொய்கை: அகமலம் அகற்றுவது ஆண்டவன் அருள் திறம். சார்தல்: அடைதல். போன்று இசைந்த: போலப் பொருந்திய.

பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்துஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேல்ஓர் எம்பாவாய். 85

காதுஆர் குழைஆடப் பைம்பூண் கலன்ஆடக்
கோதை குழல்ஆட வண்டின் குழாம்ஆடச்
சீதப் புனல்ஆடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆம் ஆபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை தன்
பாதத் திறம்பாடி ஆடேல்ஓர் எம்பாவாய். 86

ஓர்ஒருகால் எம்பெருமான் என்றுஎன்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்

85. மடு: தடாகம். சங்கம்: வளைகள். சிலம்பு: பாதசரம். ஆர்ப்ப: ஒலிக்க. பொங்க: பூரிப்படைய. பங்கயம்: தாமரை.

86. ஆர்: பொருந்திய. குழை: தோடு. கலன்: நகை. கோதை: மாலை. குழல்: கூந்தல். குழாம்: கூட்டம். சீதம்: குளிர்ச்சி. சிற்றம்பலம்: தில்லையிலுள்ள இறைவன் நடமாடும் சிற்சபை. ஆம்ஆ: ஆகும் விதம். சோதிதிறம்: ஒளிவடிவினனின் ஆற்றல். ஆதி திறம்: முதல்வனானமுறை. அந்தம்: முடிவு. பேதித்து: வேறுபடுத்தி. பெய்வளை: வளை அணிந்த அம்மை.

87. வாய் ஓவாள்: வாய் ஓயமாட்டாள். ஓவா: நீங்காத. பனிப்ப: கொட்ட. பார்: நிலம். வந்தனையாள்: வணங்குவாள். பணியாள்: தொழமாட்டாள்.

பேர்அரையற்கு இங்ஙனே பித்துஒருவர் ஆம்ஆறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர்! வாய்ஆர நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந்து ஆடேல்ஓர் எம்பாவாய். 87

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்துஉடையாள்
என்னத் திகழ்ந்துஎம்மை ஆள்உடையாள் இட்டுஇடையின்
மின்னிப் பொலிந்துஎம் பிராட்டி திருஅடிமேல்
பொன்னம் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆள்உடையாள்
தன்னில் பிரிவுஇலா எம்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்அருளே
என்னப் பொழியாய் மழையேல்ஓர் எம்பாவாய். 88

செங்கண் அவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குஉண் கருங்குழலி நம்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்துஅருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்துஅருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோம்கட்கு ஆர்அமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலம்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்து ஆடேல்ஓர் எம்பாவாய். 89

87. பேர் அரையன் : பெரிய மன்னன். வார் உருவ : ரவிக்கையை ஊடுருவவல்ல. வாயார : வாய் நிறைய.

88. முன்னி : முந்தி. சுருக்கி : குடித்துச் சுருங்கச் செய்து. உடையாள் : அம்பிகை. என்ன : என்று சொல்லுமாறு. திகழ்ந்து : விளங்கி. இட்டுஇடை : சின்ன இடுப்பு. சிலம்பு : காலில் அணியும் அணி. சிலம்பி : இரைந்து. சிலைகுலவி : வானவில் வீசி. முன்னி : விரைந்து.

89. செங்கண் அவன்பால் : சிவந்த கண்ணையுடைய திருமால் இடத்து. திசைமுகன் : பிரமன். கொங்கு : மணம். கருங்குழலி : கரிய கூந்தலை உடையாளே. இல்லங்கள் : வீடுகள். அம்கண் : அழகிய கருணை. நலம் : நன்மை.

அண்ணா மலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீறு அற்றால்போல்
கண் ஆர் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண் ஆர் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண் ஆகி ஆணாய் அலியாய்ப் பிறங்குஒளிசேர்
விண் ஆகி மண் ஆகி இத்தனையும் வேறுஆகிக்
கண் ஆர் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்து ஆடேல்ஓர் எம்பாவாய். 90

உங்கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்குஅப் பழம்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்குஒன்று உரைப்போம்கேள் !
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க !
எங்கை உனக்குஅல்லாது எப்பணியும் செய்யற்க !
கங்குல் பகல்எங்கண் மற்றுஒன்றும் காணற்க !
இங்குஇப் பரிசே எமக்குஎங்கோன் நல்குதியேல்
எங்குஎழில்என் ஞாயிறு எமக்குஏல்ஓர் எம்பாவாய். 91

90. இறைஞ்சும் : வணங்கும். மணித்தொகை. ரத்தினக்கூட்டம். வீறு : சிறப்பு. இரவி : சூரியன் கதிர் : கிரணம். கார் : இருள். கரப்ப : மறைக்க. தண் : குளிர்ச்சி. தாரகைகள் : நட்சத்திரங்கள். அகல : நீங்க. பிறங்குதல் : விளங்குதல். கண் ஆர் : கண் நிறைந்த.

91. புதுக்குதல் : புதுப்பித்தல். சேரற்க : தழுவாதிருக்கட்டும். கங்குல் : இரவு. காணற்க : காணாதிருக்கட்டும். பரிசு : தன்மை. நல்குதியேல் : அருளுவாயானால். எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு : சூரியன் எந்தத் திக்கில் உதித்தால்தான் எங்களுக்கு என்ன கவலை. எழில் : தோன்றினால். ஞாயிறு : சூரியன்.

போற்றி! அருளுகநின் ஆதியாம் பாதமலர்;
போற்றி! அருளுகநின் அந்தம்ஆம் செந்தளிர்கள்;
போற்றி!எல் லாஉயிர்க்கும் தோற்றம்ஆம் பொற்பாதம்;
போற்றி!எல் லாஉயிர்க்கும் போகம்ஆம் பூங்கழல்கள்;
போற்றி!எல் லாஉயிர்க்கும் ஈறுஆம் இணைஅடிகள்;
போற்றி!மால் நான்முகனும் காணாத புண்டரிகம்;
போற்றி!யாம் உய்யஆட் கொண்டுஅருளும் பொன்மலர்கள்;
போற்றி!யாம் மார்கழிநீர் ஆடேல்ஓர் எம்பாவாய். 92

திரு அம்மானை

ஆறு அடித் தரவு கொச்சகக்கலிப்பா

செங்கண் நெடுமாலும் சென்றுஇடந்தும் காண்புஅரிய
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்துஅருளி
எங்கள் பிறப்புஅறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள்சோலைத் தென்னன் பெருந்துறையான்

92. போற்றி: வணக்கம். ஆதி: முதல். அந்தம்: முடிவு. செந்தளிர்: செவ்விய தளிர் போன்ற திருவடி. போகம்: இன்பம். பூ கழல்கள்: பூப்போன்ற அடிகள். ஈறு: முடிவு. இணை: இரண்டு. மால்: திருமால். நான் முகன்: பிரமன். புண்டரிகம்: தாமரை. உய்ய: கடைத் தேற. பொன் மலர்கள்: தங்கப் பூக்கள் போன்ற திருப் பாதங்கள். யாம் மார்கழி நீர் ஆடு: நாம் மார்கழித் திங்களில் ஆடும் நீர் ஆடுவோமாக.

திரு அம்மானை: மகளிர் ஆடும் விளையாட்டு. பந்து போன்ற கருவியை வீசிக் கைகளால் பிடித்து விளையாடும் ஒரு விளையாட்டாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது.

93. செம்கண் நெடுமால்: சிவந்த கண்களை உடைய நீண்ட திருமால். இடந்து: தோண்டி. பூதலம்: இவ் உலகம். போந்து: வந்து. எம் தரமும்: எம் போன்றவரையும். தெங்கு: தென்னை. தென்னன் பெருந்துறையான்: பாண்டியனுக்குச் சொந்தமான திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவன்.

அம்கணன் அந்தணனாய் அறைகூவி வீடுஅருளும்
அம்கருணை வார்கழலே பாடுதும்காண் அம்மானாய். 93

பாரார் விசும்புஉள்ளார் பாதாளத் தார்புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான் எமக்குஎளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சுஏற்றி
வாரா வழிஅருளி வந்துஎன் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேர்ஆசை வாரியனைப் பாடுதும்காண் அம்மானாய். 94

இந்திரனும் மால்அயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன்அவனி வந்துஅருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோள்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துஉருக்கும் சீரார் பெருந்துறையான்
பந்தம் பறியப் பரிமேல்கொண் டான்தந்த
அந்தம்இலா ஆனந்தம் பாடுதும்காண் அம்மானாய். 95

93. அம்கணன்: அழகிய கண்ணோட்டம் உடையவன். அறைகூவி: வலிய அழைத்து. வார்கழல்: நீண்ட சிலம்பு அணிந்த திருவடி. பாடுதும்: பாடுவோமாக. காண்: அசை. அம்மானாய்: அம்மானை விளையாடிக் கொண்டு.

94. பாரார்: இவ் உலகினர். விசும்பு உள்ளார்: மேல் உலகினர். பாதாளத்தார்: கீழ் உலகினர். புறத்தார்: இவைகள் நீங்கிய வேறு உலகினர். பேராளன்: பெரிய ஆண்டான். பிச்சு: பித்து. ஏற்றி: ஏறச் செய்து. வாரா வழி: இனிப் பிறவா நெறி. ஆரா அமுது: தெவிட்டாத மருந்து. மீன் விசிறும்: மீனுக்காக வலை வீசும். வாரியன்: கடல் அனையன்.

95. ஏனோர்: பிறர். அந்தரமே நிற்க: ஆகாயத்திலே தொங்க. அவனி: உலகம். என் தரமும்: என் போன்றவரையும். பந்தம்: கட்டு. பறிய: விடுபட. பரி: குதிரை.

வான்வந்த தேவர்களும் மால்அயனோடு இந்திரனும்
கான்நின்று வற்றியும் புற்றுஎழுந்தும் காண்புஅரிய
தான்வந்து நாயேனைத் தாய்போல் தலைஅளித்திட்டு
ஊன்வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்புஎய்து
தேன்வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த
வான்வந்த வார்கழலே பாடுதும்காண் அம்மானாய். 96

கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சுஏற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலம்மன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதும்காண் அம்மானாய். 97

கேட்டாயோ தோழி! கிறிசெய்த வாறுஒருவன்
தீட்டுஆர் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனஎல்லாம் காட்டிச் சிவம்காட்டித்
தாள்தா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி

96. கான்: காடு. நின்று: தவத்தில் நின்று. வற்றி: உடம்பு உலர்ந்து. புற்று எழுந்து: உடம்பைப் புற்று எழுந்து மூடி. நாயேன்: நாய் அனையவன். தலை அளித்திட்டு: முதற் கருணை செய்து. ஊன் வந்து: என் உடம்பிலே புகுந்து. உரோமங்கள் உள்ளே உயிர்ப்பு எய்த: மயிர்க்கால் தொறும் உணர்வு தோன்ற.

97. வல்லாளன்: வலிமிக்கவன். பிச்சு ஏற்றி: அவனைப்பற்றும் கிறுக்கு ஏறச் செய்து. கல்லை: என் மனமாகிய கல்லை. பிசைந்து: கசக்கிப் பிழிந்து. கடிந்த: நீக்கிய. வேதியன்: மறைகளால் புகழப்பட்டவன். மன்னும்: நிலைபெற்றிருக்கும். ஒல்லை: விரைந்து செல்லும்.

98. கிறி: மாயம். ஒருவன்: சிவன். தீட்டு ஆர் மதில்: சித்திரம் தீட்டப்பெற்ற மதில். புடை: பக்கம். காட்டாதன: பிற எவர்க்கும் தெரிவிக்காத மெய்ப் பொருள். தாள்: திருப்பாதம்.

நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆள்தான்கொண்டு ஆண்டவா பாடுதும்காண் அம்மானாய். 98

ஓயாதே உள்குவார் உள்இருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையில்
மேயானை வேதியனை மாதுஇருக்கும் பாதியனை
நாயான நம்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகுஏழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதும்காண் அம்மானாய். 99

பண்சுமந்த பாடல் பரிசு படைத்துஅருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்துஈசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துஉண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதும்காண் அம்மானாய். 100

98. ஆண்டவா: ஆட்கொண்ட முறை.

99. ஓயாது: இடைவிடாமல். உள்குவார்: நினைப்பார். சேயான்: உள்காதார்க்குத் தூரத்தே உள்ளவன். சேவகன்: வீரன். மாது: அம்பிகை. தத்துவன்: மெய்ப்பொருளானவன். தானே, என்பது பிறஎவருமல்லாது தான் ஒருவனே என்பதைக் குறிக்கிறது.

100. பண்: இசை. பண் சுமந்த பாடல் பரிசு படைத்து அருளும்: இசை சுமந்து எழுந்த பக்தர் பாடல்களையே தனக்கு வெகுமதியாகப் பெற்று அருள் செய்கின்ற. விண்சுமந்த கீர்த்தி: வானம் தாங்கும் புகழ். வியன்மண்டலம்: பெரிய பூமி. கலிமதுரை: ஆரவாரம் மிக்க மதுரை நகர். அக்கோ: அந்த மதுரை நகர்க் காசனான பாண்டியன். மொத்து உண்டு: அடிபட்டு. பொன்மேனி: தங்க நிறமான உடம்பு.

துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டம் கரியான்செம் மேனியான் வெண்ணீற்றான்
அண்டம்முதல் ஆயினான் அந்தம்இலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழஅடியார்க்கு ஈந்துஅருளும்
அண்டம் வியப்புஉறுமா பாடுதும்காண் அம்மானாய். 101

விண்ஆளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ஆளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்
தண்ஆர் தமிழ்அளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ஆளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ஆர் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதும்காண் அம்மானாய். 102

செப்புஆர் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான்
தப்பாமே தாள்அடைந்தார் நெஞ்சுஉருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த

101. துண்டப் பிறையான்: திங்கள் இளங் குழவி அணிந்தவன். மறையான்: வேதங்களால் பாராட்டப் பெற்றவன். கோலமா ஊர்தியான். அழகிய காளை ஏறுபவன். கண்டம் கரியான்: நீலகண்டன். கண்டம்: கழுத்து. அண்டம்: உலகம். பண்டைப் பரிசே: பழைய முறையாகவே.

102. மாண்பு: பெருமை. தண்: குளிர்ச்சி. தமிழ் அளிக்கும்: தமிழை உண்டாக்கும். தமிழைச் சிவபிரானே தோற்றுவித்தான் என்பது கருத்து. "நெற்றி உமிழ் செங்கண் தழல்புரை சுடர்க்கடவுள் தந்ததமிழ்." என்றான் கவிச்சக்கிரவர்த்தி கம்பன். பேணுதல்: விரும்புதல். கண் ஆர்: கண் நிறைந்த.

103. செப்பு: கிண்ணம். முலை: உமையவள். தப்பாமே: தவறாமல். தாள்: திருவடி.

அப்பு ஆர் சடைஅப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்இருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதும்காண் அம்மானாய். 103

மைப்பொலியும் கண்ணி!கேள் மால்அயனோடு இந்திரனும்
எப்பிறவி யும்தேட என்னையும்தன் இன்அருளால்
இப்பிறவி ஆட்கொண்டு இனிப்பிறவா மேகாத்து
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடுஆகும்
அப்பொருளாம் நம்சிவனைப் பாடுதும்காண் அம்மானாய்.

கைஆர் வளைசிலம்பக் காதுஆர் குழைஆட
மைஆர் குழல்புரளத் தேன்பாய வண்டுஒலிப்பச்
செய்யானை வெண்ணீறு அணிந்தானைச் சேர்ந்துஅறியாக்

103. அப்பு ஆர் சடையப்பன்: கங்கை தங்கிய சடையையுடைய எந்தை. ஒப்பாக: ஈடாக. உள் இருக்கும்: உள்ளத்தே குடியிருக்கும். அப்பாலைக்கு அப்பாலை: அப்பாற்பட்ட எல்லா உலகங்கட்கும் அப்பாற்பட்டவனை. "அப்பாலைக்கு அப்பாலான் என்கின்றாளால்" என அருளுகின்றார் திருநாவுக்கரசு அடிகள், மகள் பொருட்டுத் தாய் இரங்கிக் கூறுவதாகப் பாடும் தேவாரப் பாசுரத்தில்.

104. கண்ணி: கண்ணை உடையவளே! கேள்: கேட்பாயாக. எப் பிறவியும்: எல்லாப் பிறப்பிலும். தோற்றமாய்: விளங்குபவனாய். நிலைபேறு ஆய்: நிலைபெறுதற்கு இடமாய். யாவைக்கும் வீடு ஆகும்: எல்லாவற்றிற்கும் வீடு பேறாக அமையும்.

105. சிலம்ப: ஓசை இட. குழை: காது அணி. மையார் குழல்: கருமை நிறைந்த கூந்தல். செய்யான்: செம்மேனியான். சேர்ந்து அறியாக்கையான்: ஒன்று சேர்ந்து அறியாத கைகளை உடையவன்.

கையானை எங்கும் செறிந்தானை அன்பர்க்கு
மெய்யானை அல்லாதார்க்கு அல்லாத வேதியனை
ஐஆறு அமர்ந்தானைப் பாடுதும்காண் அம்மானாய். 105

ஊனாய் உயிராய் உணர்வாய்என் உட்கலந்து
தேனாய் அமுதமும்ஆய்த் தீங்கரும்பின் கட்டியும்ஆய்
வானோர் அறியா வழிஎமக்குத் தந்துஅருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீர்ஒளிசேர்
ஆனா அறிவாய் அளவுஇறந்த பல்உயிர்க்கும்
கோன்ஆகி நின்றவா கூறுதும்காண் அம்மானாய். 106

சூடுவேன் பூங்கொன்றை; சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன்; கூடி முயங்கி மயங்கிநின்று
ஊடுவேன்; செவ்வாய்க்கு உருகுவேன்; உள்உருகித்
தேடுவேன்; தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்;
வாடுவேன்; பேர்த்தும் மலர்வேன்; அனல்ஏந்தி
ஆடுவான் சேவடியே பாடுதும்காண் அம்மானாய். 107

105 கைகள் ஒருசேரலாவது கும்பிடுதல். ஒருவரையும் சிவன் கும்பிட்டதே இல்லை. இது மரியாதைக் குறைவு என உலகியலில் வைத்து எண்ணக்கூடாது. சிவபிரான் முழுமுதற் கடவுள் என்ற தனித் தன்மையைக் காட்ட இதைவிட நயமாகக் கூறல் முடியாதது. செறிந்தான்: நிறைந்தான். ஐயாறு: திருவையாறு என்னும் சிவஸ்தலம்.

106. மலர்க்கொன்றை என்பதைக் கொன்றை மலர் என மாற்றுக. சீர் ஒளி: சிறந்த பிரகாசம். ஆனா: குறையாத. நின்றவா: நின்ற முறையை. கூறுதும்: சொல்லுவோம்.

107. கூடுவேன்: பொருந்துவேன். முயங்கி: அனுபவித்து. ஊடுவேன்: பிணங்குவேன். செவ்வாய்க்கு உருகுவேன்: அவனுடைய சிவந்த வாய் அமுதல் பருக உருகி நிற்பேன். உள் உருகி: மனம் உருகி. வாடுவேன்: வருந்துவேன். பேர்த்தும் மலர்வேன்: திரும்பவும் மலர்ச்சியடைவேன். அனல்: நெருப்பு.

கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மால்அயனும் காண்புஅரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீர்ஆர் பெருந்துறையில்
எளிவந்து இருந்துஇரங்கி எண்அரிய இன்அருளால்
ஒளிவந்துஎன் உள்ளத்தின் உள்ளே ஒளிதிகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதும்காண் அம்மானாய். 108

முன்னானை மூவர்க்கும்; முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப் பிஞ்ஞகனைப் பேணு பெருந்துறையின்
மன்னானை வானவனை மாதுஇயலும் பாதியனைத்
தென்ஆனைக் காவானைத் தென்பாண்டி நாட்டானை
என்னானை என்அப்பன் என்பார்கட்கு இன்அமுதை
அன்னானை அம்மானைப் பாடுதும்காண் அம்மானாய். 109

108. கிளிவந்த மென்மொழியாள்: கிளிபோல் பேசும் மெல்லிய சொல்லை உடைய உமாதேவி. கேழ்: ஒளி. வித்தகன்: அறிவு உடையவன். தேறல்: தேன். எளிவந்து: எளிமையாய் வந்து. எண் அரிய: நினைத்தற்கும் அருமையான. திகழ: விளங்கும்படி. அளி: கருணை. அந்தணன்: அழகிய தண் அளியை உடையான்.

109. முன்னான் மூவர்க்கும்: மும்மூர்த்திகட்கும் முற்பட்டவன். முற்றும்ஆய்: எல்லாப் பொருளுமாகி. முற்றுக்கும் பின்னானை: அப்பொருள் அனைத்துக்கும் பிற்பட்டவனானவனை. பிஞ்ஞகன்: தலைக்கோலம் உடையவன். மன்னானை: நிலைபெற்றவனை. மாது இயலும் பாதியன்: மங்கை பொருந்திய பங்கை உடையவன். தென் ஆனைக் காவான்: அழகிய திருவானைக் காவில் உறைபவன். என்னானை: என்னுடையவனை. அன்னான்: ஒத்தவன்.

திருப் பொற் சுண்ணம்

அறுசீர் விருத்தம்

சுந்தர நீறு அணிந் துமெழுகி
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டிஎங்கும்
எழில்சுடர் வைத்துக் கொடிஎடுமின்!
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்;
ஆழியான் நாதன்; நல் வேலன்தாதை;
எந்தரம் ஆள்உமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்தும்நாமே. 110

சூடகம் தோள்வளை ஆர்ப்பஆர்ப்பத்
தொண்டர் குழாம்எழுந்து ஆர்ப்பஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்பஆர்ப்பப்

திருப் பொற் சுண்ணம்: அழகிய பொன் போன்ற வாசனைப்பொடி. இறைவனுக்கு நீராட்டுதற் பொருட்டு மணத்தூளை உரலில்வைத்துப் பெண்கள் இடிக்குங்கால் பாடப்பெறும்பாட்டு.

110. சுந்தரம்: அழகு. நீறு: திருநீறு. தூயபொன்: சுத்தத் தங்கம். சிந்தி: தூவி. நிதி: நவமணிகள். இந்திரன் கற்பகம்: இந்திரனுலகிலுள்ள கற்பக மரத்தின் தோகைகள். எழில் சுடர்: அழகிய தீபங்கள். கொடி எடுமின்: கொடிகளை ஏற்றுங்கள். அந்தரர் கோன் அயன்தன் பெருமான்: இந்திரனுக்கும் பிரமனுக்கும் தலைவன். ஆழியான்நாதன்: திருமாலுக்கு நாயகன். கொழுநன்: கணவன். ஏய்ந்த: பொருத்தமான. பொற்சுண்ணம்: தங்கநிறமான பொடி. இடித்தும் நாமே: நாம் இடிப்போமாக.

111. சூடகம்: கைவளை. ஆர்ப்ப ஆர்ப்ப: அசைந்து ஒலி இட இட. குழாம்: கூட்டம். நாடவர்: உலகத்தார். நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப: நம்மைப்பார்த்துச் சிரித்துப் பேசப்பேச.

பாடக மெல்அடி ஆர்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 111

வாள்தடம் கண்மட மங்கைநல்லீர்!
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டம் துதைந்துஇலங்கச்
சோத்துஎம் பிரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாள்மலர்ப் பாதம்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மைஇம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 112

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்எனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்

111. பாடகம்: கால் அணி. பராபரன்: மிகமேலானவன். ஆடகம்: பொன். மாமலை: மேருமலை. ஆட: நீர் ஆட.

112. வாள்: ஒளி. மடம்: இளமை. வண்கொங்கை: பால்வழங்கும் வள்ளல் தன்மைவாய்ந்த ஸ்தனம். முண்டம்: நெற்றி. துதைந்து: நீறு பூசப்பெற்று. சோத்து: தாழ்மையானவணக்கம். இம்மை: இப்பிறப்பிலேயே.

113. வையகம்: உலகம். உரலதாக: உரலாக அமைத்து. மேதகு: மேன்மைமிக்க.

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 113

முத்து அணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டுஇனம் ஆடஆடச்
சித்தம் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்துஎம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொடு ஆடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்தும்நாமே. 114

மின்இடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்நகைப் பண்அமர் மென்மொழியீர்!

113. தில்லைவாணன்: சிதம்பரத்தில் வாழ்கின்ற நடராஜப்பெருமான். உலகத்தையே உரலாகக்கொண்டு மேருமலையை உலக்கையாக நாட்டி உண்மையை மஞ்ச ளாக அவ்உலக்கையில் இட்டுப் பொடிஇடிக்க வேண்டும் என இப்பாட்டில் கற்பனை செய்யப் பெறுகிறது.

114 முத்துஅணி: முத்துமாலை அணிந்த: மொய் குழல்: அடர்ந்த கூந்தல். கயல்: மீன். பனி: நீர்த்துளி. பித்து: மயக்கம். பிறவி பிறரொடும் ஆட ஆட: பிறவி யானது, பிறவி என்ற அவனுக்குத் துணைவர்களான பிற ரொடும் ஆடி வீழ்ந்து ஒழிய. பிறவியையும் துணையான பிறவற்றையும் உயர்திணையில் இழிவு சிறப்பாகக் கூறப் பட்டது. பிறவியை ஊக்குவிக்கும் பிற, பிறவிக்குக் காரணமாய நல்வினை தீவினைகளும் அவற்றுக்குக் காரண மாகிய காமம் வெகுளி மயக்கம் முதலியவைகளும்.

115. மின் இடை: மின்னல் அனைய இடுப்பு. துவர்: பவளம். பண்அமர் மென்மொழி: இசை பொருந்திய மெல்லிய பேச்சு.

என்னுடை ஆர்அமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்!
பொன்திருச் சுண்ணம் இடித்தும்நாமே. 115

சங்கம் அரற்றச் சிலம்புஒலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலைஆடச்
செங்கனி வாய்இத ழும்துடிப்பச்
சேஇழை யீர்!சிவ லோகம்பாடிக்

115 இமவான் மகள்: மலையரசன் பாவை. கேள்வன்: கணவன். பார்வதிக்குப் பரமேசுவரன் கணவனாகவும் மகனாகவும் தகப்பனாகவும் தமையனாகவும் முறைமை உடையான் என்று இப்பாட்டுப் பகர்கிறது. சுத்த மாயையினின்றும் முறையே இறைவனுடைய ஞான சத்தியும் கிரியா சத்தியும் தோன்றியதாகக் கொள்ளப் படுவதில் சிவதத்துவமும் சத்தி தத்துவமும் முன்பின்னாக உண்டானமைபற்றிச் சத்திக்குச் சிவம் அண்ணன் முறையாம். சிவம் சத்தியைப் பெற்றமையால் சத்திக்குச் சிவன் தந்தை முறை. சிவத்தைச் சத்தி பெற்றமையால் சிவம் சத்திக்கு மகன் முறை. சத்தி சிவத்தைக் கூடி உலகத்தைப் பெற்றமையால் சத்திக்குச் சிவம் கணவன் முறை. இக் கருத்தை "சிவம் சத்தி தன்னை ஈன்றும் சத்திதான் சிவத்தை ஈன்றும் உவந்து இருவரும் புணர்ந்து இவ்உலகு உயிர் எல்லாம் ஈன்றும்" என்னும் சிவஞான சித்தியார்ப் பாட்டு விளக்கும்.

116. சங்கம்: வளையல். அரற்ற: ஓலம் இட. சிலம்பு: கால் சதங்கை. தாழ்குழல்: நீண்டு தொங்குகின்ற கூந்தல்.

கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலில் கொங்கைபொங்கப்
பொன்திருச் சுண்ணம் இடித்தும்நாமே. 116

தேன்அக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வான்அக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கைஏந்தும்
ஊன்அக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ்சு உண்டல்பாடிப்
பொன்திருச் சுண்ணம் இடித்தும்நாமே. 117

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழும்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்துஎங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின்று ஆடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 118

116. இரைப்ப: இரைச்சல் இட. அரா: பாம்பு. கற்றை: கூட்டம்.

117. தேன் அகம்: தேனை உள் அடக்கிய. வான் அகம்: வானாகிய இடம். மதிப்பிள்ளை: திங்களம் செல்வன் மால் விடை: பெரிய காளை. ஊன்: தசை. மாமழு சூலம்: சிறந்த மழுவாயுதமும் திரிசூலமும். உம்பர்: மேல் உலகினர். இம்பர்: இவ்உலகினர். உய்ய: பிழைக்க. போனகம்: உணவு.

118. மத்தம்: ஊமத்தைப்பூ. சிட்டர்: உயர்ந்தோர். செல்வம்: நடமாடும் தெய்வம். மாசுணம்: பாம்பு. கச்சை: அரைக்கச்சு. கங்கணம்: காப்பு. கவித்த: மூடிய. இட்டு நின்று ஆடும் அரவம்: மேல் நின்று ஆடும் பாம்பு. இடுப்பிலும் கையிலும் பாம்பு அணி. மூடிய கையின்மேல் பாம்புத்தலை ஆடுகின்றது.

திருக் கோத் தும்பி

கொச்சகக் கலிப்பா

பூஏறு கோனும் புரந்தரனும் பொற்புஅமைந்த
நாஏறு செல்வியும் நாரணனும் நான்மறையும்
மாஏறு சோதியும் வானவரும் தாம்அறியாச்
சேஏறு சேஅடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ! 119

நான்ஆர்?என் உள்ளம்ஆர்? ஞானம்ஆர்? யார்அறிவார்?
வானோர் பிரான்என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊன்ஆர் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேன்ஆர் கமலமே சென்றுஊதாய் கோத்தும்பீ! 120

திருக் கோத் தும்பி: அழகிய அரச வண்டு. வண்டை நோக்கி இறைவன் திருவடிப் போதை நுகருமாறு கூறும் பாடல்கள்.

119. பூ ஏறு கோன்: தாமரைப் பூவில் ஏறியிருக்கின்ற தலைவனாகிய பிரமன். புரந்தரன்: இந்திரன். பொற்பு: அழகு. நா ஏறு செல்வி: கலைமகள். அவள் பொற்பமைந்த நாவிலேதான் ஏறுவாள். நாரணன்: நாராயணன். நான் மறை: நான்கு வேதங்கள். மா ஏறு சோதி: சிறப்பு ஏறிய ஒளி; ஒளிகளுள் எல்லாம் சிறந்த ஒளி வடிவாகிய சூரியன். வானவர்: தேவர். தாம் அறியா: மேற்சொன்ன இவ்வளவு பேராலும் அறிய முடியாத. சே. காளைமாடு. சேவடி: செம்மையான பாதம். ஊதாய்: ஊதுவாயாக. கோத் தும்பீ: அரசவண்டே.

120. வானோர் பிரான்: மகாதேவனாகிய சிவபெருமான். ஊன்: தசை. உடை தலையில்: உடைந்த தலையோட்டில். பலி: பிச்சை. அம்பலவன்: பொன்னம்பலத்தான். தேன் ஆர் கமலம்: தேன் சொட்டும் திருவடித் தாமரை.

நினைத்தனை உள்ளதுஓர் பூவினில்தேன் உண்ணுதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்துஎலும்பு உள்நெக ஆனந்தத் தேன்சொரியும்
குனிப்புஉடை யானுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ!

கண்ணப்பன் ஒப்பதுஓர் அன்புஇன்மை கண்டபின்
என்அப்பன் என்ஒப்பில் என்னையும்ஆட் கொண்டுஅருளி
வண்ணப் பணித்துஎன்னை வாஎன்ற வான்கருணைச்
சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றுஊதாய் கோத்தும்பீ! 122

121. நினைத்தனை : நினையளவு. உண்ணுதே : உண்ணுமல். அனைத்து எலும்பு உள் நெக : எல்லா எலும்புகளும் உள்ளே உருக. குனிப்பு : கூத்து. "ஏரார் மலரெல்லாம் ஊதி நீ என் பெறுதி, பாரார் உலகம் பரவப் பெருங்கடலுள், காராமை ஆன கண்ணபுரத்து எம் பெருமான், தாரார் நறுந்துழாய் தாழ்ந்து ஊதாய் கோல் தும்பி!" என்ற திருமங்கையாழ்வார் பாசுரம் இக்கருத்துக் கொண்டது.

122. கண்ணப்பன், கண்ணைப் பிடுங்கிக் கடவுளுக்குக் கொடுத்த பரம பக்தன். கண்ணப்பன் வேறு அன்பு வேறு அல்ல; கண்ணப்பனே அன்பு என்பதை, கண்ணப்பன் ஒப்பது ஓர் அன்பு என்று அருளுகின்றார் அடிகள். என் ஒப்பில் என்னையும் : எனக்குச் சமமில்லாத என்னையும். இங்கு ஒப்பு என்பது உயர்வில் அல்ல : தாழ்வில் என்று கொள்ளுதல் வேண்டும். "யாவர்க்கும் கீழாம் அடியேனை" என்று திருவாசகம் மற்றோர் இடத்தில் செப்புதல் காண்க. வண்ணப் பணித்து. நற்குணம் பெறச் செய்து. வான் : சிறந்த. பொன் சுண்ண நீறு : திருநீறு.

வல்நெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே
கல்நெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னம் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்அம் கழலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ! 123

பொய்யாய செல்வத்தே புக்குஅழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா!என் ஆர்உயிரே! அம்பலவா! என்றுஅவன்தன்
செய்யார் மலர்அடிக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ! 124

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும்உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்துஊதாய் கோத்தும்பீ! 125

123. அன்னம் திளைக்கும்: அன்னப் பறவைகள் நீரில் மூழ்கி விளையாடும். அணி: அழகு. பொன் அம் கழல்: பொன் அனைய எழில் திருவடி.

124. மெய்யாக் கருதி: அப் பொய்ப்பொருளையே மெய் எனக்கொண்டு. செய் ஆர்: செம்மை நிறைந்த.

125. இப்பாடல் அம்மையப்பனை – உமை ஒரு கூறு உடைய இறைவடிவத்தைப் படமாகத் தருகிறது. தோல்: புலித்தோல். துகில்: ஆடை. குழை: குண்டலம். சுருள் தோடு: சுருண்ட தோடு. பால் வெள்ளை நீறு: பால் அனைய வெண்நீறு. பசும்சாந்து: பசுமையான சந்தனம். பைங்கிளி: பச்சைக்கிளி. சூலம்: முத்தலைவேல். தொக்க வளை: வளையற் கூட்டம். உடைத் தொன்மைக் கோலம்: இவ்வளவையும் உடைய பழைய வடிவம். அதுதான் அர்த்தநாரீஸ்வரக் கோலம். தோலும் குழையும், பால் வெள்ளை நீறும் சூலமும் இறைவன் பகுதியிலும் துகிலும் சுருள் தோடும் பசும் சாந்தும் பைங்கிளியும் தொக்க வளையும் இறைவியின் பாகத்திலும் விளங்குகின்றன.

கள்வன் கடியன் கலதிஇவன் என்ஞதே
வள்ளல் வரவர வந்துஒழிந்தான் என்மனத்தே
உள்ளத்த உறுதுயர் ஒன்றுஒழியா வண்ணம்எல்லாம்
தெள்ளூம் கழலுக்கே சென்றுஊதாய் கோத்தும்பீ! 126

திருத் தெள்ளேணம்

கொச்சகக் கலிப்பா

திருமாலும் பன்றியாய்ச் சென்றுஉணராத் திருவடியை
உருநாம் அறியஓர் அந்தணனாய் ஆண்டுகொண்டான்
ஒருநாமம் ஓர்உருவம் ஒன்றுமிலாற்கு ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ. 127

126. கள்வன் : திருடன். கடியன் : நீக்கத்தக்கவன். கலதி : கீழான குணமுடையான். வள்ளல் : கொடையாளி. வரவர வந்து ஒழிந்தான் என்மனத்தே : கொஞ்சம் கொஞ்சமாகவந்து என்மனத்திலே ஐக்கியமாகிவிட்டான். உள்ளத்து உறு துயர்: மனத்திலே உள்ள துன்பம். தெள்ளூம் கழல் : தெளிவு படுத்தும் திருவடி.

திருத் தெள்ளேணம் : இது பெண்கள் விளையாடும் ஒருவகை விளையாட்டு. தெள்ளேணம் கொட்டுதல் என்று பாக்களில் வருவதைப் பார்க்கும்போது இது கும்மி யடித்தலாக இருத்தல் வேண்டும் என்று தோன்றுகிறது.

127. உணரா : அறிய முடியாத. உரு நாம் அறிய : அவன் வடிவத்தை நாம் நேராகப் பார்க்குமாறு. தெள்ளேணம் கொட்டாமோ : தெள்ளேணம் கொட்டுவோமாக.

திருஆர் பெருந்துறை மேயபிரான் என்பிறவிக்
கருவேர் அறுத்தபின் யாவரையும் கண்டதுஇல்லை
அருவாய் உருவமும் ஆயபிரான் அவன்மருவும்
திருஆரூர் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ 128

அரிக்கும் பிரமற்கும் அல்லாத தேவர்கட்கும்
தெரிக்கும் படித்துஅன்றி நின்றசிவம் வந்துநம்மை
உருக்கும் பணிகொள்ளும் என்பதுகேட்டு உலகம்எல்லாம்
சிரிக்கும் திறம்பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 129

அருமந்த தேவர் அயன்திருமாற்கு அரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்புஎய்தக் கொண்டுஅருளிக்
கருவெந்து வீழக் கடைக்கணித்துஎன் உளம்புகுந்த
திருவந்த வாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ 130

கனவேயும் தேவர்கள் காண்புஅரிய கனைகழலோன்
புனவேய் அனவனைத் தோளியொடும் புகுந்துஅருளி
நனவே எனைப்பிடித்துஆட் கொண்டவா நயந்துநெஞ்சம்
சினவேல்கண் நீர்மல்கத் தெள்ளேணம் கொட்டாமோ 131

128. திரு ஆர்: செல்வம் நிறைந்த. மேய: பொருந்திய. பிறவிக் கருவேர் அறுத்தபின்: பிறப்புக்குரிய கருவை வேரோடு அறுத்த பிறகு. அரு: வடிவமிலாத் தன்மை.

129. அரி: திருமால். படித்து அன்றி: படிக்காக அல்லாமல். திறம்: வகை.

130. உகப்பு: மகிழ்ச்சி. கரு வெந்து வீழ: பிறவிக் கரு வெந்து தொலைய. கடைக்கணித்து: அருட்பார்வை செலுத்தி. திருவந்தவா: கிடைத்தற்கரிய ஐஸ்வரியம் எனக்குக் கிடைத்த விதத்தை.

131. கனவேயும்: கனவிற்கூட. காண்பு அரிய: காணமுடியாத. கனை: ஒலிக்கும். புனம்: காடு வேய்: மூங்கில். அன: ஒத்த. தோளி: உமையவள். நனவே: கண்ணுக்குத் தெரிய. நயந்து: விரும்பி. சின வேல் கண்: கோபங்கொண்ட வேலனைய விழி.

கயல்மாண்ட கண்ணிபங்கன் எனைக்கலந்து ஆண்டலுமே
அயல்மாண்டு அருவினைச் சுற்றமும்மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகம்மாண்டு என்னுடைய
செயல்மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 132

முத்திக்கு உழன்று முனிவர்குழாம் நனிவாட
அத்திக்கு அருளி அடியேனை ஆண்டுகொண்டு
பத்திக் கடலுள் பதித்த பரஞ்சோதி!
தித்திக்கு மாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ 133

உருகிப் பெருகி உளங்குளிர முகந்துகொண்டு
பருகற்கு இனிய பரங்கருணைத் தடங்கடலை
மருவித் திகழ்தென்னன் வார்கழலே நினைந்துஅடியோம்
திருவைப் பரவிநாம் தெள்ளேணம் கொட்டாமோ 134

வான்கெட்டு மாருதம்மாய்ந்துஅழல்நீர் மண்கெடினும்
தான்கெட்டல் இன்றிச் சலிப்புஅறியாத் தன்மையனுக்கு
ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வுகெட்டுஎன் உள்ளமும்போய்
நான்கெட்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ 135

---

132. கயல்: மீன். மாண்ட: மாட்சிமைப்பட்ட. அயல் மாண்டு: பக்கத்துள்ளார் மீது வைத்த பற்று ஒழிந்து. சுற்றம்: உறவு. மயல்: மயக்கம். வாசகம் மாண்டு: பேச்சு நின்று. செயல் மாண்டவா: செய்கையும் ஒடுங்கிவிட்ட விதம்.

133. முத்திக்கு: வீடு பெறுதற்கு. உழன்று: திரிந்து. அத்தி: யானை. பத்திக்கடல்: அன்பு வாரிதி

134. உருகி: உள்ளம் உருகி: பெருகி: உடல் பருத்து. முகந்து: மொண்டு. பரம்: மேலான. தடம்: பெரிய. பரவி: துதித்து.

135. வான்: ஆகாயம். கெட்டு: அழிந்து. மாருதம்: காற்று. மாய்ந்து: செத்து. அழல்: தீ. தான் கெட்டலின்றி: தான் அழிவில்லாமல். சலிப்பு: அசைவு. ஊன்: உடல். நான்: யான் எனும் ஆணவம்.

விண்ணோர் முழுமுதல்! பாதாளத் தார்வித்து!
மண்ணோர் மருந்து! அயன் மாலுடையவைப்பு! அடியோம்
கண்ணார வந்துநின்றான் கருணைக் கழல்பாடித்
தென்னா! தென்னா! என்று தெள்ளேணம் கொட்டாமோ 136

குலம்பாடிக் கொக்குஇறகும் பாடிக் கோல்வளையாள்
நலம்பாடி நஞ்சுஉண்ட வாபாடி நாள்தோறும்
அலம்புஆர் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
சிலம்புஆடல் பாடிநாம் தெள்ளேணம் கொட்டாமோ 137

திருச் சாழல்

கொச்சகக் கலிப்பா

தென்பால் உகந்துஆடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடீ?

---

136. வித்து: விதை. மருந்து: அமிழ்தம். வைப்பு: சேம நிதி. கடவுளைத் தென்னா தென்னா என்பதில் அடிகட்கு மிகவும் விருப்பம்.

137. குலம்: உயர்ச்சி. கொக்கு இறகு, சிவன் தலையிலிருப்பது. கோல் வளை: சங்கு வளையல். நலம்: சிறப்பு. நஞ்சு உண்டவா: விஷம் உட்கொண்ட விதம். அலம்புதல்: அசைதல். புனல்: நீர். சிலம்பு ஆடல்: சிலம்பின் ஆட்டம்.

திருச் சாழல்: நங்கையர் விளையாட்டுகளுள் ஒன்று. இருவர் ஆடுகின்றனர். ஒருவர் வினவுவது, மற்றவர் விடை கூறுவது என்ற முறையில் இரண்டு அடிகள் கேள்வியாகவும் பின் இரண்டு வரிகள் பதிலாகவும் பாட்டு வருகிறது. சாழல் விளையாட்டைக் குறிக்கப் பாட்டின் இறுதி சாழலோ என்று முடிகிறது.

138. தென்பால்: தெற்குப் பக்கம் பார்த்து. உகந்து: விரும்பி. பெண்பால்: பெண் பக்கத்தை. காண் ஏடி: அடியே பார்.

பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகுஎய்தி வீடுவர்காண் சாழலோ. 138

மலைஅரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண்திருவை
உலகுஅறியத் தீவேட்டான் என்னும்அது என்னேடீ?
உலகுஅறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகுஅனைத்தும்
கலைநவின்ற பொருள்கள்எல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலும்அது என்னேடீ?
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணிஎலாம்
ஊன்புக்க வேல்காளிக்கு ஊட்டாம்காண் சாழலோ. 140

அம்பலத்தே கூத்துஆடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவன்என்று நண்ணும்அது என்னேடீ?
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாம்அறியா
எம்பெருமான் ஈசாஎன்று ஏத்தினகாண் சாழலோ. 141

138. இரு நிலம்: பெரிய உலகம். விண்பால்: விண்ணுலகு ஏற. யோகு எய்தி: யோகம் செய்து. வீடுவர்: சாவார்கள்.

139. பாவை: பார்வதி. வாள்நுதல்: ஒளியுடைய நெற்றி. பெண்திரு: பெண் செல்வம். தீ வேட்டான்: அக்னி சாட்சியாக மணந்தான். கலை நவின்ற: நூல்கள் சொல்லிய. கலங்கிடும்: கலக்கமடையும்.

140. புக்க: புகுந்த. தண்: குளிர்ந்த, பணை. வயல். நட்டம் பயிலுதல்: நடனம் ஆடுதல். தரணி: உலகம். ஊன்புக்க: புலாலில் பாய்ந்த. ஊட்டு ஆம்: ஊட்டப் படும் உணவு ஆகிவிடும்.

141. பலி திரிதல்: பிச்சை எடுத்தல். நம்பன்: சிறந்தவன். அறியா: அறிய முடியாமல்.

அம்பரம்ஆம் புள்ளித்தோல் ஆலாலம் ஆர்அமுதம்
எம்பெருமான் உண்டசதுர் எனக்குஅறிய இயம்பேடீ?
எம்பெருமான் ஏதுஉடுத்துஅங்கு ஏதுஅமுது செய்திடினும்
தம்பெருமை தான்அறியாத் தன்மையன்காண் சாழலோ. 142

திருப் பூ வல்லி

கொச்சகக் கலிப்பா

இணையார் திருவடி என்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்துஒழிந்தேன்
அணைஆர் புனல்தில்லை அம்பலத்தே ஆடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 143

எந்தைஎந்தாய் சுற்றம்மற்றும் எல்லாம் என்னுடைய
பந்தம் அறுத்தென்னை ஆண்டுகொண்ட பாண்டிப்பிரான்
அந்த இடைமருதில் ஆனந்தத் தேன்இருந்த
பொந்தைப் பரவிநாம் பூவல்லி கொய்யாமோ. 144

142. அம்பரம்: ஆடை. புள்ளித் தோல்: புள்ளிகளையுடைய புலித்தோல். ஆலாலம்: ஆலகால விஷம். அமுதம்: உணவு சதுர்: சாமர்த்தியம். தன்மையன்: இயல்பினன்.

திருப் பூ வல்லி: கொடியினின்றும் பூப் பிரித்தல். வல்லி: கொடி.

143. இணை: இரண்டு. அணை: கரை. புணையாளன்: பிறவிக் கடலினின்றும் கரையேற்றக்கூடிய தோணியாக அமைந்தவன். புணை: தெப்பம்.

144. பந்தம்: கட்டு. பாண்டிப்பிரான்: தென்னாடுடைய சிவன். அந்த, சுட்டுப் பொருளில் வந்தது; எல்லோருக்கும் தெரிந்த அந்த என்பது பொருள். இடைமருது: திருவிடைமருதூர். ஆனந்தத் தேன் என்றது கடவுளை. தேன் இருந்த பொந்து, இறைவன் திருக்கோவில். மருது மரவகைகளில் ஒன்ருகலின் அதிலுள்ள கோவில் பொந்தாகவும் அங்குள்ள கடவுள் தேனகவும் உருவகப் படுத்தப்பெற்றமை நயம் கொண்டவை.

நாயில் கடைப்பட்ட நம்மையும்ஓர் பொருட்படுத்துத்
தாயில் பெரிதும் தயாஉடைய தம்பெருமான்
மாயப் பிறப்புஅறுத்து ஆண்டான்என் வல்வினையின்
வாயில் பொடிஅட்டிப் பூவல்லி கொய்யாமோ. 145

தேன்ஆடு கொன்றை சடைக்குஅணிந்த சிவபெருமான்
ஊன்நாடி நாடிவந்து உள்புகுந்தான் உலகர்முன்னே
நான்நாடி ஆடிநின்று ஓலம்இட நடம்பயிலும்
வானோர் கோவுக்கே பூவல்லி கொய்யாமோ. 146

வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்து
இணங்கத்தன் சீர் அடியார் கூட்டமும்வைத்து எம்பெருமான்
அணங்கொடு அணிதில்லை அம்பலத்தே ஆடுகின்ற
குணம்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 147

திண்போர் விடையான் சிவபுரத்தார் போர்஋று
மண்பால் மதுரையில் பிட்டுஅமுது செய்துஅருளித்

---

145. தயா: அருள். மாயம்: வஞ்சகம். வல்வினையின் வாயில் பொடி அட்டி: வலிய வினையின் வாயிலே மண்ணைப் போட்டு. பூ வல்லி கொய்யாமோ: கொடியிலே மலர் கொய்வோமாக.

146. ஊன்: உடம்பு. நாடி: தேடி. ஆடி நின்று: கூத்தாடி நின்று. ஓலம் இட: அபயம் என்று அலற.

147. வார் கழல் என்பதை அரிமாநோக்காக தலைக்கும் வாய்க்கும் கொள்க. வார்கழல் வணங்கத் தலை வைத்து, வார்கழல் வாழ்த்த வாய் வைத்து என்று. வார் கழல்: வீரச் சிலம்பு அணிந்த பாதம். இணங்க: கலப்பதற்கு. தன் சீர் அடியார்: சிவனடியார். அணங்கொடு: சிவகாமி அம்மையோடு. குணம்: அருட்குணம். கூர: மிகுதியும்.

148. திண்: வலிய. போர் விடை: அமர் செய்ய வல்ல காளை. போர் ஏறு: யுத்த சிங்கம். மண்பால்: மண்ணுலகத்திலுள்ள.

தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ. 148
சீரார் திருவடித்திண் சிலம்பு சிலம்புஒலிக்கே
ஆராத ஆசையதாய் அடியேன் அகம்மகிழத்
தேர்ஆர்ந்த வீதிப் பெருந்துறையான் திருநடம்செய்
பேர்ஆனந் தம்பாடிப் பூவல்லி கொய்யாமோ. 149
மாஆர ஏறி மதுரைநகர் புகுந்துஅருளித்
தேவுஆர்ந்த கோலம் திகழப் பெருந்துறையான்
கோஆகி வந்துஎம்மைக் குற்றேவல் கொண்டுஅருளும்
பூஆர் கழல்பரவிப் பூவல்லி கொய்யாமோ. 150

திரு உந்தியார்

கலித் தாழிசை

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற!
ஒருங்குஉடன் வெந்தாவாறு உந்தீபற! 151

---

148. தண்டு: பிரம்பு. பணி: ஏவல். புண்பாடல் பாடி: புண்ணைப்பற்றிய பாடலைப் பாடி.

149. சிலம்பு சிலம்பு ஒலி: பாதசரம் சப்திக்கின்ற ஓசை. ஆராத: அடங்காத.

150. மா. குதிரை. தேவு ஆர்ந்த கோலம்: தெய்வத் தன்மை நிரம்பிய அழகு. பூ ஆர் கழல்: பூக்கள் நிறைந்த திருவடி.

திருஉந்தியார்: இதுவும் மங்கையர் விளையாட்டுப் பற்றியதே. 'உந்தீபற' எனப் பாடல்களில் வருவதால் பந்து போன்ற கருவியைக் கையினால் மேலே வீசிப் பறந்து போ எனச் சொல்லி விளையாடும் ஒரு விளையாட்டாக இருத்தல் கூடும். உந்தி விளையாடும் கருவியின் பெயராக இருக்கலாம்.

151. பூசல்: சண்டை. உளைந்தன: வருந்தின. பற: பறப்பாயாக. ஒருங்கு உடன். திரிபுரம் முழுதும் ஒன்று சேர.

ஈர்அம்பு கண்டிலம் ஏகம்பர் தம்கையில்
ஓர்அம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற 152

பாலக னார்க்கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீபற!
குமரன்தன் தாதைக்கே உந்தீபற! 153

தேரை நிறுத்தி மலைஎடுத் தான்சிரம்
ஈர்ஐந்தும் இற்றவாறு உந்தீபற!
இருபதும் இற்றதுஎன்று உந்தீபற 154

ஏகாசம் இட்ட இருடிகள் போகாமல்
ஆகாசம் காவல்என்று உந்தீபற!
அப்பாலும் காவல்என்று உந்தீபற! 155

---

152. ஏகம்பர் : காஞ்சியிலுள்ள கடவுள் பெயர். ஓர் அம்பே முப்புரம் : ஒரே பாணத்துக்குத் திரிபுரம் இரை யாகிவிட்டது. ஒன்றும் பெரு மிகை : அவ் ஒரு அம்பே மிகுதி.

153. பாலகன் : உபமன்யு முனிவன். கோலம் : அழகு.

154. தேரை நிறுத்தி மலை எடுத்தான் : தன் ரதத்தை நிறுத்திவிட்டுக் குறுக்கே தடுத்த கைலை மலையை எடுத்த இராவணன். சிரம் ஈரைந்து : தலைபத்து. இற்றவாறு : நெரிந்தவிதம். இருபது : இருபது தோள்கள்.

155. ஏகாசம் : மேற்போர்வை. இருடிகள் : ரிஷிகள்.

திருத் தோள் நோக்கம்

கொச்சகக் கலிப்பா

பொருள்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல்விளங்கச்
செருப்புஉற்ற சீர் அடி வாய்க்கலசம் ஊன் அமுதம்
விருப்புஉற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்துஅங்கு
அருள்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ. 156

கற்போலும் நெஞ்சம் கசிந்துஉருகக் கருணையினால்
நிற்பானைப் போலஎன் நெஞ்சினுள்ளே புகுந்துஅருளி
நற்பால் படுத்துஎன்னை நாடுஅறியத் தான்இங்ஙன்
சொற்பாலது ஆனவா தோள்நோக்கம் ஆடாமோ. 157

மானம் அழிந்தோம் மதிமறந்தோம் மங்கைநல்லீர்!
வானம் தொழும்தென்னன் வார்கழலே நினைந்துஅடியோம்
ஆனந்தக் கூத்தன் அருள்பெறில்நாம் அவ்வணமே
ஆனந்தம் ஆகின்று ஆடாமோ தோள்நோக்கம். 158

திருத்தோள் நோக்கம்: தோளைப் பார்த்து ஆடும் ஒரு விளையாட்டு. இது பாடிக்கொண்டு நடனம் ஆடுவதாக இருத்தல் வேண்டும்.

156. பொருள்பற்றி: பூசைக்கு உரிய பொருள்களைக் கொண்டு. செருப்பு உற்ற சீர் அடி: கண்ணப்பரது செருப்பு அணிந்த சிறந்த கால். வாய்க்கலசம்: அவருடைய வாயாகிய குடம். ஊன் அமுதம்: அவர் அளித்த புலால் உணவு. வேடனார்: கண்ணப்பநாயனார். சேடுஅறிய: பெருமையை அறிந்து. நின்றவா: நின்றவகையைப் பாடி. தோள் நோக்கம் ஆடாமோ: தோள் நோக்கமாக ஆடுவோமாக.

157. நற்பால் படுத்து: நல்ல நெறியில் ஈடுபடுத்தி. சொற்பாலது ஆனவா: எல்லாரும் சொல்லிப் பேசும்படி செய்த விதத்தைப் பாடி.

158. மானம்: தான் என்ற பெருமை. மதி: எல்லாம் தனக்கே தெரியும் என்ற புத்தி. வானம்: வானவர்கள். அவ்வணமே: அவ்விதமாகவே.

ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலம்எல்லாம்
பாழுக்கு இறைத்தேன் பரம்பரனைப் பணியாதே
ஊழிமுதல் சிந்ாத நன்மணிவந்து என்பிறவித்
தாழைப் பறித்தவா தோள்நோக்கம் ஆடாமோ. 159

உரைமாண்ட உள்ஒளி உத்தமன்வந்து உளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்துஓடத்
துரைமாண்ட வாபாடித் தோள்நோக்கம் ஆடாமோ. 160

திருப் பொன் ஊசல்

ஆறடித் தரவு கொச்சகக் கலிப்பா

சீர்ஆர் பவளம்கால் முத்தம் கயிறுஆக
ஏர்ஆரும் பொற்பலகை ஏறி இனிதுஅமர்ந்து
நாரா யணன்அறியா நாள்மலர்த்தாள் நாய்அடியேற்கு

---

159. ஏழைத் தொழும்பனேன்: அறிவு இல்லாத் தொண்டனாகிய நான். பாழுக்கு இறைத்தேன்: பயனின்றி வீணாக நீரைப் பாய்ச்சினேன். ஊழி முதல்: ஊழிக்காலத்தினும் முடிவு பெறாத முதல்வன். சிந்ாத: அழியாத. பிறவித் தாழ்: பிறவியின் வேர். பறித்தவா: பிடுங்கிய முறையைப் பாடி.

160. உரை மாண்ட: சொல்லின் எல்லையைக் கடந்த. உளம்புகலும்: உள்ளே நுழைந்ததும். கரைமாண்ட: கரையை மீறிய. இரை மாண்ட இந்திரியப் பறவை: தமக்கு உணவு கிடைக்காமல் போன ஐம்புலனாகிய பறவை. இரிந்து ஓட: நிலைகெட்டு ஓட்டம் எடுக்க. துரை: தங்கும் இடம். துரை என்பது மெலித்தல் விகாரம் பெற்றது எதுகை நோக்கி.

திருப் பொன் ஊசல்: அழகிய தங்கத்தால் ஆய ஊஞ்சலிலிருந்து ஆடல்.

161. பவளம் கால்: பவளத்தால் தூண்நாட்டி. முத்தம் கயிறு ஆக: முத்து வடங்களைக் கயிறாகக் கட்டி. ஏர் ஆரும் பொற்பலகை: மாற்று உயர்ந்த தங்கத்தால் செய்த ஊஞ்சல் பலகை. நாள் மலர்: அன்று பூத்த பூ.

ஊராகத் தந்துஅருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடிப்
போர்ஆர்வேல் கண்மடவீர்! பொன்ஊசல் ஆடாமோ.

மூன்றுஅங்கு இலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலர்அடிகள்
தேன்தங்கித் தித்தித்து அமுதுஊறித் தான்தெளிந்துஅங்கு
ஊன்தங்கி நின்றுஉருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன்தங்கு இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றுஅங்கு அனநடையீர்! பொன்ஊசல் ஆடாமோ.

முன்ஈறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்
பல்நூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்நீறு எனக்குஅருளித் தன்கருணை வெள்ளத்து
மன்ஊற மன்னும்மணி உத்தர கோசமங்கை
மீன்ஏறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்ஏறு பூண்முலையீர்! பொன்ஊசல் ஆடாமோ. 163

---

161 ஊர் ஆக: தங்கும் இடமாக. ஆரா அமுது: தெவிட்டாத அமுதனைய பிரான். போர் ஆர் வேல் கண்: போரில் செல்லும் வேல்அனைய விழி. மடவீர்: நங்கையர்களே. பொன்ஊசல் ஆடாமோ: பொன்னாலாய ஊஞ்சலில் இருந்து ஆடுவோமாக.

162. இலங்கு: விளங்குகின்ற. நயனம்: கண். மூவாத: மூப்புப் பெறாத. ஊன்தங்கி: உடலில் பொருந்தி: இடைமருது: திருவிடைமருதூர். குலம்: சிறந்த. மஞ்ஞை. மயில். அங்கு: அசை.

163. முன்: நினைத்துப்பார்த்தால். ஈறும் ஆதியும்: முடிவும் முதலும். முனிவர் குழாம்: ரிஷிகள் கூட்டம். இமையோர்: தேவர். மன்: நிலையாக. மன்னும்: பொருந்தியிருக்கின்ற. மணி: அழகு. மின் ஏறு: மின்ஒளி பாயும். வியன்: பெரிய. பூண்: நகை.

நஞ்சுஅமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அம்சொலாள் தன்னோடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுஉளே நின்றுஅமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்புஅறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சப் ஆர் வெள்வளையீர்! பொன்ஊசல் ஆடாமோ. 164

ஆணோ அலியோ அரிவையோ என்றுஇருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்யஆட் கொண்டுஅருளி நஞ்சுதனை
ஊண்ஆக உண்டுஅருளும் உத்தர கோசமங்கைக்
கோண்ஆர் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூண்ஆர் வனமுலையீர்! பொன்ஊசல் ஆடாமோ. 165

மாதுஆடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதுஆடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டுஎன் தொல்பிறவித்
தீதுஓடா வண்ணம் திகழப் பிறப்புஅறுப்பான்
காதுஆடு குண்டலங்கள் பாடிக் கசிந்துஅன்பால்
போதுஆடு பூண்முலையீர்! பொன்ஊசல் ஆடாமோ. 166

---

164. நஞ்சுஅமர்: விஷம் தங்கும். கண்டம்: கழுத்து. அண்டத்தவர்: வானவர். மஞ்சுதோய்: மேகம்படிகின்ற. அம்சொலாள்: அழகிய பேச்சினளாகிய உமை. துஞ்சல்: இறப்பு. புஞ்சம்: கூட்டம்.

165. அலி: ஆணும் பெண்ணும் அற்ற வடிவம். அரிவை: பெண். இருவர்: திருமாலும் பிரமனும். நாணாமே: அஞ்சாமல். உய்ய: உயிர்தப்ப. ஊண்ஆக: உணவாக. கோண்ஆர்பிறை: வளைந்த மதி. சென்னி: தலை. பூண்: ஆபரணம். வனம்: அழகு.

166. மாது ஆடு: அம்பிகை கூடிய. தாது: மகரந்தத்தூள். கோதாட்டி: பாராட்டி. பிறவித் தீது: பிறவித் தீமை. ஓடாவண்ணம்: மேல்வாராதபடி. திகழ: விளங்க. போது ஆடு: மலர்மாலை அசைகின்ற.

உன்னற்கு அரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்துஇருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்துஇறைஞ்சப் பாவங்கள் பற்றுஅறுப்பான்
அன்னத்தின் மேல்ஏறி ஆடும் அணிமயில்போல்
என்அத்தன் என்னையும்ஆட் கொண்டான் எழில்பாடிப்
பொன்ஒத்த பூண்முலையீர்! பொன்ஊசல் ஆடாமோ. 167

கோல வரைக்குடுமி வந்து குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதுஎழுந்து
ஞாலம் மிகப்பரிமேல் கொண்டு நமைஆண்டான்
சீலம் திகழும் திருஉத்தர கோசமங்கை
மாலுக்கு அரியானை வாய்ஆர நாம்பாடிப்
பூலித்து அகம்குழைந்து பொன்ஊசல் ஆடாமோ. 168

தெங்குஉலவு சோலைத் திருஉத்தர கோசமங்கை
தங்குஉலவு சோதித் தனிஉருவம் வந்துஅருளி
எங்கள் பிறப்புஅறுத்திட்டு எந்தாமும் ஆட்கொள்வான்

167. உன்னற்கு அரிய: நினைப்பதற்கு அருமையான. மன்னி: நிலைபெற்று. பொலிந்து: விளங்கி. பன்னி: பலகாலும் சொல்லி. பணிந்து இறைஞ்ச: தாழ்ந்து வணங்க. பற்று: தொடர்பு. அன்னத்தின்மேல் ஏறி: அன்னப் பறவை போன்ற ஊஞ்சலின்மீது ஏறி. என் அத்தன்: என் தகப்பன். பொன் ஒத்த பூண்: நகையணிந்த தங்க நிறமான.

168. கோல வரைக்குடுமி வந்து: அழகிய கைலை மலையின் உச்சியினின்றும் இறங்கிவந்து. குவலயம்: உலகம். சால: மிக. தாழ் கடலின் மீது எழுந்து: ஆழமான கடலின் அலைபோல மேலேகிளம்பி. ஞாலம் மிக: உலகம் மேம்பாடு அடைய. பரிமேல்கொண்டு: குதிரைமீது சவாரி கொண்டு. சீலம்: ஒழுக்கம். பூலித்து: உடல்பூரிப்படைந்து.

169. தெங்கு: தென்னை. தங்குஉலவு: தங்கி விளங்குகின்ற. தனிஉருவம்: ஒப்பற்ற வடிவம். ஆட்கொள்வான்: அடிமை கொள்ளும் பொருட்டு.

பங்குஉலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குஉலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குஉலவு பூண்முலையீர்! பொன்னூசல் ஆடாமோ. 169

அன்னைப் பத்து

கலி விருத்தம்

கண்அஞ் சனத்தர் கருணைக் கடலினர்
உள்நின்று உருக்குவர் அன்னே என்னும்
உள்நின்று உருக்கி உலப்புஇலா ஆனந்தக்
கண்நீர் தருவரால் அன்னே என்னும். 170

நித்தம் மணாளர் நிரம்ப அழகியர்
சித்தத்து இருப்பரால் அன்னே என்னும்
சித்தத்து இருப்பர் தென்னன் பெருந்துறை
அத்தர் ஆனந்தரால் அன்னே என்னும். 171

169. கோதை: மாலையணிந்த பெண் இங்கு உமா தேவி. பணிகொண்ட: ஏவலாளாக ஏற்றுக்கொண்ட. கொங்கு: தேன். பொங்கு உலவு பூண்முலை, என்பதை பூண்உலவு பொங்குமுலை என மாற்றுக. நகைகள் கிடக்கின்ற பூரித்தகொங்கை என்பது பொருள்.

அன்னைப்பத்து: இது கடவுளைக் காதலித்தமகள், தாயை நோக்கிக் கூறுவதாக ஆக்கப்பட்ட பத்துப் பாசுரங்கள் கொண்டது.

170. கண்அஞ்சனத்தர்: கண்ணில் மை அணிந்தவர். உள்நின்று: என்மனத்துள்ளே நின்று. அன்னே: தாயே. என்னும்: என்றுசொல்வாள். உலப்புஇலா: வற்றாத.

171. நித்தம் மணாளர்: நித்திய கல்யாணக்கோலம் உடையவர். சித்தம்: மனம்.

நீண்ட காத்தர் நெறிதரு குஞ்சியர்
பாண்டிநல் நாடரால் அன்னே என்னும்
பாண்டிநல் நாடர் பரந்துஎழு சிந்தையை
ஆண்டுஅன்பு செய்வரால் அன்னே என்னும். 172

தையல்ஓர் பங்கினர் தாபத வேடத்தர்
ஐயம் புகுவரால் அன்னே என்னும்
ஐயம் புகுந்தவர் போதலும் என்உள்ளம்
நையும் இதுஎன்னே அன்னே என்னும். 173

கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே என்னும்
துன்றிய சென்னியின் மத்தம்உன் மத்தமே
இன்றுஎனக்கு ஆனவாறு அன்னே என்னும். 174

172. நீண்டகரத்தர்: முழந்தாளைத் தொடும் நீண்ட கைகளை உடையவர். நெறிதரு குஞ்சியர்: அடர்ந்த தலை முடியினர். பரந்து எழு சிந்தை: எங்கும் அலைந்து திரியும் மனத்தை.

173. தையல்: பார்வதி. தாபதவேடம்: தவத் திரு மேனி. ஐயம். பிச்சை. போதலும்: செல்லுதலும். நையும்: வருந்தும்.

174. கொன்றை: கொன்றைமாலை. மதியம்: சந்திரன். கூவிளம்: வில்வம். மத்தம்: ஊமத்தம்பூ. துன்றிய: நெருங்கிய. சென்னி: தலை. மத்தமாகிய ஊமத்தை எனக்கு உன்மத்தத்தை உண்டாக்கிவிட்டது.

குயில் பத்து

அறுசீர் விருத்தம்

ஏர்தரும் ஏழ்உலகு ஏத்த
எவ்உரு வும்தன் உருவாம்
ஆர்கலி சூழ்தென் இலங்கை
அழகுஅமர் வண்டோ தரிக்குப்
பேர்அருள் இன்பம் அளித்த
பெருந்துறை மேய பிரானைச்
சீரிய வாயால் குயிலே!
தென்பாண்டி நாடனைக் கூவாய்! 175

தேன்பழச் சோலை பயிலும்
இறுகுயி லே!இது கேள்நீ
வான்பழித்து இம்மண் புகுந்து
மனிதரை ஆட்கொண்ட வள்ளல்
ஊன்பழித்து உள்ளம் புகுந்துஎன்
உணர்வது வாய ஒருத்தன்
மான்பழித்து ஆண்டமென் நோக்கி
மணாளனை நீவரக் கூவாய்! 176

குயில் பத்து : குயிலைப்பார்த்துக் கூறும் பதிகம்.

175. ஏர்தரும் : அழகு கொண்ட. ஆர்கலி : நிறைந்த ஒலியைஉடைய கடல். வண்டோதரி : இராவணன் மனைவி யாகிய சிவனடியாள்.

176. தேன்பழச்சோலைபயிலும் : தேன்பொருந்திய கனிக்காவிலே பழகும். இதுகேள் : நான் சொல்லும் இதைக் கேட்பாயாக. வான்பழித்து : விண்ணை இகழ்ந்து ஊன்பழித்து : உடம்பை இழித்து. உணர்வதுவாய : அறிவோடு கலந்த. மான்பழித்து : மானின்கண்ணை ஏசி. மென் நோக்கி : மெல்லியவிழியினள். மணாளன் : நாயகன்.

இன்பம் தருவன் குயிலே!
ஏழ்உல கும்முழுது ஆளி
அன்பன் அமுதுஅளித்து ஊறும்
ஆனந்தன் வான்வந்த தேவன்
நன்பொன் மணிச்சுவடு ஒத்த
நற்பரி மேல்வரு வானைக்
கொம்பில் மிழற்றும் குயிலே!
கோகழி நாதனைக் கூவாய்! 177

உன்னை உகப்பன் குயிலே!
உன்துணைத் தோழியும் ஆவன்
பொன்னை அழித்தநல் மேனிப்
புகழில் திகழும் அழகன்
மன்னன் பரிமிசை வந்த
வள்ளல் பெருந்துறை மேய
தென்னவன் சேரலன் சோழன்
சீர்ப்புயங் கன்வரக் கூவாய்! 178

177. இன்பம் தருவன் குயிலே: குயிலே உனக்கு இன்பம் பெருக்குவேன். ஆளி: ஆள்பவன். ஊறும்: அடியார் உள்ளத்திலே ஊறுகின்ற. நன்பொன்: நல்ல தங்கம். மணி: இரத்தினம். சுவடுஒத்த: அடையாளம் உடைய. நற்பரி: சாதிக்குதிரை. தங்கமும் மணிகளும் இழைத்தது போன்ற நிறமும் வடிவமும் கொண்ட குதிரைஎன்பது கருத்து. கொம்பின் மிழற்றும் குயிலே: மரக்கிளைகளிலே இருந்து இசை பயிலும் குயிலே. கோகழிநாதன்: பெருந்துறையில் மேயபிரான். கூவாய்: கூவுவாயாக.

178. உகப்பன்: விரும்புவேன். அழித்த: ஒளி மங்கச் செய்த. தென்னவன்: பாண்டியன். சேரலன்: சேர மன்னன். புயங்கன்: பாம்புகளை அணிந்தவன்.

வா இங்கே நீகுயில் பிள்ளாய் !
மாலொடு நான்முகன் தேடி
ஓவிஅவர் உன்னி நிற்ப
ஒண்கழல் விண்பிளந்து ஓங்கி
மேவிஅன்று அண்டம் கடந்து
விரிசுடர் ஆய்நின்ற மெய்யன்
தாவி வரும்பரிப் பாகன்
தாழ்சடை யோன்வரக் கூவாய் ! 179

கொந்துஅண வுப்பொழில் சோலைக்
கூங்குயி லே! இது கேள்நீ
அந்தணன் ஆகிவந்து இங்கே
அழகிய சேவடி காட்டி
எந்தமர் ஆம்இவன் என்றுஇங்கு
என்னையும் ஆட்கொண்டு அருளும்
செந்தழல் போல்திரு மேனித்
தேவர் பிரான்வரக் கூவாய் ! 180

179. ஓவி : ஒழிந்து. உன்னி : எண்ணி. ஒண்தழல் விண்பிளந்து ஓங்கி : ஒளி நெருப்பாக வானைக் கீறிக் கொண்டு நிமிர்ந்து. அண்டம் கடந்து : எல்லா உலகங் களையும் ஊடுருவி.

180. கொந்து : பூங்கொத்து. அணவுதல் : நெருங்கு தல். கூம்குயில் : கூவுங் குயில். எம் தமர் ஆம் இவன் என்று : எமது உறவினர்களுள் இவனும் ஒருவன் ஆவன் என்று. இங்கு : இவ்விடத்திலேயே. செந்தழல்போல் திருமேனி : செவ்விய நெருப்புப் போன்ற திரு உருவம்.

திருத் தசாங்கம்

நேரிசை வெண்பா

பெயர்

ஏர்ஆர் இளங்கிளியே! எங்கள் பெருந்துறைக்கோன்
சீர்ஆர் திருநாமம் தேர்ந்துஉரையாய்!—ஆரூரன்
செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான் செப்புவபோல்
எம்பெருமான் தேவர்பிரான் என்று. 181

நாடு

ஏதம்இலா இன்சொல் மரகதமே! ஏழ்பொழிற்கும்
நாதன்நமை ஆள்உடையான்நாடு உரையாய்!-காதலவர்க்கு
அன்புஆண்டு மீளா அருள்புரிவான் நாடுஎன்றும்
தென்பாண்டி நாடே தெளி. 182

ஊர்

தாதுஆடு பூஞ்சோலைத் தத்தாய்! நமைஆளும்
மாதுஆடும் பாகத்தன் வாழ்பதிஎன்?—கோதாட்டிப்
பத்தர்எலாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும்
உத்தர கோசமங்கை ஊர். 183

திருத்தசாங்கம்: அரசனுக்கு உரிய பத்து உறுப்புக்கள்.

181. நாமம்: பெயர். தேர்ந்து: ஆராய்ந்து. உரையாய்: சொல்வாயாக. ஆரூரன்: திருவாரூரில் வீற்றிருக்கின்ற கடவுளானவன். செம்பெருமான்: ருத்திரனும். வெண்மலரான்: பிரமனும். பாற்கடலான்: திருமாலும். செப்புவபோல்: சொல்வதுபோல.

182. ஏதம்: குற்றம். மரகதம்: பச்சைக்கிளி. பொழில்: உலகம். காதலவர்: மெய்யடியார். மீளா: மீண்டுபிறவா. தென்பாண்டிநாடு: தமிழ்நாட்டின் தெற்கே பொருந்திய பாண்டியநாடு. தெளி: தேறுவாயாக.

183. தாதுஆடு: மகரந்தப்பொடி தங்கிய. தத்தாய்: கிளியே. பதி: ஊர். கோதாட்டி: பாராட்டி. பார்: பூமி.

ஆறு

செய்யவாய்ப் பைஞ்சிறகின் செல்வீ! நம் சிந்தைசேர்
ஐயன் பெருந்துறையான் ஆறுஉரையாய் ?—தையலாய்
வான்வந்த சிந்தை மலம்கழுவ வந்துஇழியும்
ஆனந்தம் காண்உடையான் ஆறு. 184

மலை

கிஞ்சுகவாய் அம்சுகமே! கேடுஇல் பெருந்துறைக்கோன்
மஞ்சன் மருவும் மலைபகராய்!— நெஞ்சத்து
இருள்அகல வாள்வீசி இன்புஅமரும் முத்தி
அருளும்மலை என்பதுகாண் ஆய்ந்து. 185

ஊர்தி

இப்பாடே வந்துஇயம்பு! கூடுபுகல்! என்கிளியே!
ஒப்புஆடாச் சீர்உடையான் ஊர்வது என்னே!—எப்போதும்
தேன்புரையும் சிந்தையராய்த் தெய்வப்பெண் ஏத்திசைப்ப
வான்புரவி ஊரும் மகிழ்ந்து. 186

184. பைஞ் சிறகின் செல்வீ: பசிய சிறகையுடைய திருவே. செல்வீஎனக் கிளியை அன்போடு அழைக்கின்றார். தையலாய்: பெண்ணே. உள்ள அழுக்கைக் கழுவ வந்து பொருந்தும் மகிழ்ச்சிப்பெருக்கே, உடையானுக்கு நதியாகும் என்பது கருத்து.

185. கிஞ்சுகம்: சிவப்பு. அம்சுகம்: அழகியகிளி. வாள்வீசி: ஒளிபரப்பி. முத்தி அருளும் மலை: வீடுதரும் மலை.

186. பாடு: பக்கம். கூடுபுகல்: கூட்டுக்குள் நுழையாதே. ஒப்பு ஆடா: ஈடுஇல்லாத. ஊர்வது: செலுத்தும் வாகனம். புரை: ஒத்த. வான்புரவி: ஆகாயக் குதிரை.

படை

கோல்தேன் மொழிக்கிள்ளாய்! கோதுஇல் பெருந்துறைக்கோன்
மாற்றாரை வெல்லும் படைபகராய்!—ஏற்றார்
அழுக்குஅடையா நெஞ்சுஉருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை. 187

முரசு

இன்பால் மொழிக்கிள்ளாய்! எங்கள் பெருந்துறைக்கோன்
முன்பால் முழங்கும் முரசுஇயம்பாய்!— அன்பால்
பிறவிப் பகைகலங்கப் பேர்இன்பத்து ஓங்கும்
பருமிக்க நாதப் பறை. 188

மாலை

ஆய மொழிக்கிள்ளாய்! அள்ஊறும் அன்பர்பால்
மேய பெருந்துறையான் மெய்த்தார்என்?— தீயவினை
நாளும்அணு காவண்ணம் நாயேனை ஆள்உடையான்
தாளிஅறு காம்உவந்த தார். 189

187. கோல்தேன்: கொம்புத்தேன். கோது: குற்றம். மாற்றார்: பகைவர். படை: ஆயுதம். பகராய்: சொல்வாயாக. ஏற்றார்: இரந்து அருள்பெற்றவர். மும்மலங்கள் பாயும்: மூன்று மலங்களையும் பாய்ந்து தொலைக்கும். கழுக்கடை: திரிசூலம்.

188. இன்பால்: இனியபாலனைய. முன்பால்: முன் பக்கம். அன்பால்: அன்பினாலே. பருமிக்க: மிகப்பெரிய. நாதம்: ஓசை.

189. ஆயமொழிக் கிள்ளாய்: ஆராய்ந்த சொல்லையுடைய கிளியே. அள் ஊறுதல்: வாய் ஊறுதல். தார்: மாலை. தாளிஅறுகு: கொடியறுகு. உவந்த: விரும்பிய.

கொடி

சோலைப் பசுங்கிளியே! தூநீர்ப் பெருந்துறைக்கோன்
கோலம் பொலியும் கொடிகூறாய்!— சாலவும்
ஏதிலார் துண்என்ன மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதுஇலா ஏறாம் கொடி. 190

திருப்பள்ளி எழுச்சி

எண்சீர் விருத்தம்

போற்றிஎன் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத்து எமக்குஅருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றுஇதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
ஏற்றுஉயர் கொடிஉடை யாய்!எனை உடையாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 191

190. தூ: பரிசுத்தம். கோலம்: அழகு. பொலிதல்: விளங்குதல். சால: மிக. ஏதிலார். எதிரிகள். துண் என்ன: நடுநடுங்க. ஏறு: ரிஷபம்.

திருப்பள்ளி எழுச்சி; துயில்நீத்து எழும்படி இறைவனை நோக்கிப்பாடுவது.

191. போற்றி: வணக்கம். வாழ்முதல்: வாழ்க்கைக்கு ஆதி. புலர்ந்தது: விடிந்தது. இணை: ஒத்த. துணை: இரண்டு. அருள்மலரும்; கருணைபூக்கும். எழில்நகை: அழகுப் புன்சிரிப்பு. தொழுகோம்: வணங்குவோம். சேறு: சகதி. கமலம்: தாமரை. தண்வயல்சூழ்: குளிர்ந்த பண்ணைசூழ்ந்த. உறை: தங்குகின்ற. ஏற்று உயர் கொடி: சிறந்த இடபக்கொடி. பள்ளி எழுந்தருளாய்; துயில் விட்டு எழுந்து கருணை செய்வாயாக.

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற்று அண்ணல்அம் கண்ஆம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகட லே!பள்ளி எழுந்துஅரு ளாயே! 192

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்

192. அருணன்: செங்கதிரோன். இந்திரன் திசை: இந்திரனுக்கு உரிய திக்காகிய கிழக்குப் பக்கம். அணுகினன்: புறப்பட்டு விட்டான். அகன்றது உதயம்: புறப்பாட்டு ஒளி எங்கும் பரவி விட்டது. கருணையின்: அருளைப் போல. சூரியன் எழ எழ: ஆதவன்மேல் எழுந்து செல்லச் செல்ல. நயனக் கடிமலர் மலர: கண்ணனைய மணங் கொண்ட தாமரைப்பூ விரிய. கடி: மணம். அண்ணல்: பெருமையில் சிறந்தவன். அம் கண் ஆம்: அழகிய அவ விடத்தில் தோன்றும். திரள்: கூட்டமான. நிரை: சரம் கோத்ததுபோல. அறுபதம்: வண்டு. முரல்வன: ஒலிக்கின்றன. இவை: இவற்றை. ஓர்: உணர்க. அருள்நிதி: கருணைச் செல்வம்.

193. குருகு: பறவை. இயம்பின: ஒலித்தன. சங்கம்: காலைச் சங்கு. ஓவின: மறைந்து விட்டன. தாரகை ஒளி: நட்சத்திர வெளிச்சம். ஒளி உதயத்து ஒருப்படுகின்றது: உதயத்து வெளிச்சம் உண்டாகி விட்டது.

தேவநற் செறிகழல் தாள்இணை காட்டாய்!
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
யாவரும் அறிவுஅரி யாய்!எமக்கு எளியாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 193
இன்இசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியல் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண்டு இன்அருள் புரியும்
எம்பெரு மான்! பள்ளி எழுந்துஅரு ளாயே! 194
பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்குஇலன் வரவுஇலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டுஅறி யோம்உனைக் கண்டுஅறி வாரைச்

193. தேவ: இறைவா. செறிகழல்: வீரக்கழல் பொருந்திய. காட்டாய்: காட்டி யருளுக.

194. வீணையர் ஒரு பக்கம் யாழினர் ஒரு பக்கம் என்றதனால் வீணை வேறு யாழ் வேறு ஆகின்றது. ஒரு பால்: ஒருபக்கம். இருக்கு: வேத மந்திரம். தோத்திரம்: வழிபாட்டுப் பாடல்கள். துன்னிய பிணைமலர்க் கையினர்: நெருங்கக் கட்டிய மாலையைக் கையிலே ஏந்தி நிற்போர். துவள்கையர்: வளைந்து வளைந்து, ஆட்டம் போடுகின்றவர். சென்னியில் அஞ்சலி கூப்பினர்: தலைமீது கை சேர்த்து வணங்கினவர்.

195. பூதங்கள் தோறும்: பஞ்சபூதங்களிலும். அல்லால்; அல்லாமல். போக்கு இலன், வரவு இலன்: இறப்பு இல்லாதவன்; பிறப்பும் இல்லாதவன். புலவோர்: அறிஞர். கேட்டு அறியோம் உனைக்கண்டு அறிவாரை: உன்னைக் கண்ணால் கண்டு அறிந்தவர்களை இதுவரைக் கேள்விப்பட்டதே இல்லை.

சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய்!எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெமை ஆண்டுஅருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 195

பப்புஅற வீட்டுஇருந்து உணரும்நின் அடியார்
பந்தனை வந்துஅறுத் தார்அவர் பலரும்
மைப்புஉறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா!
செப்புஉறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
இப்பிறப்பு அறுத்தெமை ஆண்டுஅருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 196

அதுபழச் சுவைஎன அமுதென அறிதற்கு
அரிதுஎன எளிதுஎன அமரரும் அறியார்
இதுஅவன் திருஉரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டு இங்குஎழுந்து அருளும்

195 சீதம்: குளிர்ச்சி. மன்னா: அரசே. சிந்தனைக் கும் அரியாய்: மனத்திற்கும் எட்டாதவனே. ஏதங்கள்: குற்றங்கள்.

196. பப்பு அற: மன விரிவு நீங்க. பப்பு, பரப்பு என்பதன் இடைக்குறை. வீட்டிருந்து: பற்று விட்ட நிலையிலிருந்து. பந்தனை: பாசத்தனை. மைப்பு உறு: மைத் தன்மைபெற்ற; மைதீட்டிய. அணங்கின் மணவாளா: உமையாள் கணவா. செப்பு உறு கமலங்கள்: சிமிழை ஒத்த தாமரைகள்.

197. அது: அப்பரம்பொருள். அமரரும் அறியார்: தேவர்களும் அறியமாட்டார்.

மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கைஉள் ளாய்!திருப் பெருந்துறை மன்னு!
எதுஎமைப் பணிகொளும் ஆறுஅது கேட்போம்
எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 197

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர்! யாவர்மற்று அறிவார்?
பந்துஅணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந்து அருளிய பரனே!
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறைஉறை கோவிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந்து ஆண்டாய்!
ஆர்அமு தே!பள்ளி எழுந்துஅரு ளாயே! 198

விண்அகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே! உன தொழுப்புஅடி யோங்கள்
மண்அகத் தேவந்து வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்!வழி அடியோம்

197. மது வளர் பொழில்: தேன் சொட்டும் சோலை. எது எமைப் பணி கொள்ளும் ஆறு: எம்மை ஏவல் கொள்ளும் முறை எதுவோ. அது கேட்போம்: அதைக் கேட்டு அப்படியே நடப்போம்.

198. முந்திய: முற்பட்ட. மூவர்: மும்மூர்த்திகள். பந்து அணை விரலி: பந்தை அணைக்கின்ற விரல்களையுடைய உமையாள். பழம் குடில் தொறும்: பழைய குடிசை தோறும். செந்தழல் புரை: செந்நெருப்பை ஒத்த. ஆர் அமுதே: நிறைந்த அமரரின் உணவாகிய அமிழ்தமே.

199. நண்ண: அடைய. விழு: மேலான. உன தொழுப்பு அடியோங்கள்: உனது தொண்டு செய்யும் அடிமைகளாகிய நாங்கள். வண்: வளம். வழி அடியோம்: பரம்பரை அடியார்கள்.

கண்அகத் தேநின்று களிதரு தேனே!
 கடல்அமு தே!கரும் பே!விரும்பு அடியார்
எண்அகத் தாய்!உல குக்குஉயிர் ஆனாய்!
 எம்பெரு மான்!பள்ளி எழுந்துஅரு ளாயே! 199

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
 போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற ஆறுஎன்று நோக்கித்
 திருப்பெருந் துறைஉறை வாய்திரு மாலாம்
அவன்விருப்பு எய்தவும் மலரவன் ஆசைப்
 படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியில் புகுந்துஎமை ஆட்கொள வல்லாய்!
 ஆர்அமு தே!பள்ளி எழுந்துஅரு ளாயே! 200

கோயில் மூத்த திருப்பதிகம்

அறுசீர் விருத்தம்

உடையாள் உன்தன் நடுஇருக்கும்
 உடையாள் நடுஉள் நீஇருத்தி

199 களி: மகிழ்ச்சி. எண்அகத்தாய்: எண்ணத்தில் உறைவாய்.

200. புவனி: பூஉலகம். பிறவாமையில்: பிறக்காமையாலே. அவமே: வீணாக. 'அவனி: உலகம். சிவபெருமான் இப்பூஉலகத்தில் உயிர்களை ஆட்கொள்கின்ற வகையை அறிந்து திருமாலும் பிரமனும் வாழ்நாளை வீணாக்காமல் இவ்உலகில் பிறந்து உய்ய ஆசைப்படுகின்றனர் என்பது கருத்து.

கோயில்மூத்த திருப்பதிகம்: கோயில் என்பது சிதம்பரம். சிதம்பர நடேசனைப் பாடும் முதன்மையான பதிகம் இது.

201. உடையாள்: எம்மை ஆளுடைய உமையவள். உன்தன் நடுஇருக்கும்: உன்னூடே கலந்து இருக்கின்றாள். உடையாள் நடுவுள் நீ இருத்தி: அவளிடத்து நீ இருக்கின்றாய்.

அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானல் அடியேன் உன்
அடியார் நடுவுள் இருந்திடுநல்
அருளைப் புரிபொன் அம்பலத்துஎம்
முடியா முதலே என் கருத்து
முடியும் வண்ணம் முன்நின்றே. 201

முன்நின்று ஆண்டாய் எனைமுன்னம்
யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்நின்று ஏவல் செய்கின்றேன்
பிற்பட்டு ஒழிந்தேன் பெம்மானே!
என்நின்று அருள் இ வரநின்று
போந்திடு என்ன விடில்அடியார்
உ ன்நின்று இவன்யார் என்னரோ
பொன்அம் பலக்கூத்து உகந்தானே 202

உகந்தா னேஅன்பு உடைஅடிமைக்கு
உருகா உள்ளத்து உணர்விலியேன்
சகந்தான் அறிய முறைஇட்டால்
தக்கவாறு அன்று என்னரோ

201. அடியேன் நடுவுள்: என்னுள்ளே. இருவீரும்: நீங்கள் இருவரும். இருந்திடும் நல் அருளைப்புரி: என்றும் நிலைத்திருக்கின்ற நல்ல கருணையைச் செய்வாயாக. முடியா முதலே: ஈறில்லாத முதல்வனே.

202. பிற்பட்டு ஒழிந்தேன்: பின் தங்கிவிட்டேன். என் நின்று: என்னுடன் கலந்து நின்று. அருள் இவர: கருணை மேம்பட. போந்திடு என்னவிடில்: வா என அழைக்காவிட்டால். உன் நின்று: உன்பால் நின்று.

203. உகந்தானே: விரும்பியவனே. உணர்வு இலியேன்: அறிவு இல்லாதவனாகிய யான். சகம்: உலகம்.

மகந்தான் செய்து வழிவந்தார்
வாழ வாழ்ந்தாய் அடியேற்குஉன்
முகந்தான் தாரா விடில்முடிவேன்
பொன்அம் பலத்துஎம் முழுமுதலே! 203

ஏசா நிற்பர் என்னை உனக்கு
அடியான் என்று பிறர்எல்லாம்
பேசா நிற்பர் யான்தானும்
பேணா நிற்பேன் நின்அருளே
தேசா நேசர் சூழ்ந்துஇருக்கும்
திருஓ லக்கம் சேவிக்க
ஈசா பொன்னம் பலத்துஆடும்
எந்தாய்! இனித்தான் இரங்காயே! 204

இரங்கும் நமக்குஅம் பலக்கூத்தன்
என்றுஎன்று ஏமாந்து இருப்பேனை
அருங்கற் பனைகற் பித்துஆண் டாய்!
ஆள்வார் இலிமாடு ஆவேனோ?

203. மகம்: வேள்வி. வழி வந்தார்: நல் நெறிக்கு வந்தவர். முகந்தான் தாராவிடில்: திருமுகத்தைக் காட்டா விடில். முடிவேன்: இறப்பேன்.

204. ஏசா நிர்பர்: மெய் உணர்ந்தோர் எனது தகுதி இன்மை கண்டு வைவர். அன்பன் என்று பிறர் எல்லாம் பேசா நிற்பர்: மற்றையோர் அன்புடையவன் என்று பேசுவர். பேணா நிற்பேன்: விரும்பி நிற்கின்றேன். தேசா: ஒளி வடிவினனே. ஓலக்கம்: சபை. இரங்காய்: இரங்கி அருளுக.

205. ஆள்வார், இலி மாடு ஆவேனோ: செலுத்து பவர் இல்லாத மாடுபோலத் திரிவேனோ.

நெருங்கும் அடியார் களும்நீயும்
நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வரஎங்கள்
வாழ்வே! வாஎன்று அருளாயே! 205

அருளாது ஒழிந்தால் அடியேனை
அஞ்சேல் என்பார் ஆர்இங்குப்
பொருளா என்னைப் புகுந்துஆண்ட
பொன்னே! பொன்னம் பலக்கூத்தா!
மருள்ஆர் மனத்தோடு உனைப்பிரிந்து
வருந்து வேனை வாஎன்றுஉன்
தெருள்ஆர் கூட்டம் காட்டாயேல்
செத்தே போனால் சிரியாரோ? 206

சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுஉன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார்
வெவ்வேறு இருந்துஉன் திருநாமம்
தரிப்பார் பொன்அம் பலத்துஆடும்
தலைவா! என்பார் அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி! இனித்தான் நல்காயே! 207

205. நிலாவி: விளங்கி. மருங்கே சார்ந்து வா: பக்கத்திலே பொருந்திவா.

206. அஞ்சேல்: பயப்படாதே. பொருளா: பொருட்படுத்தி. மருள்: மயக்கம். தெருள்: அறிவு.

207. களிப்பார்; மகிழ்ச்சி கொள்வார். தேனிப்பார்: தியானிப்பார்கள். வார்த்தை: புகழ்ப் பேச்சு. விரிப்பார்: விரித்துப் பேசுவார். தரிப்பார்: நினைப்பார். நரிப்பாய்: இகழ்ச்சி யுடையேனாய்.

நல்காது ஒழியான் நமக்குஎன்றுஉன்
நாமம் பிதற்றி நயனநீர்
மல்கா வாழ்த்தா வாய்குழறா
வணங்கா மனத்தால் நினைந்துஉருகிப்
பல்கால் உன்னைப் பாவித்துப்
பரவிப் பொன்னம் பலம்என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்குஇரங்கி
அருளாய்? என்னை உடையானே? 208

கோயில் திருப் பதிகம்

எழு சீர் விருத்தம்

மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன்ஐந்தின் வழிஅடைத்து அமுதே
ஊறிநின்று என்உள் எழுபரம் சோதி!
உள்ளவா காணவந்து அருளாய்!
தேறலின் தெளிவே! சிவபெரு மானே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
ஈறுஇலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே! என்னுடை அன்பே! 209

208. பிதற்றி: பலகாலும் சொல்லி. நயன நீர் மல்கா: கண்ணீர் பெருக்கி. வாழ்த்தா: வாழ்த்தி. வாய் குழறா: வாய் குழறி. வணங்கா: வணங்கி. பல்கால்: பலமுறையும் பாவித்து: எண்ணி ஒல்கா: தளர்ந்து.

கோயில் திருப்பதிகம்: தில்லையைப் பற்றிய பதிகம்.

209. மாறி: எனக்கு மாறுபட்டு. நின்று: நிலைத்து நின்று. என்உள்: எனக்குள்ளே. எழு பரஞ் சோதி: தோன்றும் பேரொளியே. தேறல்: தேன். ஈறு இலாப் பதங்கள்: முடிவு இல்லாத பதவிகள். யாவையும் கடந்த: எல்லாவற்றையும் தாண்டிய.

அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தம் ஆய்க்கசிந்து உருக
என்பரம் அல்லா இன்அருள் தந்தாய்!
யான்இதற்கு இலன்ஓர்கைம் மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதும்ஆய்ப் பரந்த
முத்தனே! முடிவுஇலா முதலே!
தென்பெருந் துறையாய்! சிவபெருமானே!
சீர்உடைச் சிவபுரத்து அரைசே! 210

அரைசனே அன்பர்க்கு; அடியேன் உடைய
அப்பனே! ஆவியோடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின்று உருக்கிப்
பொய்இருள் கடிந்தமெய்ச் சுடரே!
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
உரைஉணர்வு இறந்துநின்று உணர்வதோர்உணர்வே!
யான்உன்னை உரைக்கும்ஆறு உணர்த்தே! 211

உணர்ந்தமா முனிவர் உம்பரோடு ஒழிந்தார்
உணர்வுக்கும் தெரிவுஅரும் பொருளே!

210. ஆவி: உயிர். ஆக்கை: உடம்பு. என்பரம் அல்லா: என்க்குத் தகுதியில்லாத. பரந்த: பெருகிய. முத்தன்: பாசங்களினின்றும் நீங்கியவன்.

211. புரைபுரைகனிய: மயிர்க்கால் தொறும் நெகிழ்ந்து உருக. கடிந்த: நீக்கிய. திரைபொரா: அலை மோதாத. மன்னும்: நிலைபெற்ற. உரை உணர்வு இறந்து: சொல்லையும் அறிவையும் கடந்து. உரைக்கும் ஆறு: புகழ்ந்து பேசும் வழி. உணர்த்து: தெரியச் செய்.

212. உணர்ந்த: எல்லாம் அறிந்த. உம்பர்: தேவர். ஒழிந்தார்: பிறர். தெரிவு அரும்: தெரிய முடியாத.

இணங்குஇலி! எல்லா உயிர்கட்கும் உயிரே!
எனைப்பிறப்பு அறுக்கும்எம் மருந்தே!
திணிந்ததுஓர் இருளில் தெளிந்தது வெளியே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
குணங்கள்தாம் இல்லா இன்பமே! உன்னைக்
குறுகினேற்கு இனிஎன்ன குறையே! 212

குறைவுஇலா நிறைவே! கோதுஇலா அமுதே!
ஈறுஇலாக் கொழுஞ்சுடர்க் குன்றே!
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்துஎன்
மனத்துஇடை மன்னிய மன்னே!
சிறைபெறு நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந் துறைஉறை சிவனே!
இறைவனே! நீஎன் உடல்இடங் கொண்டாய்!
இனிஉன்னை என்இரக் கேனே! 213

இரந்துஇரந்து உருக என்மனத்து உள்ளே
எழுகின்ற சோதியே! இமையோர்

212. இணங்கு இலி: இணங்குதல் இல்லாதவன்; எவருடனும் இணங்கிப் போகவேண்டிய நிலைமையைக் கடந்து உயர்ந்தவன். மருந்து: அமுதம். திணிந்தது ஓர் இருள்: நெருங்கிய பெரிய இருட்டு. தெளிந்த தூவெளி: தெளிவாக நிற்கும் பரிசுத்தமான வானம். குறுகினேற்கு: அடைந்த எனக்கு.

213. கோது இலா: குற்றம் அற்ற ஈறு: முடிவு. கொழும் சுடர்க் குன்று: கொழுந்து விட்டெரியும ஒளி மலை. மறை: வேதம். மன்னிய மன்னே: பொருந்திய நிலை பேறே. சிறை பெறு நீர்: அணைகடந்த வெள்ளம். இரக்கேன்: இரந்து கேட்கப் போகின்றேன்.

214. இரந்து இரந்து உருக: கெஞ்சிக் கெஞ்சி உருகி நிற்க. இமையோர்: தேவர்.

சிரந்தனில் பொலியும் கமலச்சே வடியாய் !
திருப்பெருந் துறைஉறை சிவனே !
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததுஓர் உருவே ! களித்தனள் உன்னைக்
கண்உறக் கண்டுகொண்டு இன்றே 214

இன்றுஎனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்புஅற நினைந்தேன்
நீஅலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்துதேய்ந்து ஒன்றுஆம்
திருப்பெருந் துறைஉறை சிவனே !

214. சிரம்தனில்: தலைமீது. பொலியும்: விளங்கும் கமலச் சேவடியாய்: தாமரை போன்ற செவ்விய திருவடியை உடையவனே. நிரந்த: வரிசையான. கால்: காற்று. கரந்தது: மறைந்தது.

215. இருள் கடிந்து: அஞ்ஞான இருளைப்போக்கி. உள்ளத்து எழுகின்ற ஞாயிறே போன்று: மனத்திலே உதிக்கின்ற சூரியனைப் போல. நினைப்பு அற நினைந்தேன்: வேறு நினைப்பு இன்றி உன்னையே நினைந்தேன். இன்மை: இல்லாதபடி. சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்று ஆம்: எல்லாப் பொருள்களுள்ளும் நுழைந்து நுழைந்து அணுவாக நுணுகி நுணுகி எல்லாம் ஒன்றாகிவிட்ட.

ஒன்றும்நீ அல்லை அன்றிஒன்று இல்லை
யார்உன்னை அறியகிற் பாரே! 215

பார்பதம் அண்டம் அனைத்தும்ஆய் முளைத்துப்
பரந்ததுஓர் படர்ஒளிப் பரப்பே!
நீர்உறு தீயே! நினைவதேல் அரிய
நின்மலா! நின்அருள் வெள்ளச்
சீர்உறு சிந்தை எழுந்ததுஓர் தேனே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
யார்உறவு எனக்குஇங்கு ஆர்அயல் உள்ளார்
ஆனந்தம் ஆக்கும்என் சோதீ! 216

215. ஒன்றும் நீ அல்லை: காணப்படும் ஒரு பொருளும் நீ அன்று. அன்றி ஒன்று இல்லை: நீ அல்லாமல் ஒரு பொருளும் இல்லை. அறிய கிற்பார்: அறிய வல்லார். "நினைப்பு அற நினைந்தேன்" என்ற சொல் தொடரை, "நினைப்பு அறவே தான் நினைந்தேன் என்ற நிலை நாடி, அனைத்தும் ஆம் அப்பொருளில் ஆழும் நாள் எந்நாளோ?" என்றும், "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்" என்ற மணிவாசகத்தை, "சென்று சென்றே அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாகி, நின்று விடும் என்ற நெறி நிற்கும் நாள் எந்நாளோ?" எனவும் அப்படியே நுகர்ந்து வாயாரப் பாடுகின்றார் தாயுமான அடிகள்.

216. பார்: பூஉலகம். பதம்: பதவி. அண்டம்: பிறஉலகங்கள். முளைத்து: தோன்றி. பரந்தது: படர்ந்தது. நீர் உறு தீயே: நீரில் அடங்கியிருக்கும் நெருப்புப் போன்றவனே. நின்மலன்: குற்றமற்றவன். உறவு: சுற்றம். அயல்: உறவினரல்லாத மற்றையோர்.

சோதியாய்த் தோன்றும் உருவமே! அருவாம்
ஒருவனே! சொல்லுதற்கு அரிய
ஆதியே! நடுவே! அந்தமே! பந்தம்
அறுக்கும்ஆ னந்தமா கடலே!
தீதுஇலா நன்மைத் திருஅருட் குன்றே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
யாதுநீ போவதுஓர் வகைஎனக்கு அருளாய்!
வந்துநின் இணைஅடி தந்தே. 217

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்
சங்கரா! ஆர்கொலோ சதுரர்?
அந்தம்ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதுஒன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
எந்தையே! ஈசா! உடல்இடம் கொண்டாய்!
யான்இதற்கு இலன்ஓர்கைம் மாறே 218

217. அருவாம் ஒருவனே: உருவம் அற்ற ஒப்பற்றவனே. சொல்லுதற்கு அரிய: சொல்லமுடியாத. அந்தம்: முடிவு. பந்தம்: கட்டு. அருட் குன்று: கருணை மலை. யாது நீ போவது: நீ செல்வது என்ன முறை.

218. சதுரர்; சாமர்த்தியம் வாய்ந்தவர். 'உன்னைத் தந்து என்னை நீ வாங்கிக் கொண்டாய்; சங்கரா! நம் இருவருள் யார் கெட்டிக்காரர்? உன்னை எனக்குத் தந்தமையால் முடிவு இல்லாத ஆனந்தம் எனக்கு. என்னைக் கொண்டமையால் நீ பெற்ற பயன் என்ன?' என்று கேட்கின்றார் அடிகள். ஆம்! பண்டம் மாற்றுதல் நடந்தது. மாணிக்க வாசகரைச் சிவபிரான் பெற்றார். சிவன் தன்னை மாணிக்கவாசகர்க்குக் கொடுத்தார். இலாபம் யாருக்கு? கடவுளுக்கல்ல: அடியாருக்குத்தான்.

செத்திலாப் பத்து

எண்சீர் விருத்தம்

பொய்யனேன் அகம்நெகப் புகுந்துஅமுது ஊறும்
புதுமலர்க்கழல் இணைஅடி பிரிந்தும்
கையனேன் இன்னும் செத்திலேன் அந்தோ!
விழித்திருந்து உள்ளக் கருத்தினை இழந்தேன்
ஐயனே! அரசே! அருட்பெருங் கடலே!
அத்த னே!அயன் மாற்குஅறி யொண்ணாச்
செய்யமே னியனே! செய்வகை அறியேன்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே! 219

புலைய னேனையும் பொருள்என நினைந்துஉன்
அருள்பு ரிந்தனை புரிதலும் களித்துத்
தலையி னால்நடந் தேன்விடைப் பாகா!
சங்க ரா!எண்ணில் வானவர்க்கு எல்லாம்
நிலைய னே!அலை நீர்விடம் உண்ட
நித்த னே!அடை யார்புரம் எரித்த

செத்திலாப் பத்து : சாகவில்லையே எனப்படும் பதிகம்.

219. அகம் நெக: உள்ளம் குழையும்படி. கை: வஞ்சகம். செத்திலேன்: சாகாதிருக்கின்றேன். விழித்திருந்து: கண் திறந்திருந்தும். உள்ளக் கருத்து: மனத்தின் எண்ணம்.

220. பொருள்என நினைந்து: பொருட்டாக எண்ணி. புரிதலும்: செய்தவுடன். களித்து: மகிழ்ந்து. விடைப் பாகன்: காளையைச் செலுத்துகின்றவன். எண் இல்: கணக்கு இல்லாத. நிலையனே: பற்றுக் கோடானவனே. அலை நீர் விடம்: திரைகடலில் தோன்றிய நஞ்சு. நித்தன்: என்றும் உள்ளவன். அடையார்: தன்னைச் சேராதவர். புரம்: முப்புரம்.

சிலைய னே !எனைச் செத்திடப் பணியாய் !
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே ! 220

அறுக்கி லேன் உடல் துணிபட ; தீப்புக்கு
ஆர்கி லேன் ;திரு அருள்வகை அறியேன் ;
பொறுக்கி லேன்உடல் ; போக்குஇடம் காணேன் ;
போற்றி போற்றிஎன் போர்விடைப் பாகா !
இறுக்கி லேன்உனைப் பிரிந்துஇனிது இருக்க
என்செய் கேன்இது செய்கஎன்று அருளாய் !
சிறைக்க ணேபுனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே ! 221

ஞாலம் இந்திரன் நான்முகன் வானவர்
நிற்க மற்றுஎனை நயந்துஇனிது ஆண்டாய் !
காலன் ஆர்உயிர் கொண்டபூங் கழலாய் !
கங்கை யாய்அங்கி தங்கிய கையாய் ;

220. சிலையன் : வில்லையுடையவன். எனைச் செத்திடப் பணியாய் : என்னை இறக்குமாறு செய்வாய்.

221. அறுக்கிலேன் உடல் துணிபட : என் உடம்பைத் துண்டு துண்டாக வெட்டமாட்டேன். தீப்புக்கு ஆர்கிலேன் : நெருப்பில் வீழ்ந்து பூரணமாக மாட்டேன். பொறுக்கிலேன் உடல் : உடம்பைத் தாங்க மாட்டேன். இறுக்கிலேன் : இறந்து போவேன் அல்லேன். சிறைக்கணே : வரப்புகளிலே. புனல் : நீர்.

222. ஞாலம் : உலகம். நயந்து : விரும்பி. காலன் : எமன். பூ கழலாய் : அழகிய திருவடி உடையானே. அங்கி : நெருப்பு.

மாலும் ஓலம்இட்டு அலறும்அம் மலர்க்கே
மரக்க ணேனையும் வந்திடப் பணியாய்;
சேலும் நீலமும் நிலவிய வயல்சூழ்
திருப்பெ ருந்துறை மேவிய சிவனே! 222

அடைக்கலப் பத்து

கலி நிலைத் துறை

வெறுப்பன வேசெய்யும் என்சிறு
மையைநின் பெருமையினால்
பொறுப்பவ னே!அராப் பூண்பவ
னே!பொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னே!நின் திருஅரு
ளால்என் பிறவியைவேர்
அறுப்பவ னே!உடை யாய்!அடி
யேன்உன் அடைக்கலமே! 223

222. மால்: திருமால். ஓலம் இட்டு: சரண் என்று சொல்லி. அம்மலர்: அந்தத் திருவடித் தாமரை. மரக்கணேன்: மரத்தால் செய்து வைத்த கண்கள் உடையேன். சேல்: மீன். நீலம்: குவளைப்பூ.

அடைக்கலப் பத்து: நான் உனக்கு அடைக்கலம் என்று பாடும் பதிகம். பதிகம் என்பது பத்துப் பாடல் கொண்டது. அடைக்கலம், சரணடைதல்.

223. வெறுப்பனவே: அறிஞர் வெறுக்கத் தக்கவற்றையே. சிறுமை: தாழ்ந்த செய்கை. அராப் பூண்பவன்; பாம்பை அணிந்தவன். செறுப்பவன்: அடக்குபவன். அடைக்கலம்: சரண்புகுகின்றேன்.

பொழிகின்ற துன்பப் புயல்வெள்
ளத்தில்நின் கழற்புணைகொண்டு
இழிகின்ற அன்பர்கள் ஏறினர்
வான்;யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று மாதர்த் திரைபொரக்
காமச் சுறவுஎறிய
அழிகின் றனன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே. 224

சுருள்புரி கூழையர் சூழலில்
பட்டுஉன் திறம்மறந்துஇங்கு
இருள்புரி யாக்கையி லேகிடந்து
எய்த்தனன் மைத்தடம்கண்
வெருள்புரி மான்அன்ன நோக்கிதன்
பங்க!விண் ணோர்பெருமான்!
அருள்புரி யாய்!உடை யாய்!அடி
யேன்உன் அடைக்கலமே. 225

224. துன்பப் புயல் பொழிகின்ற வெள்ளத்தில்: துன்பமாகிய மேகம் கொட்டுகின்ற நீர்ப் பெருக்கிலே. கழல்புணை: அடியாகிய தெப்பம். இழிகின்ற: நின்வழியில் இறங்குகின்ற. ஏறினர்; நீந்திக் கடைத்தேறினர். இடர்க்கடல்வாய்: துன்பக் கடலிடத்தே. சுழிசென்று: சுழியில்பட்டு. மாதர்த் திரை பொர: மங்கையராகிய அலை மோத. காமச் சுறவு ஏறிய: ஆசையாகிய சுருமீன் தாக்க.

225 சுருள்புரி கூழையர்: சுருண்ட கூந்தலுடைய தோகையர். சூழல்: சூழ்ச்சி. திறம்: சிறப்பு. இருள் புரி: அறியாமையை உண்டாக்குகின்ற. எய்த்தனன்: இளைத்துப்போனேன். மைத்தடங்கண்: மை தீட்டிய விசாலமான கண். வெருள்: பயம். நோக்கி: பார்வையுடையாள்.

மாவடு வகிர்அன்ன கண்ணிபங்
கா!நின் மலர்அடிக்கே
கூவிடு வாய்!கும்பிக் கேஇடு
வாய்!நின் குறிப்புஅறியேன்
பாஇடை ஆடு குழல்போல்
கரந்து பரந்ததுஉள்ளம்
ஆ!கெடு வேன்உடை யாய்!அடி
யேன்உன் அடைக்கலமே. 226

வழங்குகின் றாய்க்குஉன் அருள்ஆர்
அமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை
யேன்என் விதிஇன்மையால்;
தழங்குஅருந் தேன்அன்ன தண்நீர்
பருகத்தந்து உய்யக்கொள்ளாய்!
அழுங்குகின் றேன்உடை யாய்!அடி
யேன்உன் அடைக்கலமே. 227

226. மா வடு வகிர் அன்ன கண்ணி: மாங்காய் வடுவின் பிளவு நிகர்த்த கண் உடைய உமையாள். கும்பி: நரகம். பா இடை ஆடு குழல்போல் கரந்து பரந்தது உள்ளம்: நூல் இழையில் ஓடி ஓடித்திரியும் குழல்போல உலக இச்சையில் மறைந்து அலைகின்றது என் உள்ளம். ஆ: ஐயோ. கெடுவேன்: நீ ஆட்கொள்ளா விட்டால் கெட்டு ஒழிவேன்.

227. வாரி கொண்டு: அள்ளிப்பருகி. விக்குதல்: தொண்டையில் தடைப்படுதல். விதி: ஊழ்வினை. தழங்குதல்: சலசலத்தல். தண்நீர்: குளிர்ந்த நீர். பருக: குடிக்க. உய்ய: பிழைக்க. அழுங்குகின்றேன்: வருந்துகின்றேன்.

ஆசைப் பத்து

அறுசீர் விருத்தம்

பாரோர் விண்ணோர் பரவி
ஏத்தும் பரனே! பரஞ்சோதி!
வாராய் வாரா உலகம்
தந்து வந்துஆட் கொள்வானே!
பேர்ஆயிரமும் பரவித்
திரிந்துஎம் பெருமான் எனஏத்த
ஆரா அமுதே! ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே! 228

வெஞ்சேல் அனைய கண்ணார்தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்
சுடரே! நான்ஓர் துணைகாணேன்
பஞ்சுஏர் அடியாள் பாகத்து
ஒருவா! பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்
பட்டேன் கண்டாய் அம்மானே! 229

ஆசைப் பத்து: ஆசைபட்டேன் என்று கூறும் பதிகம்.

228. பரவி ஏத்துதல்: போற்றித் துதித்தல். வாரா உலகம்: திரும்பப் பிறவா நெறிதரும் வீட்டு உலகம். ஆரா அமுதே: தெவிட்டாத அமுதமே. ஆசைப்பட்டேன்: ஆசை கொண்டேன். அம்மான்: இறைவன்.

229. வெம் சேல்: விருப்பத்தைத் தருகின்ற மீன். வெகுளி: கோபம். நைஞ்சேன்: நசுங்கிப்போனேன். பஞ்சுஏர் அடியாள்: பஞ்சுபோன்ற மெல்லிய அழகிய திருவடி உடைய உமையாள். அஞ்சேல்: பயப்படாதே.

அதிசயப் பத்து

அறுசீர் விருத்தம்

வைப்புமாடு என்றும் மாணிக்கத்து
ஒளிஎன்றும் மனத்துஇடை உருகாதே
செப்பு நேர்முலை மடவர
லியர்தங்கள் திறத்துஇடை நைவேனை
ஒப்புஇ லாதன உவமனில்
இறந்தன ஒள்மலர்த் திருப்பாதத்து
அப்பன் ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம்கண் டாமே. 230

நீதி ஆவன யாவையும்
நினைக்கிலேன் நினைப்பவ ரொடும்கூடேன்
ஏத மேபிறந்து இறந்துஉழல்
வேந்தனை என்அடி யான்என்று
பாதி மாதொடும் கூடிய
பரம்பரன் நிரந்தர மாய்நின்ற
ஆதி ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம்கண் டாமே. 231

அதிசயப் பத்து: அதிசயம் பார்த்தோம் என்று சொல்லும் பதிகம். அதிசயம்: வியப்பு.

230. வைப்பு: எய்ப்புக்கு உதவ வைக்கப்பட்ட. மாடு: செல்வம். செப்பு நேர்: சிமிழை ஒத்த. மடவரலியர்: இளம் பெண்கள். திறம்: திறமை. நைதல்: வருந்துதல். உவமனில் இறந்தன: உவமானமாகச் சொல்லக் கூடிய பொருள்களை யெல்லாம் மீறியன. அதிசயம்: வியப்பு. கண்டோம்: பார்த்தோம்.

231. கூடேன்: சேரமாட்டேன். ஏதமே: குற்றமே வடிவாக. நிரந்தரம்: அழிவு இல்லாத் தன்மை.

முன்னை என்உடை வல்வினை
போயிட முக்கணது உடைஎந்தை
தன்னை யாவரும் அறிவதற்கு
அரியவன் எளியவன் அடியார்க்குப்
பொன்னை வென்றதோர் புரிசடை
முடிதனில் இளமதி அதுவைத்த
அன்னை ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம்கண் டாமே. 232

பரவு வார்அவர் பாடுசென்று
அணைகிலேன் பன்மலர் பறித்துஏத்தேன்
குரவு வார்குழ லார்திறத்
தேநின்று குடிகெடு கின்றேனை
இரவு நின்றுஎரி ஆடிய
எம்இறை எரிசடை மிளிர்கின்ற
அரவன் ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயம்கண் டாமே. 233

எண்ணி லேன்திரு நாமஅஞ்சு
எழுத்தும்என் ஏழைமை அதனாலே
நண்ணி லேன்கலை ஞானிகள்
தம்மொடும் நல்வினை நயவாதே

232. பொன்னை வென்றது ஓர் புரி சடை: பொன்னின் ஒளியைத் தோற்றோடச் செய்த சிவந்த ஒப்பற்ற கட்டப்பட்ட சடை. அன்னை: தாயனையவன்.

233. பாடு: பக்கம். குரவு: குரவமலர். வார்குழல்: நெடிய கூந்தல். இரவு: இரவிலே. எரிஆடிய: அனல் ஏந்தி ஆடிய. எரி சடை: தீ ஒத்த சடை, அரவன்: பாம்பினை உடையான்.

234. ஏழைமை அதனாலே: அறியாமையினால். நண்ணிலேன்: சேர்ந்தேன் அல்லேன். கலைஞானிகள்: கலை வல்ல அறிஞர்கள்.

மண்ணி லேபிறந்து இறந்துமண்
ஆவதற்கு ஒருப்படு கின்றேனை
அண்ணல் ஆண்டுதன் அடியரில்
கூட்டிய அதிசயங்கண் டாமே. 234

புணர்ச்சிப் பத்து

எழுசீர் விருத்தம்

அல்லிக் கமலத்து அயனும் மாலும்
அல்லா தவரும் அமரர்கோனும்
சொல்லிப் பரவும் நாமத் தானைச்
சொல்லும் பொருளும் இறந்தசுடரை
நெல்லிக் கனியைத் தேனைப் பாலை
நிறைஇன் அமுதை அமுதின்சுவையைப்
புல்லிப் புணர்வது என்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 235

234. மண்ணாவதற்கு: மண்ணாகப் போவதற்கு.

புணர்ச்சிப் பத்து: இறைவனைப் புணர்வது என்று எனப் பாடும் பதிகம்.

235. அல்லிக் கமலத்து அயன்: அக இதழ்களை உடைய தாமரை அமர்ந்த பிரமன். அல்லாதவர்: அவரல்லாப் பிற தேவர். சொல்லி: புகழ்ந்து. சொல்லும் பொருளும் இறந்த சுடர்: சொல்லுக்கும் அதன் பொருளுக்கும் எட்டாத ஒளி. புல்லி: இறுகத்தழுவி. புணர்வது: சேர்வது. பொல்லாமணி: துளையிடப்படாத முத்து.

தாதாய்! மூவேழ் உலகி னுக்கும்
தாயே! நாயேன் தனைஆண்ட
பேதாய்! பிறவிப் பிணிக்குஓர் மருந்தே!
பெருந்தேன் பில்க எப்போதும்
ஏதாம் மணியே என்றுஎன் றுஏத்தி
இரவும் பகலும் எழிற்பாதப்
போதுஆய்ந்து அணைவது என்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 236

காப்பாய் படைப்பாய் காப்பாய் முழுதும்
கண்ணார் விசும்பின் விண்ணோர்க்கெலாம்
மூப்பாய் மூவா முதலாய் நின்ற
முதல்வா! முன்னே எனைஆண்ட
பார்ப்பா னே!எம் பரமா! என்று
பாடிப் பாடிப் பணிந்துபாதப்
பூப்போது அணைவது என்றுகொல் லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே. 237

236. தாதாய் மூ ஏழு உலகினுக்கும்: பழைமையான ஏழு உலகங்கட்கும் தந்தையே. நாயேன் தனை ஆண்ட பேதாய்: நாயனைய என்னை ஆட்கொண்ட அறிவிலியே. தாழ்ந்த தன்னை அடிமை கொண்ட காரணத்தால் கடவுளைப் பேதை என்கிறார். பெருந்தேன் பில்க: பேரானந்தத் தேன் பெருக்கெடுக்க. ஏது ஆம் மணியே: எப்பயனும் ஆகின்ற இரத்தினமே. எழில் பாதப் போது: அழகிய திருவடி மலர். ஆய்ந்து: ஆராய்ந்து.

237. கண் ஆர்: இடம் நிறைந்த. விசும்பு: ஆகாயம். மூவா: கிழத் தன்மைபெறாத. பார்ப்பான்: அந்தணன். பூப்போது: அழகிய மலர்.

வாழாப் பத்து

எழுசீர் விருத்தம்

பாடிமால் புகழும் பாதமே அல்லால்
பற்றுநான் மற்றுஇலேன் கண்டாய்!
தேடிநீ ஆண்டாய்! சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை
உணர்த்துவது உனக்குஎனக்கு உறுதி
வாடினேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்!
வருகஎன்று அருள்புரி யாயே! 238

பஞ்சின்மெல் அடியாள் பங்க! நீ அல்லால்
பற்றுநான் மற்றுஇலேன் கண்டாய்!
செஞ்சவே ஆண்டாய்! சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!

வாழாப் பத்து: வாழமாட்டேன் என்று வழுத்தும் பதிகம்.

238. பற்று: ஆதரவு. ஊடுவது: பிணங்குவது. உவப்பது: கூடிமகிழ்வது. உணர்த்துவது: அறிவுறுத்துவது, "ஊடல் உணர்தல் புணர்தல்" என்ற அகத்துறை மூன்றையும் நான் உன்னிடத்திலேயே நுகர்கின்றேன். நான் ஊடுவதும் உன்னோடுதான்; உணர்த்துவதும் உனக்குத்தான்: உவப்பதும் உன்னையே. எனக்கு இஃது உறுதி. வாடினேன். வருத்தப்பட்டு விட்டேன். இங்கு வாழ்கிலேன்: இவ் உலகில் இனி வாழமாட்டேன். கண்டாய்: இதனைக் காண்பாயாக. வருக என்று அருள் புரியாய்: வா எனக் கருணை கூர்ந்து அழைப்பாயாக.

239. செஞ்சவே: செவ்வையாக.

அஞ்சினேன் நாயேன் ஆண்டுநீ அளித்த
அருளினை மருளினால் மறந்த
வஞ்சனேன் இங்கு வாழ்கிலேன் கண்டாய்!
வருகஎன்று அருள்புரி யாயே! 239

பந்துஅணை விரலாள் பங்க! நீ அல்லால்
பற்றுநான் மற்றுஇலேன் கண்டாய்!
செந்தழல் போல்வாய்! சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
அந்தம்இல் அமுதே! அரும்பெரும் பொருளே!
ஆர்அமு தே! அடி யேனை
வந்துஉய ஆண்டாய்! வாழ்கிலேன் கண்டாய்!
வருகஎன்று அருள்புரி யாயே. 240

பழுதுஇல்தொல் புகழாள் பங்க! நீ அல்லால்
பற்றுநான் மற்றுஇலேன் கண்டாய்!
செழுமதி அணிந்தாய்! சிவபுரத்து அரசே!
திருப்பெருந் துறைஉறை சிவனே!
தொழுவனோ பிறரைத் துதிப்பனோ எனக்குஓர்
துணைஎன நினைவனோ சொல்லாய்!
மழவிடை யானே! வாழ்கிலேன் கண்டாய்!
வருகஎன்று அருள்புரி யாயே. 241

239. மருள் : அறியாமை மயக்கம்.

240. பந்து அணை விரலாள் : பந்து பயில் விரலினை உடைய பார்வதி. அந்தம் : முடிவு. உய்ய : உய்யும் பொருட்டு.

241. பழுது இல் தொல்புகழாள் : குற்றமற்ற பழைய புகழுடைய உமையவள். செழு மதி : செழுமையான சந்திரன். மழ விடை : இளம் காளை.

அருள் பத்து

எழுசீர் விருத்தம்

நிருத்தனே ! நிமலா ! நீற்றனே ! நெற்றிக்
கண்ணனே ! விண்ணுளோர் பிரானே !
ஒருத்தனே ! உன்னை ஓலம்இட்டு அலறி
உலகுஎலாம் தேடியும் காணேன் ;
திருத்தம்ஆம் பொய்கைத் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருத்தனே ! அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே ! 242

எங்கள்நா யகனே ! என்உயிர்த் தலைவா !
ஏலவார் குழலிமார் இருவர்
தங்கள்நா யகனே ! தக்கநல் காமன்
தனதுஉடல் தழல்எழ விழித்த
செங்கண்நா யகனே ! திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அங்கணா ! அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே ! 243

அருள் பத்து : அருள் வேண்டும் பதிகம்.

242. நிருத்தன் : கூத்தாடுவோன். நிமலன் : மலமற்றவன். நீற்றன் : நீறு அணிந்தவன். ஒருத்தன் : ஒப்பற்றவன். பொய்கை : தடாகம். குருந்தம் : குருந்த மரத்தடி. அருத்தன் : பொருளானவன். ஆதரித்து அழைத்தால் : விரும்பிக் கூவினல். அதெந்து : அஞ்சாதே.

243. ஏலம் : மணம். இருவர் : உமையாளும் கங்கையாளும். தக்க நல்காமன் : சிறந்த அழகுடைய மதன். செங்கண் : சிவந்த நெற்றிக் கண். அம் கணா : அருட் பார்வையானே.

கமலநான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்கு அரிய
விமலனே ! எமக்கு வெளிப்படாய் என்ன
வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய் !
திமிலநான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அமலனே ! அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே ! 244

துடிகொள்நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை
துணைமுலைக் கண்கள்தோய் சுவடு
பொடிகொள்வான் தழலில் புள்ளிபோல் இரண்டு
பொங்குஒளி தங்குமார் பினனே !

244. கார் முகில் : நீருண்ட கரிய மேகம். நண்ணுதற்கு : அடைவதற்கு. வெளிப்படாய் என்ன : வெளிப்படுக என வேண்ட. வியன் தழல் : பெரிய நெருப்பினின்றும். திமிலம் : பேரோசை.

245. துடிகொள் நேர் இடையாள் : உடுக்கையின் வடிவத்தை ஒத்த நுண்ணிய இடையை உடைய உமையவள். சுரி குழல் : சுருண்ட கூந்தல். துணைமுலைக் கண்கள் தோய் சுவடு : இரண்டு தனங்களின் நுனிகளும் அழுத்திய அடையாளம். பொடிகொள் வான்தழலில் : நீறு பூத்த பெரிய தீயில். புள்ளிபோல் இரண்டு பொங்கு ஒளிதங்கும் மார்பினனே : இரண்டு புள்ளிகள் வைத்தது போல ஒளி விளங்கும் திருமார்பை உடையவனே, உடல் முழுதும் திருநீறு அணிந்த சிவபெருமானை அம்பிகை ஆவலோடு அணைய அவள் தனக்கண்கள் பட்ட இரண்டு இடங்களிலும் இரண்டு தழும்பு பட்ட சிவனின் செந்நிறம் விளங்கித் தோன்றுவதாகக் கூறப்படுகிறது. "பொருப்பு அரையன் மடப்பாவை புணர் முலையின் முகடு தைத்த நெருப்பு உருவம் வெள்ளியாக நீறு அணிந்த வரை மார்ப" என்னும் நந்திக் கலம்பகப் பாடல் இக் கருத்துக் கொண்டது.

செடிகொள்வான் பொழில்சூழ் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அடிகளே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே! 245

மருளனேன் மனத்தை மயக்குஅற நோக்கி
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே! புனிதா! பொங்குவாள் அரவம்
கங்கைநீர் தங்குசெஞ் சடையாய்!
தெருளும்நான் மறைசேர் திருப்பெருந் துறையில்
செழுமலர்க் குருந்தமே வியசீர்
அருளனே! அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்றுஅரு ளாயே! 246

திருக் கழுக் குன்றப் பதிகம்

எழுசீர் விருத்தம்

பிணக்குஇ லாத பெருந்து றைப்பெரு
மான்! உன் நாமங்கள் பேசுவார்க்கு
இணக்குஇ லாததோர் இன்ப மேவரும்
துன்ப மேதுடைத்து எம்பிரான்

245. வான் பொழில் : சிறந்த சோலை.

246. மருளன் : மயக்கமுடையவன். புனிதன் : தூய்மையானவன். பொங்கு வாள் அரவம் : சீறுகின்ற ஒளியை உடைய பாம்பு. தெருள் : அறிவு. அருளனே : அருள்வடிவினனே.

திருக்கழுக்குன்றப் பதிகம் : திருக்கழுக்குன்றம் என்னும் தலத்தைப்பற்றிக் கூறிய பதிகம்.

247. பிணக்கு : சண்டை. இணக்கு : சமம். துடைத்து : ஒழித்து.

உணக்குறி லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்குறி லாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே 247

மலங்கி னேன்கண்ணின் நீரை மாற்றி
மலங்கெ டுத்த பெருந்துறை
விலங்கி னேன்வினைக் கேட னேன்இனி
மேல்வி ளைவதுஅ றிந்திலேன்
இலங்கு கின்றநின் சேவ டிகள்இ
ரண்டும் வைப்புஇடம் இன்றியே
கலங்கி னேன்கலங் காம லேவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 248

கோல மேனிவ ராக மே! குண
மாம்பெ ருந்துறைக் கொண்டலே!
சீலம் ஏதும் அறிந்தி லாதஎன்
சிந்தை வைத்த சிகாமணி!

247. உணக்கு இலாதது : காய்ந்து போகாததாகிய. வித்து : பிறவி விதை. மேல் விளையாமல் : மேலும் முளையாமல். என் வினை ஒத்தபின் : எனது நல்வினையும் தீவினையும் சமமான பிறகு. காட்டினாய் கழுக்குன்றிலே : திருக் கழுக்குன்றத்திலே காட்டி அருளினாய்.

248. மலங்குதல் : கலங்குதல். மலம் கெடுத்த பெருந் துறை விலங்கினேன் : அழுக்கைப் போக்கிய பெருந் துறையை விட்டு விலகிவிட்டேன். வினைக்கேடனேன் : தீவினையாகிய கேட்டையுடையேன். வைப்பு இடம் இன் றியே கலங்கினேன் : வைக்கும் இடம் இல்லாமல் அல மந்தேன்.

249. கோல மேனி வராகமே : அழகான பன்றி உருவு கொண்டவனே. கொண்டல் : மேகம். சீலம் : ஒழுக்கம். சிகாமணி : முடிமணி.

ஞால மேகரி யாக நான்உனை
நச்சி நச்சிட வந்திடும்
கால மே!உனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 249

பேதம் இல்லதொர் கற்புஅ ளித்த
பெருந்து றைப்பெரு வெள்ளமே!
ஏத மேபல பேச நீஎனை
ஏதி லார்முனம் என்செய்தாய்!
சாதல் சாதல்பொல் லாமை அற்ற
தனிச்ச ரண்சரண் ஆம்எனக்
காத லால்உனை ஓத நீவந்து
காட்டி னாய்கழுக் குன்றிலே. 250

கண்ட பத்து

கொச்சகக் கலிப்பா

இந்திரிய வயம்மயங்கி இறப்பதற்கே காரணமாய்
அந்தரமே திரிந்துபோய் அருநரகில் வீழ்வேற்குச்

249. கரியாக : சாட்சியாக நச்சி நச்சிட : மிகவும் விரும்ப. வந்திடும் காலம் : வந்தருளிய காலமானவன்.

250. பேதம் இல்லது : மாறுபாடற்றது. ஏதம் : குற்றம். ஏதிலார் : அயலார். சாதல் சாதல் : சாதல் என்பது செத்துவிடுதல். பொல்லாமை : பொல்லாங்கு. சரண் : பற்றுக்கோடு. காதல் : பேரன்பு.

கண்ட பத்து : கடவுள் நிலையைத் தில்லையில் கண்டதாகக்கூறும் பதிகம்.

251. இந்திரியம் : மெய் வாய் கண் மூக்கு செவி எனும் ஐம்பொறி. வயம் : வசப்பட்டு. அந்தரமே திரிந்து : வான வெளியிலே அலைந்து. அருநரகு : கடத்தற்கு அரிய நரகம்.

சிந்தைதனைச் தெளிவித்துச் சிவம்ஆக்கி எனை ஆண்ட
அந்தம்இலா ஆனந்தம் அணிகொள்தில்லை கண்டேனே. 251

உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்துஎன் உளம்மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட
திருத்துருத்தி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாய்அடியேன் அணிகொள்தில்லை கண்டேனே.

சாதிகுலம் பிறப்புஎன்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதம்இலி நாயேனை அல்லல்அறுத்து ஆட்கொண்டு

251. சிவம் ஆக்கி: சிவத்தோடு ஐக்கியப்படுத்தி. அந்தம் இலா ஆனந்தம்: கரைகாணா மகிழ்ச்சி. அணிகொள் தில்லை கண்டேன்: அழகுதிகழ்தில்லையம்பலத்திலே காணப் பெற்றேன்.

252. உருத் தெரியாக் காலத்தே: என் உடம்பு உருவாவதற்கு முன்னரே; அதாவது நான் கருக் கூடுவதன் முன்பே. உள்புகுந்து: என் தாயாரின் கருப்பையிலே நுழைந்து. என் உளம் மன்னி: கருவாக உருவெடுக்கும் போதே என் உள்ளத்தில் நிலைபெற்று. கருத் திருத்தி: கருவைத் திருத்தமாக்கி. ஊன்புக்கு: என் உடலின் உள்ளே போந்து. கருணையினால் ஆண்டு கொண்ட: அருள் காரணமாக அடிமையாக்கிய. திருத்துருத்தி மேயானை: திருத்துருத்தி என்னும் திருப்பதியில் எழுந்தருளி யிருப்பவனை. தித்திக்கும் சிவபதத்தை: இனிக்கின்ற அன்புத் திருவடியை. அருத்தியினால்: ஆசையினாலே. நாய் அடியேன்: நாயனைய தொண்டனாகிய நான். அணிகொள் தில்லைகண்டேனே: எழில் வாய்ந்த தில்லைச் சிற்றம்பலத்திலே கண்டேன்.

253. ஆதம் இலி: ஆதரவு இல்லாதவன். அல்லல் அறுத்து: பிறவித்துயரை வெட்டி.

பேதைகுணம் பிறர்உருவம் யான்எனதுஎன் உரைமாய்த்துக்
கோதுஇல் அமுதுஆனானைக் குலாவுதில்லை கண்டேனே. 253

பிறவிதனை அறமாற்றிப் பிணிமூப்புஎன்ற இவைஇரண்டும்
உறவினொடும் ஒழியச்சென்று உலகுஉடைய ஒருமுதலைச்
செறிபொழில்சூழ் தில்லைநகர்த் திருச்சிற்றம் பலம்மன்னி
மறையவரும் வானவரும் வணங்கிடநான் கண்டேனே.

பத்திமையும் பரிசும்இலாப் பசுபாசம் அறுத்துஅருளிப்
பித்தன்இவன் எனஎன்னை ஆக்குவித்துப் போகாமே
சித்தம்எனும் திண்கயிற்றால் திருப்பாதம் கட்டுவித்த
வித்தகனார் விளையாடல் விளங்குதில்லை கண்டேனே. 255

253. பேதை குணம்: அறியாமைக் குணம். பிறர் உருவம்: பிறர் வடிவம். யான் எனது என் உரைமாய்த்து: யான் என்னுடையது என்ற செருக்குப் பேச்சைக் கொன்று. கோது இல்: குற்றமற்ற. குலாவுதில்லை: விளங்கும் தில்லை.

254. அறமாற்றி: அடியோடு அழித்து. பிணி: நோய். மூப்பு: முதிர்ச்சி. உறவினொடும் ஒழிய: அவற்றோடு தொடர்புடைய பிறவற்றோடும் நீங்க. உலகு உடைய ஒரு முதல்: உலகம் முழுவதையும் தன்னதாக உடைய ஒப்பற்ற முழுமுதல். செறி பொழில் சூழ்: அடர்ந்த சோலை சூழ்ந்த. மன்னி: அடைந்து. மறையவர்: நூல் வல்லவர். வானவர்: மேலோர்.

255. பத்திமை: அன்புடைமை. பரிசு: நல்ல குணம். இலா: இல்லாத. பசு: தன் நினைவு. பாசம்: பிணிப்பு. போகாமே: நீங்கிப் போய்விடாமல். சித்தம்: நினைப்பு. வித்தகனார்: அறிஞர்.

பிரார்த்தனைப் பத்து

அறுசீர் விருத்தம்

அருள் ஆர் அமுதப் பெருங்கடல்வாய்
அடியார் எல்லாம் புக்குஅழுந்த
இருள் ஆர் ஆக்கை இதுபொறுத்தே
எய்த்தேன் கண்டாய் எம்மானே!
மருள் ஆர் மனத்தோர் உன்மத்தன்
வருமால் என்றுஇங்கு எனைக்கண்டார்
வெருளா வண்ணம் மெய்அன்பை
உடையாய் பெறநான் வேண்டுமே. 256

கடலே அனைய ஆனந்தம்
கண்டார் எல்லாம் கவர்ந்துஉண்ண
இடரே பெருக்கி ஏசற்றுஇங்கு
இருத்தல் அழகோ அடிநாயேன்;
உடையாய் நீயே அருளுதிஎன்று
உணர்த்தாது ஒழிந்தே கழிந்துஒழிந்தேன்
சுடர்ஆர் அருளால் இருள்நீங்கச்
சோதி இனித்தான் துணியாயே. 257

பிரார்த்தனைப் பத்து: வேண்டுதலாக் கூறும் பதிகம்.

256. கடல்வாய்: கடலினிடத்து. இருள் ஆர் ஆக்கை: அறியாமை நிரம்பிய உடல். பொறுத்தே: சுமந்தே. எய்த்தேன்: இளைத்துப்போனேன். மருள் ஆர்மனத்து: மருட்சியான மனத்தோடு. உன்மத்தன்: பித்தன். வரும்: வருகின்றான். வெருளாவண்ணம்: பயப்படாதபடி.

257. இடர்: துன்பம். ஏசற்று: வருத்தமடைந்து.

குழைத்த பத்து

அறுசீர் விருத்தம்

குழைத்தால் பண்டைக் கொடுவினைநோய்
காவாய்! உடையாய்! கொடுவினையேன்
உழைத்தால் உறுதி உண்டோதான்
உமையாள் கணவா! எனைஆள்வாய்!
பிழைத்தால் பொறுக்க வேண்டாவோ
பிறைசேர் சடையாய்! முறையோஎன்று
அழைத்தால் அருளாது ஒழிவதே
அம்மானே!நின் அடியேற்கே. 258

வேண்டத் தக்கது அறிவோய்நீ
வேண்ட முழுதும் தருவோய்நீ
வேண்டும் அயன்மாற்கு அரியோய்நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயாது அருள்செய்தாய்
யானும் அதுவே வேண்டின்அல்லால்
வேண்டும் பரிசுஒன்று உண்டுஎன்னில்
அதுவும் உன்தன் விருப்புஅன்றே. 259

குழைத்த பத்து: இறையை இளகுவிக்கச் செய்யும் பதிகம்.

258. குழைத்தால்: வாட்டினால். காவாய்: காப்பாற்றுவாயாக. பிறை: இளந்திங்கள். ஒழிவதே: போவது சரியா.

259. வேண்டும்: விரும்பும். வேண்டி: விரும்பி: வேண்டின் அல்லால்: வேண்டுவதல்லாமல். பரிசு: வெகுமதி.

அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் ! என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ ?
இன்றுஓர் இடையூறு எனக்குஉண்டோ ?
எண்தோள் முக்கண் எம்மானே !
நன்றே செய்வாய் ! பிழைசெய்வாய் !
நானோ இதற்கு நாயகமே. 260

நாயில் கடையாம் நாயேனை
நயந்து நீயே ஆட்கொண்டாய் !
மாயப் பிறவி உன்வசமே
வைத்திட்டு இருக்கும் அதுஅன்றி
ஆயக் கடவேன் நானோதான் ?
என்ன தோஇங்கு அதிகாரம் ?
காயத்து இடுவாய் ! உன்னுடைய
கழற்கீழ் வைப்பாய் ! கண்நுதலே. 261

260. நன்றே செய்வாய் : நல்லதுசெய்தாலும் செய்க. பிழைசெய்வாய் : தவறு செய்பினும் செய்க. நானோ இதற்கு நாயகமே : தலைமை என்னுடையதல்லவே.

261. கடையாம் : கடைப்பட்ட. நாயேனை : நாய்த் தன்மையுடைய என்னை. நயந்து நீயே : நீயாகவே விரும்பி. மாயப்பிறவி : வஞ்சகப் பிறப்பு. வைத்திட்டு : ஒப்புவித்து. அது அன்றி : அதைத்தவிர. ஆயக்கடவேன் : ஆராயும் கடப்பாடுடையவன். நானேயோ : நானா. என்னதோ இங்கு அதிகாரம் : அதிகாரம் என்னுடையதா. காயம் : உடம்பு. கண்ணுதல் : நெற்றிக்கண் படைத்தவன்.

கண் ஆர் நுதலோய்! கழல்இணைகள்
கண்டேன் கண்கள் களிகூர
எண்ணாது இரவும் பகலும்நான்
அவையே எண்ணும் அதுஅல்லால்
மண்மேல் யாக்கை விடும்ஆறும்
வந்துஉன் கழற்கே புகும்ஆறும்
அண்ணா! எண்ணக் கடவேனோ?
அடிமை சால அழகுஉடைத்தே! 262

அச்சப் பத்து

அறுசீர் விருத்தம்

வன்புலால் வேலும் அஞ்சேன்!
வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்!
என்புஎலாம் உருக நோக்கி
அம்பலத்து ஆடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி
இனிது அருள் பருக மாட்டா
அன்புஇலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சும் ஆறே! 263

262. கண் ஆர் நுதல்: கண் உடைய நெற்றி. அவையே எண்ணும் அது அல்லால்: அத் திருப்பாதங்களைக் கருதும் அந்த வினை தவிர.

அச்சப் பத்து: சில பொருள்கட்கு அஞ்சமாட்டேன் என்றும் வேறு சிலவற்றிற்கு அஞ்சுவேன் எனவும் கூறும் பதிகம்.

263. வன்புலால் வேலும் அஞ்சேன்: புலால் கமழும் வலிய வேலாயுதத்துக்கும் பயப்படமாட்டேன். வளைக்கையார்: வளையல்பூண்ட கையையுடைய நங்கைமார். என்பொலாமணி: துவாரம் போடாத என்னுடைய ரத்தினமாகிய அம்பலக் கூத்தன். அஞ்சும் ஆறே: பயப்படும் வழியுடையதாகும்.

கிளிஅனார் கிளவி அஞ்சேன்!
அவர்கிறி முறுவல் அஞ்சேன்!
வெளியநீறு ஆடும் மேனி
வேதியன் பாதம் நண்ணித்
துளிஉலாம் கண்ணர் ஆகித்
தொழுதுஅழுது உள்ளம் நெக்குஇங்கு
அளியிலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சும் ஆறே! 264

வாள்உலாம் எரியும் அஞ்சேன்!
வரைபுரண் டிடினும் அஞ்சேன்!
தோள்உலாம் நீற்றன் ஏற்றன்
சொல்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைகள் ஏத்தித்
தடமலர் புனைந்து நையும்
ஆள்அலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சும் ஆறே! 265

264. கிளவி : பேச்சு. கிறி முறுவல்: பொய்ச் சிரிப்பு. வெளிய நீறு ஆடும் மேனி வேதியன் : வெண் நீறு பூசிய மறையோன். துளி : நீர்த்திவலை. அளி: கருணை. கண்டால் : பார்த்தால். அம்ம : ஐயோ.

265. வாள் உலாம் எரி: ஒளிவிட்டு எரியும் பெருந்தீ. வரை: மலை. ஏற்றன்: காளை யேறுபவன். சொல்பதம் கடந்த அப்பன் : சொல்லும் பதவியும் மீறிய தந்தை. தாள தாமரைகள். தாமரை போன்ற தாள்கள். புனைந்து: சூடி. நையும்: உருகும்.

தறிசெறி களிறும் அஞ்சேன்!
தழல்விழி உழுவை அஞ்சேன்!
வெறிகமழ் சடையன் அப்பன்
விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்கள் ஏத்திச்
சிறந்துஇனிது இருக்க மாட்டா
அறிவுஇலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சும் ஆறே! 266

கோள்நிலா வாளி அஞ்சேன்!
கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்!
நீள்நிலா அணியி னானை
நினைந்து நைந்து உருகி நெக்கு
வாள்நிலாங் கண்கள் சோர
வாழ்த்திநின்று ஏத்த மாட்டா
ஆண்அலா தவரைக் கண்டால்
அம்மநாம் அஞ்சும் ஆறே! 267

266. தறிசெறிகளிறு: கட்டுத்தறியை முறிக்கும் யானை. தழல்விழி உழுவை: நெருப்பைக் கக்கும் கண்களை உடைய புலி. வெறி கமழ் சடை: தேன் மணக்கும் சடை.

267. கோள் நிலா வாளி: கொலைத்தன்மை நிலவிய அம்பு. கூற்றுவன் சீற்றம்: எமனுடைய கோபம். வாள் நிலாங்கண்கள் சோர: ஒளி பொருந்திய விழிகளில் நீர் வடிய. வாழ்த்தி நின்று ஏத்தமாட்டா: வாழ்த்துப் பாடி நின்று வணங்க முடியாத.

திருப் பாண்டிப் பதிகம்

கட்டளைக் கலித்துறை

நீர்இன்ப வெள்ளத்துள் நீந்திக்
குளிக்கின்ற நெஞ்சம்கொண்டீர்
பார்இன்ப வெள்ளம் கொளப்பரி
மேற்கொண்ட பாண்டியனார்
ஓர்இன்ப வெள்ளத்து உருக்கொண்டு
தொண்டரை உள்ளங்கொண்டார்
பேர்இன்ப வெள்ளத்துள் பெய்கழ
லேசென்று பேணுமினே! 268

காலம்உண் டாகவே காதல்செய்து
உய்மின் கருதஅரிய
ஞாலம்உண் டானொடு நான்முகன்
வானவர் நண்ணஅரிய

திருப்பாண்டிப் பதிகம்: தென்பாண்டி நாட்டுச் சிவனைப்பற்றிய பதிகம்.

268. இன்ப நீர் வெள்ளம் எனமாற்றுக. நெஞ்சம் கொண்டீர்: மனம் கொண்டவர்களே. பார்: உலகம். பரிமேல்கொண்ட பாண்டியனார்: குதிரை மீது இவர்ந்து வந்த பாண்டியனாராகிய கடவுள். பேணுமின்: வழிபாடு செய்யுங்கள்.

269. காலம் உண்டாகவே: காலம் இட்டியிருக்கும் போதே. காதல் செய்து உய்மின்: அன்பு செய்து பிழையுங்கள். ஞாலம் உண்டான்: திருமால். நான்முகன்: பிரமா. நண் அரிய: நெருங்க முடியாத.

ஆலம்உண் டான்எங்கள் பாண்டிப்
பிரான்தன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின்
ருன்வந்து முந்துமினே. 269

அழிவுஇன்றி நின்றதுஓர் ஆனந்த
வெள்ளத்து இடைஅழுத்திக்
கழிவுஇல் கருணையைக் காட்டிக்
கடிய வினைஅகற்றிப்
பழமலம் பற்றுஅறுத்து ஆண்டவன்
பாண்டிப் பெரும்பதமே
முழுதுஉல குந்தரு வான்கொடை
யேசென்று முந்துமினே. 270

269. ஆலம்: நஞ்சு. மூலபண்டாரம்: ஆதிப்பொக்கிஷம். தக்க சமயத்துக்கு உதவுவதற்காகத் திரட்டி ஒதுக்கி வைக்கப்பட்ட நிதிக்குவியல்; அதுதான் பேரின்பப் பொருள். வழங்குகின்ருன். வாரிக் கொடுக்கின்ருன். முந்துமின்: விரைந்து முற்படுங்கள்.

270. அழுத்தி: அமுக்கி. கழிவு இல்: நீக்கம்பெருத. கடியவினை: கொடுமையான வினை. பாண்டிப்பெரும்பதமே: பாண்டி நாட்டுப் பெரும்பதவி மாத்திரமன்றி. முழுது உலகும் தருவான் கொடையே: எல்லா உலகத்தையும் தானமாக வழங்குவான்.

பிடித்த பத்து

எழுசீர் விருத்தம்

உம்பர்கட்கு அரசே! ஒழிவுஅற நிறைந்த
யோகமே! ஊற்றையேன் தனக்கு
வம்புஎனப் பழுத்துஎன் குடிமுழுது ஆண்டு
வாழ்வுஅற வாழ்வித்த மருந்தே!
செம்பொருள் துணிவே! சீர்உடைக் கழலே!
செல்வமே! சிவபெரு மானே!
எம்பொருட்டு உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்!
எங்குஎழுந்து அருளுவது இனியே! 271

அம்மையே! அப்பா! ஒப்புஇலா மணியே!
அன்பினில் விளைந்தஆர் அமுதே!
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே! சிவபெரு மானே!

பிடித்த பத்து: கடவுளைப் பிடித்துவிட்டதாகக்கூறும் பதிகம்.

271. ஒழிவு அறநிறைந்த: நீக்கம் இல்லாது நிறைந்த. யோகம்: மேலான பொருள். ஊற்றையேன்: அழுக்குடையவன். வம்பு: புதுமை. வாழ்வு அற வாழ்வித்த: இவ்வாழ்வு நீங்கச்செய்து பேரின்ப வாழ்வு தந்த. செம்பொருள் துணிவு: செவ்விய நூல்களின் பொருள் முடிவு. சீர் உடைக்கழலே: சிறந்த திருவடிகளை உடையவனே. எம்பொருட்டு: என்போலியர் பொருட்டாக. சிக்கெனப் பிடித்தேன்: உறுதியாகப் பிடித்துக்கொண்டேன்.

272. பொழுதினைச் சுருக்கும்: காலத்தை வீணாகக் கழிக்கும். புழுத்தலைப் புலையனேன்: புழுத்த தலையை யுடைய இழிகுணமுடையேன்.

இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 272

ஒப்புஉனக்கு இல்லா ஒருவனே! அடியேன்
உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளியே!
மெய்ப்பதம் அறியா வீறுஇலி யேற்கு
விழுமியது அளித்ததுஓர் அன்பே!
செப்புதற்கு அரிய செழும்சுடர் மூர்த்தி!
செல்வமே! சிவபெரு மானே!
எய்ப்புஇடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 273

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள்ஒளி பெருக்கி
உலப்புஇலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த
செல்வமே! சிவபெரு மானே!

272. இம்மையே: இப்பிறப்பிலேயே.

273. ஒளிர்கின்ற ஒளியே: பிரகாசிக்கின்ற விளக்கே. மெய்ப்பதம்: உண்மை நிலை. வீறுஇலியேற்கு: சிறப்பற்ற எனக்கு. விழுமியது. அளித்தது: உயர்ந்த பொருளைக் கொடுத்ததாகிய. செப்புதற்கு: சொல்லுதற்கு செழும் சுடர் மூர்த்தி: செழுமையான ஒளி வடிவினனே. எய்ப்பு இடத்து: நான் இளைத்தபோது.

274. பால் நினைந்து ஊட்டும் தாயினும்: குழந்தையின் தேவை அறிந்து தானே நினைந்து பாலைப் பிள்ளைக்கு ஊட்டுகின்ற அன்னையைக் காட்டிலும். சாலப் பரிந்து: மிகவும் இரங்கி. பாவியேனுடைய. பாவங்களின் இருப்பிடமான என்னுடைய. ஊனினை: உடம்பை. உலப்பு இலா: வற்றுதல் இல்லாத. ஆனந்தமாய தேனினைச் சொரிந்து: பேரின்பத் தேனைப் பொழிந்து. புறம் புறம் திரிந்த: இடங்கள் தோறும் உடன் திரிந்த.

யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 274

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்நெடும் கோயிலாப் புகுந்துஎன்
என்புஎலாம் உருக்கி எளியையாய் ஆண்ட
ஈசனே! மாசுஇலா மணியே!
துன்பமே பிறப்பே இறப்பொடு மயக்காம்
தொடக்குஎலாம் அறுத்தநற் சோதீ!
இன்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்குஎழுந்து அருளுவது இனியே. 275

திரு ஏசறவு

கொச்சகக் கலிப்பா

இரும்புதரு மனத்தேனை ஈர்த்துஈர்த்துஎன் என்புஉருக்கிக்
கரும்புதரு சுவைஎனக்குக் காட்டினைஉன் கழல்இணைகள்;

274. தொடர்ந்து: இடைவிடாது.

275. புன்புலால் யாக்கை: இழிந்த தசையாலாகிய இவ் உடம்பு. புரை புரை கனிய: மயிர்த்துவாரங்கள் தோறும் நெகிழ்ச்சியடைய. பொன் நெடுங் கோயிலாப் புகுந்து: பொன்னாலாகிய பெரிய கோயிலாகக் கருதி அதனிடத்து நுழைந்து. என்பு எலாம் உருக்கி: எலும்பை யெல்லாம் உருகச் செய்து. எளியையாய் ஆண்ட: எளிமையாய் வெளிவந்து ஆட்கொண்ட. மாசு இலா மணியே: பழுது இல்லாத மாணிக்கமே. மயக்கு: அறியாமை. தொடக்கு: கட்டு. இன்பமே: பேரின்பமே.

திருஏசறவு: இறைவனைத் துதித்தல். ஏசறவு: வணக்கம்.

276. இரும்புதரு மனத்தேனை: இரும்பைஒத்த கடிய மனத்தினைப்பெற்ற என்னை. ஈர்த்து ஈர்த்து: இழுத்து இழுத்து. கழல் இணைகள்: இரண்டுபாதங்கள்.

ஒருங்குதிரை உலவுசடை உடையானே! நரிகள்எலாம்
பெருங்குதிரை ஆக்கியவாறு அன்றேஉன் பேர்அருளே!

கற்றுஅறியேன் கலைஞானம் கசிந்துஉருகேன் ஆயிடினும்
மற்றுஅறியேன் பிறதெய்வம் வாக்குஇயலால் வார்கழல்வந்து
உற்றுஇறுமாந்து இருந்தேன்எம் பெருமானே! அடியேற்குப்
பொற்றவிசு நாய்க்குஇடுமாறு அன்றேநின் பொன்அருளே! 277

பஞ்சுஆய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நஞ்சுஆய துயர்கூர நடுங்குவேன்; நின்அருளால்
உய்ஞ்சேன்எம் பெருமானே! உடையானே! அடியேனை
அஞ்சேல்என்று ஆண்டவாறு அன்றேஅம்பலத்துஅமுதே!

மருவஇனிய மலர்ப்பாதம் மனத்தில்வளர்ந்து உள்உருகத்
தெருவுதொறும் மிகஅலறிச் சிவபெருமான் என்றுஏத்திப்
பருகியநின் பரங்கருணைத் தடங்கடலில் படிவாம்ஆறு
அருள்எனக்குஇங்கு இடைமருதே இடங்கொண்ட அம்மானே!

276. ஒருங்கு: ஒருசேர அடங்கிய. திரை: அலையுடைய கங்கை.

277. கலைஞானம்: நூல்அறிவு. பிறதெய்வம்: வேறு கடவுள். வாக்குஇயலால்: நீ அருளிய வார்த்தையின் இயல்பால். பொன்தவிசுநாய்க்கு இடுமாறு அன்றே: பொன்னால் செய்த இருக்கையை நாய்க்குக் கொடுத்தது போன்றதல்லவா.

278. பஞ்சுஆய: பஞ்சுபோன்ற. நஞ்சுஆயதுயர்: நஞ்சனையதுன்பம். உய்ஞ்சேன்: பிழைத்தேன். அஞ்சேல்: பயப்படாதே.

279. மருவஇனிய: அடைய இன்பம் பயக்கும். தெருவுதொறும் மிகஅலறி: வீதிகள் தோறும் பேரிரைச்சல் இட்டு. பருகிய: பக்தர்கள் குடித்த. பரம்கருணைத் தடங்கடலில்: மேலான அருட் பெருங்கடலிலே. படிவாம் ஆறு அருள் எனக்கு இங்கு: இம்மையிலேயே நான்மூழ்கும் விதத்தைத்தா. இடைமருது: திருவிடை மருதூர்.

நானேயோ தவம்செய்தேன் சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமும்ஆய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானேவந்து எனதுஉள்ளம் புகுந்துஅடியேற்கு அருள்செய்தான்
ஊன்ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்துஅன்றே வெறுத்திடவே! 280

திருப் புலம்பல்

கொச்சகக் கலிப்பா

பூங்கமலத்து அயனொடுமால் அறியாத நெறியானே!
கோங்குஅலர்சேர் குவிமுலையாள் கூறா!வெண் நீறுஆடீ!
ஓங்குஎயில்சூழ் திருவாரூர் உடையானே! அடியேன்நின்
பூங்கழல்கள் அவைஅல்லாது எவையாதும் புகழேனே. 281

சடையானே! தழல்ஆடீ! தயங்குமூ இலைச்சூலப்
படையானே! பரஞ்சோதீ! பசுபதீ! மழவெள்ளை

280. நானேயோ: நானோ. சிவாயநம எனப் பெற்றேன்: சிவாயநம என்ற ஐந்தெழுத்து ஓதும் பாக்கியம் பெற்றேன். ஊன் ஆரும் உயிர்வாழ்க்கை ஒறுத்து: ஊன் உடம்பில் வாழும் உயிர் வாழ்க்கையைக் கண்டித்து. வெறுத்திட: வெறுத்துத் தள்ளும்படி.

திருப்புலம்பல்: அன்பின் மிகுதியால் புலம்புதல்.

281. பூ கமலத்து அயன்: தாமரை மலர் வாழ் பிரமன். நெறி: வழி. கோங்கு அலர் சேர்: கோங்கு மலரை ஒத்த. குவி: கூம்பிய. கூறா: பங்கினனே. ஓங்குஎயில்: உயர்ந்த மதில். எவை: எவற்றையும். யாதும்: கொஞ்சமும்.

282. தழல் ஆடி: சுடுகாட்டு நெருப்பில் ஆடுகின்றவன். தயங்கும்: விளங்கும். மூ இலைச் சூலப்படை: மூன்று இலைவடிவமான சூலாயுதம். பரம்சோதி: மேலான ஒளிவடிவினன். பசுபதீ: உயிர்களுக்குத் தலைவனே. மழ: இளமையான. வெள்ளைவிடையானே: வெள்ளைக்காளை ஏறுபவனே.

விடையானே! விரிபொழில்சூழ் பெருந்துறையாய்! அடியேன்நான்
உடையானே! உனைஅல்லாது உறுதுணைமற்று அறிகிலேனே

உற்றாரை யான்வேண்டேன்! ஊர்வேண்டேன்! பேர்வேண்டேன்!
கற்றாரை யான்வேண்டேன்! கற்பனவும் இனிஅமையும்!
குற்றாலத்து அமர்ந்துஉறையும் கூத்தா! உன் குரைகழற்கே
கற்றுஆவின் மனம்போலக் கசிந்துஉருக வேண்டுவனே!

அற்புதப் பத்து

அறுசீர் விருத்தம்

வணங்கும் இப்பிறப்பு இறப்புஇவை
நினையாது மங்கையர் தம்மோடும்
பிணைந்து வாய்இதழ்ப் பெருவெள்ளத்து
அழுந்திநான் பித்தனாய்த் திரிவேனைக்

282. விரிபொழில்: பரவியசோலை. உறுதுணை: உற்றதுணை.

283. உற்றார்: உறவினர். வேண்டேன்: விரும்பேன். அமையும்: போதும். கூத்தா: நடராஜா. கற்றுஆ: கன்றை உடைய பசு.

அற்புதப் பத்து: அற்புதம் அறியேனே எனப் பாடும் பதிகம்.

284. வணங்கும் இப்பிறப்பு இறப்பு: சுற்றிச் சுற்றி வரும் இந்தப் பிறப்பும் இறப்பும். பிணைந்து: அணைந்து. வாய் இதழ்ப் பெருவெள்ளத்து அழுந்தி: வாய்உதட்டில் ஊறும் நீர்ப்பெருக்கில் ஆழ்ந்து.

குணங்க ளுங்குறி களும்இலாக்
குணக்கடல் கோமளத் தொடும்கூடி
அணைந்து வந்துஎனை ஆண்டுகொண்டு
அருளிய அற்புதம் அறியேனே! 284

செறியும் இப்பிறப்பு இறப்புஇவை
நினையாது செறிகுழ லார்செய்யும்
கிறியும் கீழ்மையும் கெண்டையம்
கண்களும் உன்னியே கிடப்பேனை
இறைவன் எம்பிரான் எல்லைஇல்
லாததன் இணைமலர்க் கழல்காட்டி
அறிவு தந்துஎனை ஆண்டுகொண்டு
அருளிய அற்புதம் அறியேனே. 285

284. குணங்களும் குறிகளும் இலாக் குணக்கடல்: குணங்களையும் உருவங்களையும் கடந்த அருட் பண்புக் கடலாகிய சிவபெருமான். கோமளத்தொடும் கூடிவந்து: இளமைத்தாயாகிய உமையொடு பொருந்திவந்து அணைந்து எனை: என்னைச்சேர்ந்து. அற்புதம்: செயற் கருஞ்செயல். அறியேனே: என்னால் அறிய முடிய வில்லையே.

285. செறிதல்: நெருங்குதல். குழலார்: கூந்தல் அழகிகள். கிறி: பொய்ச் செய்கை. கெண்டை அம்கண் கள்: கெண்டைமீன் போன்ற அழகிய விழிகள். உன்னி: நினைந்து.

திரு வெண்பா

நேரிசை வெண்பா

வெய்ய வினைஇரண்டும் வெந்துஅகல மெய்உருகிப்
பொய்யும் பொடிஆகாது என்செய்கேன்—செய்ய
திருஆர் பெருந்துறையான் தேன்உந்து செந்தீ
மருவாது இருந்தேன் மனத்து. 286

செய்த பிழைஅறியேன் சேவடியே கைதொழுதே
உய்யும் வகையின் உயிர்ப்புஅறியேன்—வையத்
திருந்துஉறையுள்வேல்மடுத்துஎன் சிந்தனைக்கே கோத்தான்
பெருந்துறையில் மேய பிரான். 287

திருவெண்பா : அழகு சுமந்த வெண்பா.

286. வெய்ய வினை இரண்டு: கொடிய நல்வினை தீவினை. வெந்து அகல : வெந்து ஒழிய. மெய் உருகி : உடம்பு உருகப்பெற்று. பொய் : பொய் வாழ்வு. பொடியாகாது : நெருப்பில் வெந்த தூளாகாமல். செய்ய திரு ஆர் : செவ்விய திருமகள் வீற்றிருக்கும். தேன் உந்து செந்தீ : தேனைப் பொழிகின்ற செஞ்சுடர். மருவுதல் : பொருந்துதல்.

287. செய்த பிழை அறியேன் : நான் செய்த தவறு இன்னது எனத் தெரிந்திலேன். கை தொழுது உய்யும் : கை தொழுது கடைத்தேறும். உயிர்ப்பு : உயிர்த்தன்மை. வையம் : இவ் உலகில். திருந்து உறையுள் வேல் மடுத்து : திருத்தமான உறையிலிருந்து வேலாயுதத்தை எடுத்து. என் சிந்தனைக்கே கோத்தான் : என் உள்ளத்தைக் குறிவைத்துப் பாயுமாறு எய்து விட்டான்.

முன்னை வினை இரண்டும் வேர்அறுத்து முன்நின்றான்
பின்னைப் பிறப்புஅறுக்கும் பேராளன் — தென்னன்
பெருந்துறையில் மேய பெருங்கருணை யாளன்
வரும்துயரம் தீர்க்கும் மருந்து. 288

யாவர்க்கும் மேலாம் அளவுஇலாச் சீர்உடையான்
யாவர்க்கும் கீழ்ஆம் அடியேனை — யாவரும்
பெற்றுஅறியா இன்பத்துள் வைத்தாய்க்குஎன் எம்பெருமான்
மற்றுஅறியேன் செய்யும் வகை. 289

இன்பம் பெருக்கி இருள்அகற்றி எஞ்ஞான்றும்
துன்பம் தொடர்வுஅறுத்துச் சோதியாய்—அன்புஅமைத்துச்
சீர்ஆர் பெருந்துறையான் என்உடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உவந்து. 290

288. முன்னை வினை : பழ வினை. வேர் அறுத்து : வேருடன் தொலைத்து. முன் : என் எதிரில். பின்னைப் பிறப்பு : இனி வரும் பிறவி. பேராளன் : பெருந்தலைவன். வரும் துயரம் : இப் பிறவியில் வரும் இடுக்கண். மருந்து : நோய் தீர்க்கும் மருந்தாக இருக்கின்றான்.

289. யாவரும் : எவரும். இன்பத்துள் : இன்ப வாழ்விலே. வைத்தாய்க்கு : இருத்திய உனக்கு. செய்யும் வகை : கைம்மாறு செய்யும் விதம்.

290. பெருக்கி : பெருகச் செய்து. எஞ்ஞான்றும்: எக்காலத்தும். தொடர்வு : பற்றுதலை. அமைத்து : பொருத்தி. சிந்தை : மனம். ஊராக : இருக்கும் இடமாக. உவந்து : விரும்பி.

பண்டாய நான்மறை

நேரிசை வெண்பா

வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துஉலகம் ஏத்தத் தகுவாரும்—சூழ்ந்து அமரர்
சென்றுஇறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றுஇறைஞ்சி ஏத்தும் நமர். 291

காணும் கரணங்கள் எல்லாம்பேர் இன்பம்எனப்
பேணும் அடியார் பிறப்புஅகலக்—காணும்
பெரியானை நெஞ்சே! பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு. 292

ஆனந்த மாலை

அறுசீர் விருத்தம்

சீலம் இன்றி நோன்புஇன்றிச்
செறிவே இன்றி அறிவுஇன்றித்
தோலின் பாவைக் கூத்துஆட்டாய்ச்
சுழன்று விழுந்து கிடப்பேனை

பண்டாய நான் மறை: "பண்டாய நான் மறை" என்று தொடங்கும் வெண்பாவை முதலாகக் கொண்ட பகுதி.

291. மாய்த்தல்: கொல்லுதல். தாழ்ந்து: வணங்கி. தகுவார்: தகுதிபெற்றவர். நன்று: நன்ருக. நமர்: நம்மவர்.

292. காணும்: அறிதற்குரிய. கரணங்கள்: கரும்கள். பேணும்: போற்றும். அகல: நீங்க. காணுரப் செய்யும். பிரியான்: நீங்காது உறைபவன். வாய் ஆவி பேசு: வாய் கொண்டமட்டும் வாழ்த்து.

ஆனந்த மாலை: மகிழ்ச்சி வரிசை.

293. சீலம்: ஒழுக்கம். நோன்பு: விரதம். செறிவு: அன்பு.

மாலும் காட்டி வழிகாட்டி
வாரா உலக நெறியேறக்
கோலம் காட்டி ஆண்டானைக்
கொடியேன் என்றோ கூடுவதே. 293

கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்!
கேடுஇ லாதாய் பழிகொண்டாய்!
படுவேன் படுவது எல்லாம்நான்
பட்டால் பின்னைப் பயன்என்னே!
கொடுமா நரகத்து அழுந்தாமே
காத்துஆட் கொள்ளும் குருமணியே!
நடுவாய் நில்லாது ஒழிந்தக்கால்
நன்றோ எங்கள் நாயகமே. 294

அச்சோப் பதிகம்

கலி விருத்தம்

முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்

293. மால்: தன்மீது ஆசை. வாராஉலக நெறி: வீட்டுலகப் பாதை. கோலம்: திரு உருவம். என்று: எந்நாள். கூடுவது: அடைவது.

294. கெடுமா கெடுகின்றேன்: எவ்வளவு கெட முடியுமோ அவ்வளவு கெடுகின்றேன். பழிகொண்டாய்: நான் கெடுவதால் வரும் பழியெல்லாம் உன்னைச் சேர்ந்தது. படுவேன்: துன்பப்படும்நான். கொடுமாநரகம்: கொடிய பெரிய நிரயம். நடு: நியாயம்.

அச்சோப் பதிகம்: முடிவில் "அச்சோ" எனப்பாடும் பதிகம். அச்சோ: வியப்பு.

295. முத்திநெறி: வீடுபெறும்வழி. மூர்க்கர்: கீழ் மக்கள். முயல்வேன்: முயற்சி செய்வேன். பத்திநெறி: அன்புமார்க்கம். பாறும் வண்ணம்: அழியும் படியாக.

சித்தமலம் அறுவித்துச் சிவம் ஆக்கி எனை ஆண்ட
அத்தன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

பொய்எல்லாம் மெய்என்று புணர்முலையார் போகத்தே
மையல்உறக் கடவேனை மாளாமே காத்துஅருளித்
தையல்இடம் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

பஞ்சுஆய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சுஆய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேன்நான் உடையானே அடியேனை வருகஎன்று
அஞ்சேல்என்று அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே

வெந்துவிழும் உடல்பிறவி மெய்என்று வினைபெருக்கிக்
கொந்துகுழல் கோல்வளையார் குவிமுலைமேல் வீழ்வேனைப்
பந்தம்அறுத்து எனைஆண்டு பரிசுஅறஎன் துரிசும்அறுத்து
அந்தம்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

295. சித்தமலம் அறுவித்து: மனமாசை அறுத்து. சிவம் ஆக்கி: சிவமயம் ஆக்கி. அத்தன்: தந்தை. ஆறு: வழியை. ஆர்பெறுவார்: யாரால் அடையமுடியும். அச்சோவே: இது அதிசயமேயாகும்.

296. போகத்தே: இன்பத்திலே. மையல்: மயக்கம். மாளாமே: மடிந்துபோகாமல். தையல் இடம் கொண்ட பிரான்: உமையாள் இடம் பெற்ற உடலை உடைய தலைவன்.

297. கடைக்கண்ணால்: கடைக்கண் பார்வையினால். ஆய: தோன்றிய கூர: மிகுதிப்பட. உய்ஞ்சேன் நான்: அடியேன் தப்பிப் பிழைத்தேன். வருக என்று அஞ்சேல் என்று: வா எனவும் பயப்படாதே என்றும்.

298. வெந்து விழும்: எரிந்து சாம்பலாய் விழும். மெய் என்று: உண்மை என நினைத்து. கொந்து குழல் கோல் வளையார்: பூங்கொத்து அணிந்த கூந்தலையுடைய சங்கு வளைபூண்ட நங்கைமார். வீழ்வேன்: வீழ்ந்து புரள்வேன். பந்தம்: கட்டு. பரிசு: தன்மை. துரிசு: குற்றம். அந்தம்: இறுதியான இன்பம்.

தையலார் மையலிலே தாழ்ந்துவிழக் கடவேனைப்
பையவே கொடுபோந்து பாசம்எனும் தாழ்உருவி
உய்யும்நெறி காட்டுவித்திட்டு ஓங்காரத்து உட்பொருளை
ஐயன்எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே.

செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மைநலம் அறிவித்து முதலாய முதல்வன்தாள்
நம்மையும்ஓர் பொருள்ஆக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த
அம்மைஎனக்கு அருளியவாறு ஆர்பெறுவார் அச்சோவே. 300

299. தாழ்ந்து: அமிழ்ந்து. பைய: மெதுவாக. தாழ் உருவி: முதலைக் களைந்து. ஓங்காரத்து உட்பொருள்: பிரணவத்தின் உள்ளக் கிடக்கை.

300. செம்மை நலம்: ஒழுங்கின் நயம். சிதடர்: மூடர். மும்மை மலம்: மூவகைப் பாசம். முதலாய முதல்வன்: முழுமுதலாகிய சிவன். நாய் சிவிகை ஏற்றுவித்த: நாயைப் பல்லக்கில் ஏற்றியது போல. அச்சோவே: இது ஆச்சரியமே.

திருவாசகத் தேன்

பாட்டு முதல் குறிப்பு அகராதி

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
அடர்புலனல்	36	ஆதியும் அந்தமும்	41
அடற்கரிபோல்	34	ஆமாறு உன் திருவடிக்கே	12
அண்ணாமலையான்	50	ஆயமொழிக் கிள்ளாய்	88
அதுபழச் சுவைஎன	92	ஆர்த்த பிறவித் துயர்	46
அம்பரமாம் புள்ளித் தோல்	72	இணையார் திருவடி	72
அம்பலத்தே கூத்தாடி	71	இந்திரனும் மால்அயனும்	52
அம்மையே அப்பா	131	இந்திரிய வயம் மயங்கி	120
அரிக்கும் பிரமற்கும்	68	இப்பாடே வந்து இயம்பு	87
அருணன் இந்திரன் திசை	90	இரங்கும் நமக்கு	96
அருமந்த தேவர்	68	இரந்து இரந்து உருக	100
அருளாது ஒழிந்தால்	97	இருதலைக் கொள்ளியின்	31
அருளார் அமுதப் பெரும்	123	இரும்புதரு மனத்தேனை	133
அரைசனே அன்பர்க்கு	99	இன்பம் தருவன்	84
அரைசே அறியாச் சிறியேன்	35	இன்பம் பெருக்கி	139
அல்லிக் கமலத்து அயனும்	112	இன்பால் மொழிக் கிள்ளாய்	88
அழிவு இன்றி நின்றதோர்	130	இன்று எனக்கு அருளி	101
அழுகேன் நின்பால்	26	இன்னிசை வீணையர்	91
அறிவனே அமுதே	20	ஈசனே என் எம்மானே	20
அறிவு இலாத எனை	17	ஈரம்பு கண்டிலம்	75
அறுக்கிலேன் உடல்	105	உகந்தானே அன்புடை	95
அன்பினால் அடியேன்	99	உங்கையில் பிள்ளை	50
அன்றே என்தன்	125	உடையாள் உன்தன்	94
அன்னே இவையும்	44	உணர்ந்த மா முனிவர்	99
ஆடுகின்றிலை	16	உம்பர்கட்கு அரசே	131
ஆனை அவிபோ	79	உருகிப் பெருகி	69

பாட்டு முதல்	பக்க எண்
உருத் தெரியாக் காலத்தே	121
உரை மாண்ட உள் ஒளி	77
உழை தரு நோக்கியர்	39
உற்றாரை யான் வேண்டேன்	136
உன்னற்கு அரிய திரு	80
உன்னை உகப்பன் குயிலே	84
ஊனாய் உயிராய்	57
எங்கள் நாயகனே	116
எண்ணிலேன் திருநாம	111
எந்தை ஆய் எம்பிரான்	19
எந்தை எந்தாய்	72
எம்பிரான் போற்றி	23
என்னை அப்பா	33
ஏகாசம் இட்ட	75
ஏசா நிற்பர் என்னை	96
ஏசினும் யான் உன்னை	40
ஏதம் இலா இன் சொல்	86
ஏரார் இளங் கிளியே	86
ஏர்தரும் ஏழுலகேத்த	83
ஏழைத் தொழும்பனேன்	77
ஏனையாவரும்	17
ஐய நின்னது அல்லதில்லை	24
ஒப்பு உனக்கு இல்லா	132
ஒருவனே போற்றி	24
ஒள் நித்தில நகையாய்	43
ஓயாதே உள்குவார்	54
ஓப்பு இலாதன	18
ஓர் ஒருகால் எம்பெருமான்	48
கடலே அனைய ஆனந்தம்	123
கடவுளே போற்றி	22
கடையவனேனை	29
கட்டு அறுத்து எனை	20
கண்ணஞ்சனத்தர்	81
கண்ணப்பன் ஒப்பதோர்	65
கண்ணார் நுதலோய்	126
கதி அடியேற்கு உன்	37
கமல நான்முகனும்	117
கயல் மாண்ட கண்ணி	69
கல்லா மனத்து	53
களிவந்த சிந்தையொடு	32
கள்வன் கடியன்	67
கற்போலும் நெஞ்சம்	76
கற்றறியேன் கலைஞானம்	134
கனவேயும் தேவர்கள்	68
காணும் கரணங்கள்	140
காதார் குழையாட	48
காப்பாய் படைப்பாய்	113
கார்உறு கண்ணியர்	31
காலம் உண்டாகவே	126
கிஞ்சுகவாய் அஞ்சுகமே	87
கிளியனார் கிளவி	127
கிளிவந்த மென்மொழியாள்	58
குலம் பாடி	70
குழைத்தால் பண்டை	124
குறைவு இலா நிறைவே	100
கூவின பூங்குயில்	90
கெடுவேன் கெடுமா	141
கேட்டாயோ தோழீ	53

பாட்டு முதல்	பக்க எண்
கேட்டாரும் அறியாதான்	15
கையார் வளை சிலம்ப	56
கொந்து அணவும்	85
கொம்பர் இல்லாக் கொடி	33
கொள்ளேர் பிளவு	30
கொள்ளேன் புரந்தரன்	9
கொன்றை மதியமும்	82
கோணிலா வாளி	128
கோலமேனி வராகமே	119
கோல வரைக்குடுமி	80
கோழி சிலம்ப	44
கோற்றேன் மொழி	88
சங்கம் அரற்ற	62
சங்கரா போற்றி	23
சடையானே தழலாடி	135
சாதி குலம் பிறப்பு	121
சிந்தனை நின்தனக்கு	14
சிந்தை செய்கை	25
சிரிப்பார் களிப்பார்	97
சிரிப்பிப்பன்	40
சீரார் திருவடி	74
சீரார் பவளங்கால்	77
சீலம் இன்றி	140
சுந்தர நீறு அணிந்து	59
சுருள்புரி கூழையர்	107
சூடகம் தோள்வளை	59
சூடுவேன் பூங்கொன்றை	57
செங்கண் அவன்பால்	49
செங்கண் நெடுமாலும்	51
செப்பார் முலைபங்கன்	55
செம்மை நலம்	143
செய்த பிழையறியேன்	138
செய்ய வாய்	87
செய்வதறியா	21
செழிகின்ற தீ	31
செறியும் இப்பிறப்பு	137
சோதியாய்த் தோன்றும்	103
சோலைப் பசுங்கிளியே	89
ஞாலம் இந்திரன்	105
தந்தது உன்தன்னை	103
தறிசெறி களிறும்	128
தனித்துணை நீ நிற்க	36
தனியனேன் பெரும் பிறவி	14
தன்மை பிறரால்	22
தாதாடு பூஞ்சோலை	86
தாதாய் மூவேழ்	113
தாரகை போலும்	39
திண்போர் விடையான்	73
திருமாலும் பன்றியாய்	67
திருவார் பெருந்துறை	68
தினைத்தனை உள்ளதோர்	65
தீர்த்த அன்பாய	24
துடிகொள் நேர் இடையான்	117
துண்டப் பிறையான்	55
தெங்கு உலவு சோலை	80
தென்பால் உகந்தாடும்	70
தேரை நிறுத்தி	75
தேவர்கோ அறியாத	15

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
தேனக மாமலர்	63	பரவுவார் அவர்	111
தேனுடு கொன்றை	73	பவன் எம்பிரான்	10
தேனைப் பாலை	21	பழுது இல் தொல்புகழாள்	115
தேன் பழச் சோலை	83	பாசம் பரஞ் சோதிக்கு	42
தேன்புக்க தண்பணைசூழ்	71	பாடவேண்டும் நான்	29
தையலார் மையலிலே	143	பாடிமால் புகழும்	114
தையலோர் பங்கினர்	82	பாடிற்றிலேன்	38
தோலும் துகிலும்	66	பாதாளம் ஏழினும்	45
நஞ்சமர் கண்டத்தன்	79	பாரார் விசும்புள்ளார்	52
நமச்சிவாய வாஅழ்க	1	பாரோர் விண்ணோர்	109
நல்காது ஒழியான்	98	பார் பதம் அண்டம்	102
நாடகத்தால் உன் அடியார்	11,	பாலகனார்க்கு அன்று	75
நாயிற் கடைப்பட்ட	73	பால் நினைந்து ஊட்டும்	132
நாயிற் கடையாம்	125	பிணக்கு இலாத பெருந்துறை	118
நானார் என் உள்ளம் ஆர்	64	பிறவிதனை அறமாற்றி	122
நானேயோ தவஞ்செய்தேன்	135	புகவே தகேன்	10
நித்த மணாளர்	81	புலையனேனையும்	104
நிருத்தனே நிமலா	116	புவனியிற் போய்	94
நீண்ட கரத்தர்	82	புன்புலால் யாக்கை	133
நீதியாவன யாவையும்	110	பூங்கமலத்து அயனொடு	135
நீர் இன்ப வெள்ளத்துள்	129	பூதங்கள் தோறும்	91
நெடுந்தகை நீ என்னை	32	பூவேறு கோனும்	64
பஞ்சாய அடிமடவார்...ந	134	பெருநீர் அறச்சிறு	34
பஞ்சாய அடிமடவார்...நெ	142	பெற்றது கொண்டு	34
பஞ்சின் மெல்லடியாள்	114	பேசப்பட்டேன்	26
பண் சுமந்த பாடல்	54	பேதம் இல்லதோர்	120
பத்திமையும்	122	பைங்குவளைக்கார் மலரால்	47
பந்தணை விரலாள்	115	பொதும்பு உறு தீப் போல்	35
பப்பற வீட்டிருந்து	92	பொய்யனேன் அகம்	104

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
பொய்யாய செல்வத்தே	66	முன்னை என்னுடை	111
பொய்யெல்லாம் மெய் என்று	142	முன்னைப் பழம்பொருட்கும்	45
பொருட்பற்றிச் செய்கின்ற	76	முன்னை வினை இரண்டும்	139
பொழிகின்ற துன்ப	107	மூன்றங்கு இலங்கு	78
போற்றி அருளுக	51	மெய்தான் அரும்பி	9
போற்றி என் வாழ் முதல்	89	மேலை வானவரும்	19
மருவினிய மலர்ப்பாதம்	134	மை இலங்கு நற்கண்ணி	27
மருளனேன் மனத்தை	118	மைப் பொலியும் கண்ணி	56
மலங்கினேன் கண்ணின்	119	மொய்யார் தடம் பொய்கை	46
மலையரையன் பொற்பாவை	71	யாவர்க்கும் மேலாம்	139
மாதாடு பாகத்தன்	79	யானேதும் பிறப்பு	11
மால் அறியா நான்முகனும்	43	யானே பொய்	27
மாவடு வகிரன்ன	108	வட்ட மலர்க்கொன்றை	63
மாவார வேறி	74	வணங்கத் தலைவைத்து	73
மாறி நின்று என்னை	98	வணங்கும் இப்பிறப்பு	136
மானம் அழிந்தோம்	76	வருந்துவன் நின்	11
மானே நீ நென்னலை	44	வலைத் தலை மானன்ன	37
மானேர் நோக்கி உமையாள்	21	வழங்குகின்றாய்க்கு உன்	108
மின்னிடைச் செந்துவர்	61	விளைந்தது வில்லு	74
முத்தணி கொங்கைகள்	61	வன் புலால் வேலும்	126
முத்தன்ன வெண்ணகையாய்	42	வன்னெஞ்சக் கள்வன்	66
முத்திக்கு உழன்று	69	வா இங்கே நீ	85
முத்திநெறி அறியாத	141	வாழ்கின்றாய் வாழாத	12
முந்திய முதல் நடு	93	வாழ்த்தார்களாவாரும்	140
முழுதயில் வேற்கண்ணியர்	38	வாள் உலாம் எரியும்	127
முன்னாறும் ஆதியும்	78	வாள் தடங்கண்	60
முன்னானை மூவர்க்கும்	58	வான காடரும்	28
முன்னிக் கடலைச் சுருக்கி	49	வானாகி மண்ணாகி	12
முன்னின்றாண்டாய்	95	வான் கெட்டு	69

பாட்டு முதல்	பக்க எண்	பாட்டு முதல்	பக்க எண்
வான் வந்த தேவர்களும்	53	வெந்து விழும் உடல்	142
விச்ச தின்றியே	28	வெய்ய வினை இரண்டும்	138
விச்சுக் கேடு	25	வெள்ளந் தாழ்விரி	13
விண்ணகத் தேவரும்	93	வெறுப்பனவே செய்யும்	106
விண்ணோருந் தேவர்க்கும்	55	வேண்டத் தக்கது	124
விண்ணோர் முழுமுதல்	70	வேனில் வேள் கணை	18
வினையிலே கிடந்தேனை	13	வேனில் வேள் மலர்க்கணை	12
வினையென் போல்	17	வைப்பு மாடென்றும்	110
வெஞ்சேல் அனைய	109	வையகம் எல்லாம்	60